www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புதிய அமைப்புகளுடனும்,
புதிய வீச்சுக்களுடனும்,
இயங்கிவரும்,
எமது ஸ்தாபனத்தில்

தரமான, இலக்கிய அறிவியல்
நூல்களை பெற்றுக்கொள்ளலாம்

ரகுநாதன் புத்தகசாலை

3, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தளிர்

திரள்: 2 இல: 2

வைகாசி—ஆவணி 1984

விலை ரூபா 4/-

## உள்ளே

- நிராகரிக்கப்பட்ட தலைமைத்துவம்
- விடுதலைப் போராட்டத்தில் — பணய விவகாரம்
- சாத்தியமற்ற தேசிய ஒருமைப்பாடு
- களத்தில் புலிகள்
- தான்பரீன் ஐரிஷ் விடுதலை வீரன்
- கலவரத்தால் பாதிக்கப்பட்ட பஞ்சாப்
- தோற்கடிக்கப்பட்ட மலேசிய ஆயுதப் போராட்டம்
- கண்ணீரிலிருந்து களத்திற்கு

## அட்டைப்படத்தில்

அழிக்கப்பட்ட நம் சகோதரர்கள்
இழக்கப்பட்ட நம் உரிமைகள்

## தொடர்புகட்கு

'தளிர்'
ஆசிரியர் குழு
யாழ். பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்

## அச்சிடப்பட்டது

யாழ் புனித வளன் கத்தோலிக்க அச்சகம்

## மொசாட் எஸ். ஏ. எஸ். ஸ்ரீலங்கா

"நாம் பேயுடனும் கூட்டுச்சேரத் தயார்" என அறிவித்ததன் மூலம் ஸ்ரீலங்கா ஜனாதிபதி தனது சர்வதேச பயங்கரவாதிகளுடனான நட்பை தயக்கமின்றி வெளிக்காட்டிக் கொண்டார். இலங்கையின் கடந்தகால வரலாறு ஆட்சியாளரும் சிங்கள பேரினவாதிகளும் எவரது ஆலோசனையுமின்றி சுயமாகவே ஆட்கொலையில் வல்லவர்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது. ஆயினும் அண்மையில் நிகழ்ந்த சில நாசகாரச் சம்பவங்கள் மெருகூட்டப் பட்ட தன்மையை உணர்த்துகின்றன.

பொலிசார் வெளியேறும்போது கைதிகள் எவரையும் விட்டுச் செல்வதில்லை என்பது உண்மையே. ஆனால் குண்டுகளையும் பொருத்திவிட்டுச் செல்லுவதில்லை. சுன்னாகம் பொலிஸ் நிலையத்தினுள் பொருத்தப்பட்ட குண்டு பன்னிரண்டு சகோதரர்களின் உயிர்களைக் குடித்தது.

பயங்கரவாதிகளின் தாக்குதலுக்குப் பதில் தாக்குதல் நடத்தப்படும் என அறிவிக்கப்படுகிறது. இப் பதில் தாக்குதல்கள் வீடுகள், பொருளாதார வர்த்தக நிலையங்களை அழிப்பதுடன் மட்டும் நிறுத்தப்படுவதில்லை. நன்கு திட்டமிடப்பட்டு கொலைகளைச் செய்வதிலும் நிகழ்த்தப்படுகிறது. உமையாள் புரத்தில் தேங்காய் லொறி ஒன்று வெடித்துச் சிதறி ஓட்டுனரும் கிளினரும் கொலையுண்டது தீவிரவாதிகள் இராணுவத்தைத் தாக்கும் பாணியிலானது என்பது கவனிக்கத்தக்கது. இதேபோன்று முல்லைத்தீவுக்கருகில் பாலமொன்றில் வைக்கப்பட்ட குண்டு, பொதுமக்கள் கொடுத்த தகவலின் மூலம் பின்னர் அகற்றப்பட்டது.

இவர்கள் பதில் தாக்குதல், தாக்குதல் ஏதும் நிகழாத போதும் நடத்து வார்கள் போலும். அச்சுவேலிச் சம்பவம் இதனை உணர்த்துகிறது.

அவர்களது தோற்றத்தை இச்சம்பவங்கள் மட்டும் அநாகரிகமாகக் காட்டவில்லை. இன்னுமொன்றையும் சொல்லி வைக்கலாம். வல்வெட்டித் துறையிலும் நெல்லியடியிலும் கைது செய்யப்பட்டவர்கள் பந்தோபஸ்து அமைச்சர் முன் தலைக்கு மேல் கைகூப்பி நிற்கும் படங்கள் தொலைக் காட்சியிலும் பத்திரிகைகளிலும் வெளிவந்தன. அப்படிக் கைகூப்பும் போது பதிலுக்குக் கைகூப்புவதுதான் பண்பாடு. அல்லா விட்டால் அதுதான் எவ்வளவு குரூரம்.

நாம் மரணத்துள் வாழ்கின்றோம் என்பது உண்மை. ஆனால் மரணம் எம்மை எதுவும் செய்து விடவில்லை. ஏனெனில் இலட்சிய வேங்கைகள் இறப்பதில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விடுதலைப் போராட்டத்தின் பரிணாமங்கள்

அண்மையில் கடற்படையினர் மீதான தாக்குதலினைத் தொடர்ந்து வடக்கின் பல்வேறு பகுதிகளிலும் அரசபடையின் மீதான தாக்குதலானது வெற்றிகரமாக நடந்து வருகின்றது. இந்த நிலைமையானது விடுதலைப் போராளிகளது சக்தியின் வளர்ச்சியினைக் காட்டுவதாக உள்ளது. இச் சம்பவங்கட்குப் பொறுப்பாளியான தமிழீழ விடுதலைப் புலிகள்மீது பலகாலமாக பல்வேறு இயக்கங்களாலும் பந்தோபஸ்து அமைச்சராலும் கூறிவரப்பட்ட குடாநாட்டுப் போராளிகள் எனும் கூற்றுனது பொய்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில், அரசியல் விழிப்புணர்ச்சி கூடியதும் வசதிகளும் வாய்ப்புகளும் நிறைந்ததுமான குடாநாட்டுப்பகுதியில் தமது கெரில்லாப் போராட்ட நடவடிக்கைகளை நடாத்தினர். இப்போராட்ட நடவடிக்கைகளினுல் மக்கள் மத்தியில் வேரூன்றிய இவர்கள் படிப்படியாகத் தமது நடவடிக்கைகளை இப்பகுதிக்குள் மேலும் விரிவாக்கினர். இவ்வாறு இயக்கமானது வளர்ந்து தனது போராட்டத் தளங்களை மேலும் விரிவாக்கத் தொடங்கியுள்ளது. அந்தவகையில் அண்மைக்காலங்களில் நடைபெற்ற ஒட்டிசுட்டான் பொலிஸ் நிலையத் தாக்குதல், மன்னுரில் இராணுவ வாகனங்கள் இரண்டின்மீதான தாக்குதல் என்பன அமைந்துள்ளன. இவர்களது இப்போக்கானது ஒரு பகுதியிலிருந்து பல்வேறு பகுதிகட்குப் பரவும் நிதானமான, உறுதியான முன்னேற்றத்தினைக் காட்டுவதாக உள்ளது. இயக்கம் தனது வளர்ச்சிக்கேற்பத் தனது போராட்ட நடவடிக்கைகளைப் பரவலாக்கிச் செல்வதானது மேலும் போராட்டம் பரவலாகி வெற்றியைத் தழுவும் எனும் நம்பிக்கையைத் தருவதாக உள்ளது.

மற்றும், ''தாக்கிவிட்டு ஓடி ஒழித்துக்கொள்பவர்கள் மீண்டும் அரச படைகள் தாக்க வருகையில் எதிர்த்துத் தாக்கினுல் என்ன?'' எனக் குற்றஞ்சாட்டி வரும் ஏனைய அமைப்புக்களிற்கு இச் சம்பவங்கள் விடையினைப் பகர்ந்துள்ளது. 4-8-84ல் நடைபெற்ற கடற்படை மீதான தாக்குதலைத் தொடர்ந்து அப்பிரதேசத்தின்மீது வெறியாட்டம் நடாத்த வந்த இராணுவத்தினைத் தாக்கியமையானது இளைஞர்கள் மீள தாக்கும் அளவிற்கு வளர்ந்துள்ள தன்மைக்கான அறிகுறியைக் காட்டியுள்ளது. இத்தகைய சம்பவமானது இளைஞர்களது வளர்ச்சியைப் பிரதிபலிப்பதோடு அவர்கள் தொடர்ச்சியான தற்காப்பு யுத்த முறைக்குள் காலடி எடுத்து வைத்துள்ளனர் என நிரூபிப்பதாக உள்ளது. கெரில்லா யுத்த முறையின் ஆரம்ப வடிவமான நீண்ட இடைவெளித் தாக்குதல் எனும் நிலையிலிருந்து, பல்வேறு கெரில்லாக் குழுக்களை உருவாக்கிப் பல்வேறு பிரதேசங்களிலும் நிலைகொள்ள வைத்து அப்பிரதேசங்களைத் தற்காக்கும் அளவுக்கு வளர்த்தெடுக்கும் யுத்தமுறைக்குள் இன்று இளைஞர்கள் புகுந்துள்ளனர்.

அண்மைய சம்பவங்களில் காணப்பட்ட புதிய வளர்ச்சிப்படிகளானது அரச படைகளைப் பெரிதும் நிலைகுலைய வைத்துள்ளன. கடற்படை மீதான தாக்குதலைத் தொடர்ந்து வழமைபோல் இளைஞர்கள் தாக்கமாட்டார்கள் என எதிர்பார்த்து அழிவு வேலைசெய்ய வந்த இராணுவத்தினர் மீண்டும் தாக்கப்பட்டதும் அவர்கள் பெரிதும் நிலைகுலைந்தனர். அதேசமயம் அன்று மாலை யாழ் நகரில் வைத்துக் கவச வாகனம்மீது தாக்குதல் நிகழ்ந்தமை அவர்களைக் குறித்த இடத்தில் கவனம் செலுத்தித் தாக்க முயலும் திட்டத்தினை மேலும் உடைத்தது. இதனைத் தொடர்ந்து ஒட்டிசுட்டான், மன்னுர்ப் பகுதிகளிலும் தாக்குதல் நடந்தமை இவ், ஒருபகுதிக்குள் படைகளைக் குவித்து நசுக்க முயலும் திட்டத்தினை மேலும் உடைத்தது.

இவ்வாறு அண்மைய சம்பவங்களானது அரச படைகளைக் கிலிகொள்ள வைத்தது என்பதனை, பிரதான வீதியில் உள்ள மக்கள் வங்கியில் ஆயுத அபகரிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஒரு இயக்கமானது அவ்வழியே ரோந்துவந்த இராணுவத்தினைக் கண்டதும் அதன்மீது கைக்குண்டுகளை வீசியதும் அவை பின்வாங்கிச் சென்று மீண்டும் அவ் இடத்திற்கு இளைஞர்கள் அகன்று செல்லும்வரை வராதமையும் தெட்டத்தெளிவாகக் காட்டுகின்றது. மற்றும் ஸ்ரான்லி வீதியில் வைத்து இராணுவ கவச ட்ரக்மீது எரிமருந்துகளை வீசிக் கொளுத்துகையில் அதன் முன்னும் பின்னேயும் வந்த இராணுவ வாகனங்கள் அவ்விடத்தைவிட்டு ஓடிச்சென்றமையும் இதனை மேலும் நிரூபிப்பதாக உள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நிராகரிக்கப்பட்ட தலைமைத்துவம்

ஜூலை 24—ல் தமிழர் விடுதலைக் கூட்டணியினரால் நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவிலில் உண்ணாவிரதம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இதில் 500 பேர் கலந்து கொள்வர் என கூட்டணியினர் அறிவித்திருந்த போதும் அத்தொகையில் 30% வீதத்தினரே கலந்து கொள்ள வந்திருந்தனர். ஆனால் இத்தொகை மக்களதும் இளைஞர்களதும் குறுக்கீடுகளால் படிப்படியாகக் குறுகலாயிற்று. ஸ்ரீலங்கா இனவாத அரசாங்கத்தின் கொடுமைகளை உலகுக்குக் காட்ட ஆரம்பிக்கப்பட்ட உண்ணாவிரதம் உண்மையில் கூட்டணியினரின் அரசியல் வீழ்ச்சியையே வெளிக்காட்டியது.

''எமது பிள்ளைகளின் இரத்தத்தால் இந்த மண் சிவப்பாகிறது. உங்கள் பிள்ளைகள் உயர் கல்வி கற்கின்றனர்'—இது ஒரு தாயாரின் குற்றச் சாட்டு. ''கையாள் குமாரை பேச்சு வார்த்தைக்கு அனுப்பியது உமது செட் — அப்; ஆமியை முகாமிற்கு அனுப்பி விட்டு உண்ணாவிரதம் இருப்பது இன்னோர் செட் அப்'' இது முப்பது வயதுக்காரரின் கருத்து. ''நாங்கள் இறக்கிறோம்; நீங்கள் பறக்கிறீர்கள்'' இது ஒரு இளைஞனின் ஆவேசம்,

மேற்படி உண்ணாவிரதத்தில் இளைஞர்கள் கேள்விகள் கேட்டனர். இளைஞர்கள் குழப்பியடித்தனர் என்றே பத்திரிகைகள் பலவும் எழுதின. உண்ணாவிரதம் ஆரம்பம் முதலே அங்கு நின்றவர்க்கே உண்மை தெரிய வரும். காலை பத்து மணிக்கு முதலில், கேள்விகள் கேட்டவர்களில் அநேகமானோர் வயதானவர்களாகவே இருந்தனர். பின்னரே இளைஞர்களின் ஆவேசம் அதிகரித்தது. மேலும் இக் கேள்விக் கணைகளைத் தொடுத்தவர்களில் பெண்களும் சிறுவரும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். பத்து வயதுச் சிறுவனுக்கு இருக்கும் அரசியல் விழிப்புணர்ச்சியும், பெண்களுக்கு ஏற்பட்ட அரசியல் துரோகத்தனத்தைக் கண்டு பிடிக்கும் ஆற்றலும் போராட்ட சக்திகளின் செல்வாக்கையும் அப் போராட்ட சக்திகள் மேல் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையையும் எடுத்துக் காட்டுகிறது.

கூட்டணியினருக்கு எதிராக இத்தகையதான இளைஞர்களின் கோபம் உண்ணாவிரதத்துடன் மட்டும் ஆரம்பமாகவில்லை. கடந்த உள்ளூராட்சித் தேர்தற் கூட்டமொன்றிலேயே அவர்களின் ஆவேசம் வெளிப்பட்டது'' 'நாங்கள் பத்து வருடமாக அலைகிறோம். நீங்கள் என்ன செய்து விட்டீர்கள்' என அவர்கள் கேள்வி எழுப்பினர். இன்று பொது மக்களே அவர்களுடன் இணைந்து கூட்டணியினர் மீது குற்றஞ் சாட்டுகின்றனர். சிங்கள மகா வித்தியாலயம், பௌத்த விகாரை மீது மக்கள் ஆத்திரம் எவ்வாறு வெளிப்பட்டதோ அது போன்றதான ஆத்திரமும் ஆவேசமுமே உண்ணாவிரதத்தன்று காணக் கூடியதாக இருந்தது. மக்கள் தங்களுக்கு எதிரானவரையும் அந்நியமானவரையும் இனங்கண்டு கொள்வதற்குக் காரணமாக இருப்பது அவரவர் நடவடிக்கைகளே. ஆண்டாண்டு காலம் அரசியல் வாதிகளின் கயமைத்தனத்தினால் ஏமாற்றப் பட்டு இன்று மக்கள் இளைஞர் இயக்கங்களுடன் தம்மை இணைத்துக் கொண்டுள்ளதை கூட்டணியினர் அடையாளங் காணத் தவறி விட்டனர். கடந்த ஏப்ரல் 9—ம் திகதி நடந்த தாக்குதலின் பின்னர் குறிப்பிட்ட பகுதி மக்களுக்கு வெடி குண்டுகள் விநியோகிக்கப்பட்டமையும், அதனை மக்கள் பெற்றுக் கொண்டு காத்திருந்தமையும் இலங்கைக்கு வெளியில் அச்சாகும் ஒரு பத்திரிகை தெரிவித்திருந்தது. மேலும் மக்களே அன்று வீதித் தடைகளை ஏற்படுத்தல் போன்ற போராட்ட நடவடிக்கைகளில் இறங்கியிருந்ததையும் ஆயுதப் போராட்டத்திற்கு மக்கள் தம்மைத் தயார் படுத்தியிருப்பதைக் காட்டுகிறது. இதனைக் கூட்டணியினரும் அவர்களது கும்பல்களும் உணராது தம் தன்னிச்சையான நடவடிக்கைகளைத் தொடர்ந்தால் அதுஅவர்களது அரசியற் தற்கொலையாகவே அமையும்.

'என்ன இருந்தாலும்இவ்வளவு பண்பாட்டுக் குறைவாக நடந்து கொண்டிருக்கக் கூடாது, சிறுமைத தனமான கேள்விகள் கேட்டிருக்கக் கூடாது, தமிழனின் பண்பாட்டிற்கு விரோதமானது; என்றெல்லாம் சிலர் அங்கலாய்த்தனர். இப்படியானவர்களில் ஒரு பகுதியினர் இளைஞர்களின் நடவடிக்கைகளையெல்லாம் பொறுமையுடன் நோக்குபவர்களும் அவர்களின் குறை கண்டு பிடித்து அவர்களை அரசியல் அரங்கிலிருந்து ஒதுக்கி விடத் துடிப்பவர்களுமாவர். இவர்களையிட்டு எவ்விதத்திலும் கவலைப்படத் தேவையில்லை. இன்னோர் சாரார் அமிர்தலிங்கத்தின் தலைமையை இன்னமும் நம்பியிருக்கும் பழைய தலைமுறையினர். பெரும்பாலானோர் ஆயுதப் போராட்ட முன்னெடுப்புக்களை அங்கீகரிப்பவர்களும் அவர்களது தற்தியாகத்திற்கு சிரந்தாழ்த்துபவர்களுமே. இவர்கள் அமிர்தலிங்கம் தன் வாழ்வினைத் தமிழன் நலன் கருதியே செலவிட்டார் எனவும், இன்னமும் இந்திராகாந்தி உட்பட பலரும் அவரைத் தானே அழைத்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பேச்சுக்கள் நடத்துகின்றனர் எனவும் ●ருத்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. சிங்கள இனவாத அரசின் தமிழர் விரோதப் போக்கை ஆரம்ப காலங்களிலேயே கண்டு பிடித்து போர்க் குணம் கொண்டவராக அமிர்தலிங்கம் இருந்திருக்கிறார் என்பது ஏற்றுக் கொள்ளத் தக்கதே. ஆனால் அப்படியான அமிர்தலிங்கம் இப்போது இல்லை. கட்சி அரசியலுக்கும், பாராளுமன்ற சந்தர்ப்பவாதத்திற்கும் அடிமையாகி ஊழல்களும் மோசடிகளும், சுயநலமும் கொண்ட கூட்டத்தினரதும் நண்பனாகி, கொழும்பு மேல் தட்டு வர்க்கத்தினரது நலன் பேணுபவராகவும், தமிழ் மக்களதும் அவர்களை வழி நடத்தும் மறைமுக இயக்கங்களின் நலன்களுக்கு விரோதமான போக்கைக் கடைப்பிடிப்பவராகவும், கூட்டணியினரின் சுயநலன் கருதி சமரசப் பேச்சுக்குத் தயாரானவராகவுமே இன்று காணப்படுகிறார். இரண்டாவது சபை சம்பந்தமாக பேசி முடிவெடுக்கும் ஒன்றாகவே அடுத்துக் கூடும் சர்வகட்சி மகாநாடு இருக்கும் என அரசாங்கம் அறிவித்திருக்கின்ற போது இரண்டாவது சபையை நாம் ஏற்கவில்லை எனப் பத்திரிகைகளுக்கு அறிக்கை விட்டு விட்டு சர்வகட்சி மாநாட்டிற்குப் போகத் தீர்மானித்துள்ளனர். இவர்களின் இரட்டை வேடத்திற்குக் காரணம் என்ன? உண்ணாவிரத முடிவில் ஆயுதப் போராட்டமே ஏக வழி எனக் கூறிவிட்டு பேச்சுவார்த்தைக்கு எப்படிப் போக முடியும்? அப்படிப் போனால் அவரின் கூற்று அச்சந்தர்ப்பத்திற் கூட ஒரு சந்தர்ப்பவாதமாக ஆருப்பதைத் தவிர வேறு எவ்வாறு இருக்க முடியும்? தமிழ் மக்களின் சம்மதம் இன்றியே எப்போதும் போல தன்னிச்சையான முடிவை எடுத்து விட்டு சர்வகட்சி மாநாட்டை ஆகஸ்டிலேயே முடித்து விடத் தீர்மானித்திருக்கும் அரசாங்கத்தின் திட்டம் எதனைக் காட்டுகிறது? பேச்சுவார்த்தை என்ற போர்வையில் ஸ்ரீலங்கா அரசாங்கம் தன்னை முழுவளவிலான யுத்தமொன்றிற்குத் தயார்படுத்தி விட்டதையல்லவா இது காட்டுறது. இது கூட்டணியினருக்கும் தெரியும் என்பது உண்மையாயின் கூட்டணியினர் தொடர்ந்தும் பேச்சு வார்த்தையை நீடிக்க விரும்புவது எதற்காக? 'கூட்டணியினரின் ஆதரவுடன் இயங்கும் தமிழீழத் தேசிய இராணுவம் ஏனைய இயக்கங்களுக்குச் சமதையாகப் பலம் பெறும் வரை அதற்காக 'அக்கா' போன்றவர்கள் சிங்கப்பூரிலும் ஏனைய உலக நாடுகளிலும் போதிய பணமும் ஆதரவும் திரட்டும் வரை கூட்டணியினர் பேச்சு வார்த்தைக்குச் செல்லவே முயற்சிப்பர்'' என்ற கூற்று கவனிக்கத் தக்கது.

'இந்திரா காந்தி கூட அமிர்தலிங்கத்துடன் தானே பேசுகிறார்' எனச் சிலர் கூறுகின்றனர். இக்கூற்று உண்மையாயினும் இதற்கான காரணம் உண்டு. திரு. அமிர்தலிங்கத்தை ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தைக்கு தூண்டுவதன் மூலம் தான் சுமுகமான முறையில் அரசியற் தீர்வை காண விளைவதாக சர்வதேச ரீதியாக இந்திரா காந்தி பிரசாரம் செய்ய விரும்புகிறார். மேலும் இலங்கை அரசியலில் தலையிட தனக்கு உரிமை உண்டு என்பதை வெளிப்படையாக உலகிற்கு உணர்த்த அடிக்கடி அமிர்தலிங்கத்தை சந்திப்புக்கு அழைக்கிறார். இதனை விட தற்போதைய நிலையில் தலைமறைவு இயக்கங்களுடன் இந்தியா நேரடியாகவோ உலகிற்குத் தெரியக் கூடியதாகவோ தொடர்புகள் வைத்துக் கொள்ள முடியாது. உண்மையில் அமிர்தலிங்கத்தின் சக்தி அவரைவிட இந்திரா காந்திக்கு அதிகமாகத் தெரியும். ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் போக்கை நாடி பிடித்து அறியவும், இலங்கைத் தமிழ் மக்கள் பிரச்சனையில் தன் அணுகு முறையைத் தீர்மானிக்கவும், எதிர்காலத் திட்டங்களைத் தீட்டவும் அமிர்தலிங்கம் இந்திராவுக்கு ஒரு கருவியாகப் பயன்படுகிறார். அதாவது அமிர்தலிங்கம் ஒரு அரசியல் பாலம்; அரசியற் சக்தியல்ல.

கூட்டணியினர் இவ்வுண்ணாவிரதத்தை ஆரம்பித்தற்கும் சாத்வீகப் போராட்டம் பற்றிய அறிவிப்பிற்கும் சில காரணங்கள் உண்டு. முதலாவது தற்போது அவர்களுக்கு வேறு வேலைகள் எதுவும் இல்லை. முன்பாவது பாராளுமன்றம் சென்று வந்தனர். இங்கு குறிப்பிடத் தக்க அம்சம் என்னவென்றால் தமிழர் பிரச்சனையை உலகிற்கு வெளிக்காட்டவே நாம் பாராளுமன்றம் செல்கிறோம் என்று அப்போது பாடிய பல்லவியையே இப்போதும் பாடுவது தான். (உண்மையில் ஆயுதமேந்திய இளைஞர்களின் இராணுவ நடவடிக்கையும் அவர்கள் உலக அரங்கில் மேற்கொள்ளும் பிரசாரமுமே தமிழர் பிரச்சனையையும் எதிரியின் குரூரத்தையும் வெளிப்படுத்துகிறது) இரண்டாவது குறைந்து கொண்டு வரும் மௌசுவை பின்னரும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற நப்பாசை. அரசியல செல்லாக்காசாகி விட்டதை மூடிமறைக்கும் தந்திரம். இந்த வகையில் அவர்கள் இயலாமை பல வடிவங்களில் வெளிப்படுகிறது. கூட்டணிக் கிளைகள் கூட்டணியினர் சாத்வீகப் போராட்டத்தை ஆரம்பிக்கும்படி கோரிக்கை விடுவதாக பத்திரிகைகளுக்குத் தாமே செய்தி அனுப்பும் அரசியற் திருகுதாளத்தில் ஈடுபட ஆரமபித்துள்ளனர்.

மேலும் கூட்டணியினர் இன்று பத்திரிகைகளிலும் உண்ணா விரதத்தன்றும் 'ஒற்றுமை' பற்றி வாய் கிழியப் பேசியுள்ளனர். இயக்கங்கள் எல்லாம் ஒன்றுபட வேண்டும் என கூட்டணியினர் உண்ணா விரதத்தன்று

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

### அலன் தம்பதிகள்:

# விடுதலைப் போராட்டத்தில் பணய விவகாரம்

தேசிய விடுதலைப் போராட்டங்களில் நன்கு ஒழுங்கமைக்கப்பட்டதும், பலம் பொருந்தியதுமான எதிரியின் ஆயுத அடக்குமுறைக் கெதிராக விடுதலைப் போராளிகள் தமது நடவடிக்கைகளை தந்திரோபாயமிக்கதாக அமைத்துக்கொள்வது வழமையாகும். இந்த வகையில் அண்மையில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினரால் (E. P. R. L. F.) மேற்கொள்ளப்பட்ட அமெரிக்க தம்பதியினரின் பணய நடவடிக்கை எமது விடுதலைப் போராட்டத்தில், அதன் அக, புற சூழ்நிலைகளில் எத்தகைய தாக்கங்களைஏற்படுத்தியது என ஆராய்வது எதிர்காலத்தில் எமது நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்திக் கொள்ள பெரிதும் உதவும்.

இராணுவநடவடிக்கையொன்றினை மேற்கொள்ளுமுன் அதை கையாள இருக்கும் முறை பற்றி விஞ்ஞான பூர்வமானதும்; தீர்க்கதரிசனம் மிக்கதுமான முடிவுகளை எடுத்துக்கொள்ளும் பட்சத்திலேயே அதன் அரசியல் நோக்கங்கள் எய்தப்பட முடியும். 20 அரசியல் கைதிகளை விடுதலை செய்யும்படியும், 5 கோடி ரூபா பெறுமதியான தங்கத்தை ஒப்படைக்கும் படியும் பணயம் வைத்தவர்களால் நிபந்தனை விதிக்கப்பட்ட போதிலும் தமது இலட்சியம் சர்வதேச அரங்கில் எமது பிரச்சனையை வெளிக்கொணருவதே எனக் கூறப்பட்டது. எவ்வாறுயினும் இவ்வாறான பணய நடவடிக்கையின் போது பணயம் வைக்கப்பட்டிருப்பவர்கள் தங்களது பின்னணியில் ஓர் தேசிய, சர்வதேசிய அரசியல் அழுத்தத்தை ஏற்படுத்தக் கூடியளவு முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக இருக்க வேண்டியது அவசியமாகும். ஆனால் இங்கு பணயம் வைக்கப்பட்டவர்கள் சாதாரண தொழில் நுட்பவியலாளராக இருந்தனர். இவர்கள் CIA உளவாளிகள் எனக் கூறப்பட்டமை எவ்வித ஆதாரமுமற்ற ஊகமாகவே உள்ளது. இத்தன்மையானது ''தம்பதிகளை மீட்க 5 கோடி ரூபா கொடுக்க நாம் தயாரில்லை'' என அமெரிக்க அரசு கூறவும், ''காலக்கெடுவை நீடித்து நீங்கள் சிந்தித்து திருந்திக்கொள்ள முயற்சி செய்யுங்கள்'' என பந்தோபஸ்து நையாண்டி பேசவும் காரணமானதுடன், உலக நாடுகள் எவையும் இவ்விடயத்தில் தமது கடைக்கண்பார்வையைத்தானும் அர்ப்பணிக்க தூண்டப்படவில்லை நிபந்தனைகளை நிராகரித்து இலங்கை அரசு, பயங்கரவாத பூச்சாண்டிக்கு தலை, கால் வைத்து வெளியில் காண்பிக்க அவர்கள் கொலை செய்யப்பட மாட்டார்களா என பார்த்திருந்தது. பணயம் வைக்கப்படுபவர்களின் முக்கியத்துவத்தின் அவசியத்தை உணர்த்தும் விடயத்தில் 9 மாதங்கள் நீடித்து தோல்வி கண்ட மிந்தனு விடுதலைப் போராளிகளின் சிமித்டி சில்வா கடத்தல் நடவடிக்கை எமக்கு சிறந்த படிப்பினையாகும்.

சர்வதேச அரங்கில் எமது ஆயுதப் போராட்ட வடிவத்தினை இதுவரை எந்த நாடுமே வெளிப்படையாக ஆதரிக்க முன்வராத நிலையில், எம்மேல் அநுதாபம் கொண்டுள்ள நாடுகளில் முக்கியமானதான இந்தியாவும், தமிழ்நாடும் பணயக்காரர்களால் இவ் விவகாரத்துள் இழுத்து விடப்பட்டன. இதற்கு இந்தியாவை எமது போராட்டத்தினை பகிரங்கமாக ஏற்றுக்கொள்ள நிர்ப்பந்தமொன்றினை உருவாக்கும் நோக்கம் இருந்திருக்கலாம். அல்லது, வெறுமனே நடுவராகப் பயன்படுத்தும் நோக்கம் இருந்திருக்கலாம். இவர்கள் நோக்கம் எவ்வாறெனினும், இன்றைய தேசிய சர்வதேசிய, சூழ்நிலைகளோடு இணைத்துப்பார்த்து தான் இதற்குத் தயாரில்லை என இந்தியா தீர்மானித்தது எதிர்பார்க்கக் கூடியதும், தனது நிலையில் இந்தியாவிற்கு அவசியமானதொன்றுமாகும். சம்பந்தப்பட்டவர்கள் இதுவிடயத்தில் தீர்க்கமாக சிந்தித்து முடிவெடுக்கத் தவறியமை விசனிக்கத்தக்கதே. இத்தவறே மத்திய, தமிழ்நாட்டு அரசுகளின் கண்டனங்களையும், எமது நாட்டு அபிமானிகளின் கண்டனங்களையும் வாங்கிக்கட்டிக்கொள்ள காரணமானது. அத்துடன் ''அமெரிக்க உப ஜனாதிபதியின் இந்திய விஜயத்தை இந்திய—அமெரிக்க உறவுக்கு வேட்டுவைக்கும் நோக்கம் கொண்ட தீய சக்திகளின் செயல்'' என்பனபோன்ற பாரதூரமான ஹேஸ்யங்கள் இந்தியா சார்பில் தெரிவிக்கப்படவும் காரணமானது.

இது குறித்து கருத்துத் தெரிவிக்கும், எமது போராட்டத்தினை ஆதரிக்கும் ''லங்கா கார்டியன்'' சஞ்சிகை ''நம்பமுடியாத, ஆச்சரியப்படத்தக்க தவறு'' என தனது நாசூக்கான பாணியில் சாடியது. பணய விவகாரம் தொடர்பாக ''இவ்வாறான வன்முறைச் செயலுக்கு தமிழ்நாட்டு மக்களோ, அரசோ ஆதரவளிக்க மாட்டார்கள்'' என முதல்வர் MGR குறிப்பிட்ட பின்னரும், பணயத்திற்கு நடுநிலை வகிக்கக் கோரியதை MGR நிராகரிக்கவில்லை என துண்டுப்பிரசுரம் கூறுவதும் உண்மைக்குப் புறம்பானதாகும். மத்திய மாநில அரசு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கள் இருபக்க இணக்கத்துடன் 25 EPRLF தோழர்களை சிறைப் படுத்திய கசப்பான சம்பவமும் சம்பந்தப்பட்டவர்களின் முன் யோசனையற்ற செய்கையின் விளை வேயாகும். இதனுல் பிரச்சனை யைப் பிரபல்யப்படுத்தும் முயற்சி இந்தியாவின் சிறிய அதிருப்தியும் எம்மைச் செயலி ழக்கச் செய்யும் என்ற பலவீன மான பகுதியை பிரபலமாக்கிய மையும் ஜீரணிக்க முடியாதவை யே. பிரச்சனையை பிரபல்யப்படுத் துவது நோக்கமாயின் அதற்கேற் றவாறு நிபந்தனைகளை விதித்தி ருக்க முடியும். இத்தகைய நோக் கத்துடன் நிக்கரகுவா FSLN விடுதலைப் போராளிகள் மேற் கொண்ட பணயத்தின்போது தம்மைப்பற்றிய உண்மையான விடயங்களை குறிப்பிட்ட நேர அளவுக்கு அரசாங்க வானெலி, தொலைக்காட்சி என்பவற்றில் ஒலிபரப்பவேண்டுமென நிபந் தனை விதித்தமை குறிப்பிடத்தக் கது.

பதிகள் பணயம் வைக்கப்பட்டி ருந்த வேளையிலும், விடுவிக்கப் பட்ட பின்னரும் ஆயிரக்கணக் கான கூலிப்படைகளின் மோப்ப சக்திக்கு பணயகாரர்களின் இரகசிய இடங்கள் எட்டவே யில்லை. இத்தன்மையானது எதி ரிக்கு சவால்விட்ட மெச்சத்தக்க அம்சமாக அமைந்தது. எமது இன்றைய ஆயுதப் போராட்ட வடிவத்திற்கு மக்களிடமுள்ள ஒருமித்த ஆதரவானது கடந்த காலங்களிலும் பல சந்தர்ப்பங் களில் போராளிகளின் இத்த கைய இரகசியத் திட்டங்களின் வெற்றிக்கு இன்றியமையாத பக் கபலமாக அமைந்து வந்துள்ளது. ஆரம்பத்தில் பெரிதும் பதட்ட மடைந்த எதிரி, பின்னர் தனக் குக் கிடைத்த கூடிய காலக் கெடுவைப் பயன்படுத்தி சாவ தானமாக தன்னை நிதானப்படுத் திக் கொண்டான். பணய நடவ டிக்கைகளின் காலக்கெடு அதிகரிப் பானது அதன் தோல்விக்கு பெரி தும் அமைந்துவிடுவது வழக்கம். விடுவிக்கப்பட்ட பின்னர் பண யக்கைதிகள் பணயம் வைத்த வர்களுக்குக் கொடுத்த நற் சான்று மக்கள் மனங்களில் இனித்தது. இது சர்வதேச ரீதி யில் பயன்பெருமைக்கு பணய நடவடிக்கை உலக அரங்கில் முக்கியத்துவம் பெறத் தவறி யமை காரணமானது.

ஒட்டுமொத்தமாக இப் பணய நடவடிக்கைகளின் விளைவுகளை நோக்கும்போது, இதன் அடிப் படையில் விடப்பட்டிருந்த சில பலவீனமான விடயங்களைத் தவிர்த்திருந்தால் எமது விடுத லைப் போராட்டத்தில் இடம் பெற்ற முதன்முதல் பணய நட வடிக்கையாகிய இதிலிருந்து கூட நாம் எதிர்பார்த்த பயனை அடைந்துகொள்ளக் கூடியதாக இருந்திருக்கும்.

— T. விசாக்கானந்தன்

அலன் தம்பதியினர் கடத்தப் பட்ட இரு தினங்களிலேயே ஆடி ஓடி ஓய்ந்துபோன மந்திரி லலித் தனது வழமையான 'இந்தியப் பாட்டை' பாடிவிட்டார். தனது அரணுன பாதுகாப்பு வலயத் தின் இயலாமையை ஒப்புக் கொள்ளும் பாவனையில் எவ்வித ஆதாரங்களுமின்றி தம்பதியினர் தென்னிந்தியாவிற்கு கொண்டு போகப்பட்டு விட்டனரென்றும், மேற்கொண்டு இந்தியாவின் நட வடிக்கைக்காக தான் காத்திருப் பதாகவும் தெரிவித்தார். இதன் மூலம் கெரில்லா நடவடிக்கைக ளின் ஏனைய கட்டங்களைப்போ லவே இதிலும் தன்னுலாகக்கூடி யது எதுவுமில்லை என்பதை ஒப் புக்கொண்டார். அத்துடன் இந் தியா மீது பழிபோடும் கைங்கரி யத்தையும் நிறைவேற்றினுர். ஆனுல் முடிவு; இதற்கு மூக்கு டைபடும் முடிவாகவே அமைந் தது. முழுக்கமுழுக்க பணயக் கைதிகள் யாழ் நகரத்திலேயே வைக்கப்பட்டிருந்தனர் என்பது பின்னர் நிருபணமாகியது. தம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

## நிராகரிக்கப்...

பேசிய போது இளைஞர் ஒருவர் 'நீங்கள் அமிர்தலிங்கத்தின் மகன் பகீரதனைத் தளபதியாகக் கொண்ட தமிழீழ இராணு வத்தை ஊட்டி வளர்ப்பது எமக்குத் தெரியும். சில இயக் கங்களின் பெயரைச் சொல்லி பயிற்சிக்கு அழைத்துச் செல்வ தும் எமக்குத் தெரியும்......' எனக் கூறிய போது பலர் பேசாமடந்தையாயினர். ஒற் றுமை பற்றிப் பேசும் இவர்கள் தாமே ஒரு இயக்கம் ஆரம்பித் துள்ளனர்.

சாத்வீகப் போராட்டம் போராட்டவழி முறைகளில் ஒன்று என ஈழநாடு போன்ற பத்திரிகைகள் எழுதின. இது முற்றிலும் உண்மை. ஆனுல் அகிம்சைப் போராட்டத்தில் ஈடு படுபவர்கள் முதலில் அகிம்சை வாதிகளாக இருக்க வேண்டும். அகிம்சையின் மகத்துவத்தைப் பூரணமாக உணர்ந்து அதிலேயே கடைப்பிடிக்க வேண்டும் ஆனுல் அமிர்தலிங்கமோ உண்ணுவிரத முடிவில் ஆயுதப் போராட்டமே ஒரே வழி என அறிவித்து விட் டாரே ஆயின் அகிம்சையில் நம்பிக்கை இழந்த இவர்கள் அதனை மீண்டும் கைக்கொள்ளக் காரணம் என்ன? அரசாங்கம் உருவாக்க விரும்பும் மிதவாத கோஷ்டிக்குத் தலைமை தாங்கும் உத்தேசமா?

மேலும் இலங்கையின் கடந்த கால வரலாற்றையும் சற்றுத் திரும்பிப் பார்க்க வேண்டும். 1961—ல் ஆரம்பிக்கப்பட்ட சத்தி யாக்கிரகப் போராட்டம் எப்படி அடக்கப்பட்டது? காலி முகத் திடலில் சிங்களக் குண்டர்கள் தாக்கினர்; யாழ் கச்சேரியில் காக்கி உடையினர் தாக்கினர். அகிம்சை வழிகள் ஆயுதபலத் தால் அடக்கப்பட்டன. மேலும் இப் போராட்டங்களை ஆரம் பித்த கூட்டணியினரின் முன்

(தொடர்ச்சி 19-ம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சாத்தியமற்ற தேசிய ஒருமைப்பாடு

தேசிய ஒருமைப்பாட்டுப் பிரச்சனை என்பது சகல உலக நாடுகளுக்கும் பொதுவானதாக இருந்தபோதும் இலங்கை போன்ற மூன்றும் உலக நாடுகளில் அது அடைந்து வரும் கூர்மை காரணமாக ஒரு தேசியப் பிரச்சனையாகவே உருவெடுத்துள்ளது. இலங்கையில் இப்பிரச்சனை அது அடைய வேண்டிய உச்சநிலையை அடைந்து விட்டதன் காரணமாக இலங்கையின் தேசிய ஒருமைப்பாட்டு பிரச்சனை என்பது சர்வதேசப் பிரச்சனை என்ற அளவிற்கு வளர்ந்து விட்டது. காலனித்துவ ஆட்சியாளரின் வஞ்சகத்தினால் இலங்கை சுதந்திரம் அடையும் முன்பே துளிர்விட ஆரம்பித்த இனப்பிரச்சனை சுதந்திரத்தின் பின் இலங்கைக்கே சொந்தமான சில தனிப்பட்ட இயல்புகளினால் மேலும் சிக்கலுற்றுத் தேசிய ஒருமைப்பாடு என்பதனை அசாத்தியமாக்கிற்று.

## வரலாற்று ரீதியான காரணங்கள்

வரலாற்றில் தமிழரும் சிங்களவரும் தனித்தனியான இராட்சியங்களில் தம் ஆதிக்கத்தை நிலைநாட்டி வந்தமைக்கான ஆதாரங்கள் உள்ளன. யாழ்ப்பாண இராட்சியம், கண்டி இராட்சியம், கோட்டை இராட்சியம் என இவை அமைந்திருந்தன. இலங்கை முழுவதுமே தமிழர் ஆட்சிக்குக் கீழ் இருந்தமைக்கான சான்றுகள் உண்டு. பிரித்தானிய ஆதிக்கம் ஏற்பட்டதன் பின்னரே இலங்கை முழுவதும் ஒரே நிர்வாகத்தின் கீழ் வந்தது. பிரித்தானியர் இங்கு இந்தியத் தமிழர்களைத் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்காகக் கொணர்ந்து குடியேற்றியமையுடன் முரண்பாடுகளுக்கு அந்நியர் காரணமாக இருந்மை ஆரம்பமாயிற்று. 1915-ல் முதலாவது இனக் கலவரம் வெடித்தது. முஸ்லிம்களுக்கும், சிங்களவர்களுக்குமிடையிலான மோதலாக இது அமைந்திருந்த போதிலும் சேர் பொன் இராமநாதனின் சில நடவடிக்கைகள் முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்குமிடையிலான மனக்கசப்பு ஏற்படவும் காரணமாயிற்று. அப்போது ஏற்பட ஆரம்பித்த மோதல்களால் இலங்கை தேசிய காங்கிரசில் 1921-ல் பிளவு ஏற்பட்டது. இதனுடன் இலங்கை தேசிய இனங்களுக்கிடையிலான பிளவுகள் வெளிப்படத் தொடங்கின. இது 1931-ல் சேர் பொன் அருணசலம் டொனமூர் ஆணைக்குழு முன்னிலையில் இனவாரிப் பிரதிநிதித்துவத்தைக் கோரும் அளவிற்கு அவநம்பிக்கை வளர்ந்தது. இக்காலகட்டத்தில் யாழ்ப்பாண வாலிபர் சங்கம் தேர்தலைப் பகிஷ்கரிக்கக் கோரியமை தமிழர் தம் உரிமை குறித்து முன்வைத்த முதலாவது போராட்ட நடவடிக்கையாக அமைந்தது. மேலும் சுதந்திரத்துக்கு முன் தற்போதைய ஜனாதிபதியான ஜே. ஆர். ஜயவர்த்தனா அரசாங்க சபையில் கொண்டு வந்த (1944) ''இலங்கையின் சகல அரசாங்க பாடசாலைகளிலும் போதனமொழி சிங்களமாக இருக்க வேண்டும். அத்துடன் எல்லா அலுவலகங்களில் சேர்வதற்கான பரீட்சையும் சிங்களமாக இருக்க வேண்டும்'' என்ற தீர்மானம் ஒடுக்குமுறைக்கான திட்டங்கள் அப்போதே ஆரம்பமாகி விட்டன என்பதைப் பறைசாற்றிற்று.

சுதந்திரத்தின் பின்னர் S. W. R. D. பண்டாரநாயக்கா அவர்கள் 24 மணி நேரத்தில் சிங்கள மயமாக்கும் திட்டத்தை அறிவித்தமையும் 1956-ல் களனி மாநாட்டில் U. N. P. தனிச் சிங்களச் சட்டம்பற்றி மேற்கொண்ட தீர்மானமும் அநாகரிக தர்மபாலாவினால் ஸ்தாபன மயமாக்கப்பட்ட பௌத்த சிங்களத் தேசியவாதம் அதன் சக்தியைக் காட்ட ஆரம்பித்து விட்டதை உணர்த்திற்று. இதன் பின்னர் இலங்கையில் ஆட்சிக்கு வந்த சகல அரசாங்கங்களும் சிங்கள தேசிய இனவாதத்திற்கு அடிபணிந்தே ஆட்சி செய்து வந்தன. இலங்கை வரலாற்றில் சிறுபான்மையோர் பிரச்சனையைத் தீர்க்கும் விடயத்தில் முக்கிய ஒப்பந்தமாக விளங்கிய பண்டா-செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து ஜே. ஆர். ஜெயவர்தனாவினால் மேற்கொள்ளப்பட்ட கண்டி யாத்திரை; பண்டார நாயக்காவினால் வளர்க்கப்பட்டு வந்த சிங்கள தேசிய வாதம் பேரினவாதமாக உருவெடுக்க ஆரம்பித்ததை வெளிக்காட்டிற்று. இக்காலகட்டத்திலேயே தமிழ் தேசியவாதம் தீவிரமாக வளர ஆரம்பித்தது. இதற்கு பின்னர் குறிப்பிடத்தக்க அம்சமாகக் கூறக்கூடியது 1966-ல் கொண்டு வரப்பட்ட தமிழ்மொழி விசேட மசோதாவாகும். இதில் விசனத்திற்குரியது என்னவெனில் S. L. F. P, யுடன் இடதுசாரிகளான கம்யூனிஸ்ட்கட்சி, சம சமாஜக்கட்சி ஆகியவை தமிழர் விரோத கோஷமிட்டபடி மசோதாவை எதிர்த்து ஊர்வலம் சென்றமையாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1970-ல் ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்தபின்னர் கொண்டு வரப்பட்ட பல்கலைக்கழக அனுமதிக்கான தரப்படுத்தல் அனுமதி முறை ஒடுக்குமுறையின் கோரப்பற்கள் தமிழரின் எதிர்காலத்தையும், நம்பிக்கைகளையும் முற்றாகச் சிதறடித்தது. சோல்பரி அரசியல் திட்டத்தில் சிறுபான்மையோருக்கு ஓரளவு சலுகையை வழங்கிய 29வது ஷரத்து நீக்கப்பட்டு, முழுவதும் பௌத்த சிங்கள பேரினவாத அரசியல் திட்டமாக 1972 அரசியல் திட்டம் கொண்டுவரப்பட்டு, தமிழர்கள் இரண்டாம் தரப் பிரசைகளாக்கப்பட்டனர். இக்காலகட்டத்திலேயே தமிழ்த் தீவிரவாத இளைஞர்கள் ஆயுதப் போராட்டம்பற்றிச் சிந்திக்கத் தொடங்கினர். 1977-ல் பதவிக்கு வந்த அரசாங்கம் அப்போது ஏற்பட்ட இனப்படுகொலையின்போது போரா? சமாதானமா? என போருக்குத் தமிழர்களை அறைகூவியது. 1983 ஜூலையில் ஸ்ரீலங்கா அரசாங்கம் தன்னை பௌத்தசிங்களவரின் அரசாங்கமாகப் பிரகடனப்படுத்தியது. இவ்வரசாங்க காலத்தில் கொண்டுவரப்பட்ட மாவட்ட அபிவிருத்திச்சபை என்ற பன்முகப்படுத்தப்பட்ட நிர்வாக முறையானது ஒரு வெற்றுத் தோட்டாவாக இருந்தது. 1979-ல் கொண்டு வரப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டம் தமிழர்களுக்கும், சிங்கள அரசாங்கத்திற்கும் இடையே எழுந்த முரண்பாடுகள் நேச முரண்பாடுகள் அல்ல எதிரி முரண்பாடுகளே என்பதை உறுதிப்படுத்தியது. இது பிரச்சனைகளைப் பேசி அல்ல, போராடியே தீர்க்க வேண்டுமென்ற தீர்மானத்திற்கு தமிழ் மக்கள் வருவதற்கு வழி சமைத்தது.

## குடியேற்றங்கள்:

D. S. சேனநாயக்காவினால் சுதந்திரத்திற்கு முன்னரே குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டபோதும் 1950-ல் கல்லோயாத் திட்டமானது கிழக்கில் தமிழரது பல பாரம்பரிய நிலங்களில் சிங்களவர் குடியேறக் காரணமாயிற்று. கிழக்கின் எல்லையாகவிருந்த பட்டிப்பளை அம்பாறையாகி தற்போது திகாமடுல்ல என்றாகி விட்டது. சேருவாவிலை, திரியாய்ப் புனித நகர்த் திட்டங்கள் தமிழ் நிலங்களில் நிகழ்ந்த சிங்களக் குடியேற்றங்களாகும். வடக்கிற்கும், கிழக்கிற்குமான நில ரீதியான தொடர்பைத் துண்டிக்கும் நோக்கமாகத் திருமலை மாவட்டத்தில் பல்வேறு வடிவங்களில் கொண்டுவரப்பட்ட குடியேற்றங்கள் திருமலையில் தமிழரைச் சிறுபான்மையினராக்கும் அளவிற்கு உச்சம் பெற்றது. அல்லை கந்தளாய், பதவியா பகுதிகளில் நடைபெற்ற குடியேற்றங்களும் திருமலைத் துறைமுகம் கருதி நகர்ப்புறத்தில் சுயமாக இடம்பெற்ற குடியேற்றங்களும் பிரிமா மாவாலை போன்ற தொழில் மயப்படுத்தல் நடவடிக்கைகளின் மூலம் இடம்பெற்ற குடியேற்றங்களும் தமிழரின் பாரம்பரிய பிரதேசமான திருமலை மாவட்டத்தில் அவர்களைச் சிறுபான்மையினராக்கியது. மன்னாரின் கொண்டச்சி என்னும் இடத்தில் அரச முந்திரிக் கூட்டுஸ்தாபனம் என்ற பெயரில் குடியேற்றங்கள் இடம்பெற்றன. இதனால் புத்தளத்திற்கும் மன்னாருக்குமான தொடர்பு துண்டிக்கப்பட்டது. மன்னார், முல்லைத்தீவு, கொக்கிளாய், புன்னைக்குடா, நாயாறு போன்றவிடங்களில் மீனவர் குடியேற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இதனால் நிலம் பறிபோனது மட்டுமல்லாமல் மூலவளச் சுரண்டலும் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டது. மிக அண்மையில் வடமுனையில் புத்தபிக்கு ஒருவரின் தலைமையில் அங்கிருந்த 300 தமிழ் முஸ்லிம் குடும்பங்கள் விரட்டப்பட்டு சிங்கள குடியேற்றம் ஒன்று பலாத்காரமாக ஏற்படுத்தப்பட்டது. இக்குடியேற்றத்திற்கு அரச ஆயுதப் படைகளும், அரசுவாகனங்களும், தமிழ் அகதிகளுக்காக அனுப்பப்பட்ட கூடாரங்களும் பயன்படுத்தப்பட்டன. இதன் பின்னர் காணி அமைச்சினால் முன் வைக்கப்பட்ட சட்டமானது உண்மையில் வடமுனையில் குடியேறியவர்களை அல்ல; காலத்திற்குக் காலம் இடம்பெற்ற இனப்படுகொலைகளினால் அகதிகளாக ஓடி வந்து வடக்கு கிழக்கில் குடியேறிய மலையகத்தவரை விரட்டியடிக்கவே பிரயோகிக்கப்பட்டது. இவ்வாறாகத் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலமாகப் பாரம்பரிய பிரதேசங்களில் தமிழர் சிறுபான்மையோராக்கப்பட்டமை அவர்களை அரசியல் சக்தியற்றதாக்கும் முயற்சி மட்டுமல்லாமல் காந்தீயம் போன்ற தமிழர் குடியேற்றங்களை இராணுவபலம் கொண்டு நிர்மூலமாக்கும் நடவடிக்கைகள் ஆகவும் அமைந்தன. இவை தமிழ் மக்களை ஐக்கிய இலங்கையை நிராகரிக்கத் தூண்டின.

## இனக்கலவரங்கள்:

1958, 1961, 1977, 1979 1981, 1983களில் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கெதிரான இனப்படுகொலைகள் நடந்தேறின. இவற்றை இனக்கலவரங்கள் என்று அழைப்பது பொருத்தமில்லை. இனக்கலவரங்கள் எனப்படுபவை இரு இனங்களுக்கிடையிலான மோதல்கள் என்றே விளங்கிக் கொள்ளப்படுகின்றது. ஆனால் இங்கே பெரும்பான்மை இனத்தவரான சிங்களவரால் தமிழர்கள் கொலை வதை செய்யப்படும் நிலை காணப்படுகின்றது. காலத்திற்குக் காலம் தமிழர் மேலும் தமிழரது உடமைகள், வர்த்தக நிலையங்கள் மீதும் மேற்கொள்ளப்பட்டு வந்த தாக்குதல்கள் தமிழர்கள் தென் இலங்கையில் தொடர்ந்து பாதுகாப்பாக வாழும் நிலையையும் சுதந்திரமான வர்த்தகத்தில் ஈடுபடும் நிலையையும் அழித்தொழித்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1983 ஜூலையில் தமிழர் தொழிற்சாலைகளின் மீதான அழிவும் எந்தவொரு வர்த்தகத்திலும் எவரும் 1/3 க்கு மேற்பட்ட ஏகபோகம் வகிக்க முடியாது என அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்ட சட்டமும் (ஏனெனில் குறிப்பிட்ட சில பொருட்களின் இறக்குமதியில் தமிழரே ஏகபோகம் வகித்தனர்) தமிழரின் பொருளாதார நிலைகளை இனக் கலவரங்கள் மூலம் துடைத்தெறியும் பேரினவாதத்தின் தந்திரமேயாகும்.

**அரசியற் காரணங்கள்:**

ஆங்கிலேயர் இலங்கையை விட்டுச் சென்றபோது அவர்கள் ஏற்படுத்தியிருந்த பாராளுமன்ற ஜனநாயக முறை தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கவில்லை. நீண்ட அரசியற் பாரம்பரியங்களையுடைய மேற்கு நாடுகளில் வெற்றிகண்ட ஆட்சி முறையைப் பிரித்தானியர் இலங்கையில் அறிமுகப்படுத்தியமையும், அதன்மூலம் உருவாகிய உயர் மத்திய தரவர்க்கமும், பிரித்தாளும் தந்திரமும் பிரித்தானியர் ஏற்படுத்திய தற்காலிக நிர்வாகப் பிரிவுகளும் பிளவினை வளர்க்கவே உதவிற்று. சுதந்திரம் பெறுமுன்னர் ஓரளவிற்கு 'இலங்கைத் தேசியம்' என இருந்ததாயினும் சுதந்திரத்திற்குப் பின்னர் அது சிங்களத் தேசியம், தமிழ்த் தேசியம் என்றாயிற்று.

இலங்கையில் காணப்படுகிற பல்லின சமூக அமைப்பு, எல்லா நாடுகளிலும் இருப்பதுபோலவே தேசிய ஒருமைப்பாட்டிற்குச் சவாலாக இருக்கிறது. இந்தியா போன்ற நாடுகள் இதில் ஓரளவு வெற்றி கண்டிருப்பினும் கூட இலங்கையில் பெரும்பான்மை இனத்தவருக்கும் முக்கிய சிறுபான்மை இனத்தவரான தமிழருக்கும் இடையே மிகக் கூர்மையான வேறுபாடுகள் இருந்து வந்துள்ளன. தமிழர் தம் பாரம்பரியங்களுக்கு ஏற்ப திருமண உறவுகள் போன்றவற்றை தம் இனத்தாருக்கிடையிலேயே வைத்திருந்தனர். அதிலும் அவர்களுக்கு இடையில் பிரதேச ரீதியாகக்கூட இது தெளிவாக தனிப்பட்டு இருந்தது. யாழ்ப்பாணத் தமிழர்கள் மட்டக்களப்புத் தமிழருடன் திருமண உறவுகளை வைத்திருக்க விரும்பாதவர்களாகக் காணப்பட்டனர்.

பெருந்தோட்டக் கூலிகளாக இங்கு கொண்டுவரப்பட்டு அரசியல் அனாதைகளாக்கப்பட்ட மலையகத் தமிழ் மக்கள் மீது சிங்கள மக்கள் எப்போதும் சந்தேகம் கொண்டிருந்தனர்.

1. மொழி, மத, இன அடிப்படைகளில் வட, கிழக்கு மக்களுடன் இணையும்போது தமக்கு எதிரான சக்தியாக மாறலாம் என்ற பயம்.

2. சிங்கள விவசாயிகளிடம் காணப்பட்ட நிலமில்லாத தன்மைக்கும், வேலையின்மைக்கும் இந்தியத் தமிழர் மலையகத்தை ஆக்கிரமிப்பதே காரணம் என்ற எண்ணம்.

3. இந்திய தமிழ் மக்கள் இலங்கைக்கு விசுவாசமற்று இந்தியாவிற்கே விசுவாசமாக உள்ளமை. இவர்கள் இந்திய கலை, கலாச்சாரங்களைப் பின்பற்றுகின்றமையும் இந்தியாவுடன் கொண்ட தொடர்புகளும் இந்தியாவிற்கு அடிக்கடி மேற்கொள்ளும் பயணங்களும் சிங்கள மக்களைப் பயங்கொள்ளச் செய்திருந்தமை.

4. இலங்கை இந்திய வம்சாவழித் தமிழர் மீது தமிழ் நாட்டு அரசாங்கம் காட்டும் அக்கறை.

5. இவைகளால் சிங்கள மக்கள் மலையகத் தமிழர்களை இலங்கையின் தேசிய நலன்களுக்கு எதிரானவர்கள் Sud deen Germans, போன்றவர்களாகக் கருதி வருகின்றனர்.

சிங்களவர் மிகப் பெரிய பெரும்பான்மையினராகவும், தமிழர்கள் மிகப் பெரிய சிறுபான்மையினராகவும் இருப்பதனால் தமிழ்மக்கள் மீது இன ஒடுக்கு முறையை மேற்கொள்வது சிங்கள மக்களுக்குச் சுலபமாக இருந்தது. மலேசியாவில் சிறுபான்மையோர் பெரும்பான்மை இனத்தவரை விடத் தொகையிற் கூடியவராக இருப்பது (உதாரணமாக மலாயர் 44வீதம் ஏனைய சீனர், இந்தியர் போன்றோர் 56வீதம்) போன்ற தான நிலமை இலங்கையில் இருக்கவில்லை.

குறிப்பிட்ட இனமொன்றை இராணுவ ரீதியாக அடக்குமுறைக்குள்ளாக்கி ஒழிப்பது சற்றுச் சிரமமானது. ஆகவே சாதாரணமாக ஒடுக்குமுறையாளர் பல்வேறு வழிகளைச் சிறுபான்மை மக்களை ஒடுக்குவதற்குக் கண்டுபிடித்துள்ளனர். பெரும்பான்மையோர் வாழும் பிரதேசங்களைத் துரிதமாக அபிவிருத்தி அடையச் செய்வதும் சிறுபான்மையோர் பிரதேசங்களைத் திட்டமிட்டுப் புறக்கணிப்பதும் அவற்றில் ஒன்றாகும். இவ்வகையில் இலங்கையில் மகாவலி போன்ற திட்டங்கள் தெற்கினைக் கூடியளவிற்கு வளர்ச்சி அடைவிக்கும் வண்ணம் மேற்கொள்ளப்படுகின்றது. வடக்கு கிழக்கில் தாமாகவே விரும்பி அபிவிருத்தியில் ஈடுபடும் 'ரெட்பானா' போன்ற வெளிநாட்டு நிறுவனங்களும் சந்தேகக் கண்கொண்டே பார்க்கப்படுகின்றன. மேலும், பெரும்பான்மை இனத்தவர் நலன்கள் பேணப்படுவதற்கும், சிறுபான்மை நலன்கள் புறக்கணிக்கப்படுவதற்கும் சாமர்த்தியமாகக் காரணம் கூறப்படுகின்றது. காலனித்துவ ஆட்சிக் காலத்தில் சிங்கள மக்கள் இழந்திருந்த உரிமைகளையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அந்தஸ்தினையும் மீளப் பெற முயற்சி நடக்கின்றது எனவும் பிரித்தாளும் கொள்கையால் தமிழர் மேலதிகமாகப் பெற்ற சலுகைகள், உரிமைகளை இழக்கின்றனரே தவிர உண்மையில் சலுகைகள், உரிமைகளை இழக்கவில்லை எனவும் நியாயம் கூறுகின்றனர்.

இலங்கைத் தமிழர் பிரச்சனை சிறுபான்மையோர் பிரச்சனை அல்ல எனவும் தென்னிந்தியாவில் வாழும் 600 மில்லியன் தமிழர்களோடும் ஒப்பிடும்போது சிங்களவர் சிறுபான்மையோர் எனவும் கூறுகின்றனர். சிங்கள தேசியம் என்றால் திராவிடருக்கு எதிரான போராட்டம் என்கின்றனர். இங்கு சிங்கள தேசியவாதம் என அவர்களது தேசியவாதம் சொல்லிக்கொள்ளப்படுவதில்லை. 'ஜாதிவாதய' என்றே சொல்லிக் கொள்கின்றனர். மேலும், தமிழரும் முஸ்லீம்களும் ஏனையோரும் உலகின் வேறு பகுதிகளில் சிறப்பாக வாழ்கின்றனர் எனவும், தமிழ் ஆங்கிலம் உலகின் வேறு பகுதிகளிலும் பேசப்படுகின்றன எனவும், சிங்கள இனமும் மொழியும், தேரவாத பௌத்தமும் நிலவும் ஒரே நாடு இலங்கை எனவும், இதனால் பெரும்பான்மையினருக்கு விசேட உரிமைகளும் சலுகைகளும் வழங்கப்படுவது தவிர்க்க முடியாதது எனவும் கூறுகின்றனர். இவையெல்லாம் இலங்கைத் தமிழர்கள் கைகளில் ஆயுதம் ஏந்தும் நிலைக்குத் தள்ளப்படக் காரணமாயிற்று. இந்நிலையில் தேசிய ஒருமைப்பாடு என்பது பற்றி இன்னமும் கற்பனை செய்வது கேலிக்கிடமானது.

**புவியியற் பண்புகள்**

இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகள் தமிழரின் பாரம்பரிய பிரதேசமாகவும் தெற்கு மேற்கு பகுதிகள் சிங்களவரின் பாரம்பரிய பிரதேசமாகவும் இருந்து வருகிறது. இடைப்பட்ட பிரதேசம் ஆரம்ப காலங்களில் காட்டுப் பிரதேசமாக இருந்து இரு பகுதிகளையும் புவியியல் ரீதியாகப் பிரித்து வைத்துள்ளது. இதனால் தேசிய ரீதியான சிந்தனை எழாமல் பிரதேச ரீதியான சிந்தனை வளரக் காரணமாயிற்று. மேலும், வடக்கிலிருந்து தெற்கின் எல்லையான அனுராதபுரத்தை அடையும் முன்பு வடக்கிலிருந்து கடல் மார்க்கமாக இந்தியக் கரையை அடைந்து விடலாம். அதாவது அனுராதபுரத்தைத் தரைமார்க்கமாக அடையச் சுமார் நான்கு மணித்தியாலங்கள் எடுக்கின்றன ஆனால் இந்தியக் கரையை இரண்டு மணித்தியாலத்திற்கு உட்பட்ட நேரத்தில் சென்றடைந்து விடலாம். தமிழீழ தாயகத்தை மீட்பதற்காகப் போராடும் இயக்கங்களது புகலிடமாக இந்தியா இருந்து வருகிறது. இராணுவப் புவியியல் ரீதியாக அயர்லாந்து போன்ற வேறு எந்த கெரில்லா இயக்கத்திற்குமில்லாத சிறந்த தளமாக தமிழீழப் போராளிகளுக்குத் தமிழகம் இருந்து வருகிறது என லண்டன் நியூஸ்டேட்மன் என்ற பத்திரிகை எழுதியது இவையெல்லாம் தேசிய ஒருமைப்பாட்டினை நிராகரிப்பவர்களுக்குச் சாதகமாக இருந்து வந்துள்ளது

**சமூகவியற் பண்புகள்**

காலனித்துவ கொள்கைகளால் மேலைத்தேச நாகரீகத்தை விரும்புகின்ற உயர் மத்திய வர்க்கத்தினரின் தோற்றம் இந்நூற்றுண்டின் ஆரம்பத்தில் இருந்து உருவாகியது. இவர்களின் செல்வாக்கே இலங்கையின் அரசியலில் இருந்து வருகிறது. இலங்கை மக்களும் அறியாமையால் பிரமுகர்களுக்கு வாக்களித்து வந்துள்ளனர். இவர்கள் தம் நலன் கருதியும், முதலாளிகளின் நலன் கருதியுமே செயற்பட்டனர். மக்களை அரசியல் பகடைக் காய்களாகவே கருதுகின்றனர். மக்கள் மத்தியில் தம்மை வீரர்களாகக் காட்டிக் கொள்வர். அதற்காக என்ன விலையும் கொடுக்கத் தயங்கார். சேர். பொன் இராமநாதன் முதற்கொண்டு இன்றைய பிரதமர் பிறேமதாச வரை இப்படியானவர்களின் செல்வாக்கு தேசிய ஒருமைப்பாட்டைச் சீர்குலைக்கவே பயன்பட்டன. பிரதமரின் இந்திய எதிர்ப்புப் பிரச்சாரமும், இந்தியாவிற்கு எதிரான சவால்களும் இத்தன்மையதே. தமிழரசுக்கட்சி சமஸ்டிக் கோரிக்கையை முன்வைத்ததும் பின்னர் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்துத் தேர்தலில் வென்று அதன் பிறகு பின்வாங்கியமையும் கொழும்புவாழ் தமிழ் வர்த்தகரதும், முதலாளிகளதும் நலன் கருதியே. இலங்கையின் நவீன இனவாதம் என்பது மத்திய வர்க்கத்தின் தோற்றத்துடனும், மத்திய வர்க்கத்தின் முரண்பாடுகளிலும், மோதல்களிலும் இருந்து உருவாகிய ஒன்றே என்று மென்டிஸ் என்பவர் கூறுகிறார்.

**அரசியற் கட்சிகள்:**

இலங்கையின் இரு பிரதான கட்சிகளான S.L.F.Pயும், U.N.Pயும் தேசியக்கட்சிகள் எனக் கருத முடியாதவை., S.L.F.P. சிங்கள மகாசபையிலிருந்தும் U.N.P பல இனவாதக் குழுக்களில் இருந்தும் தோன்றியவை. மேலும் இவைதேர்தலில் வடக்கு கிழக்கு வாக்கை நம்பியிருப்பதில்லை. மேலும் தமிழ் மக்களும் பிரதேசக் கட்சிகளையே ஆதரித்து வந்துள்ளனர்.

பிரபல இடதுசாரிப் பிரமுகரான கொல்வின் ஆர். டி. சில்வா ஒருமுறை பாராளுமன்றத்தில் பேசும்போது ''ஒரு மொழி இரு நாடு; இரு மொழி ஒரு நாடு; என்றெல்லாம் ஆணித்தரமான கருத்துக்களை முன்வைத்து வந்தார். ஆனால் அவர்களும் பின்னர் பாராளுமன்றச் சந்தர்ப்பத்திற்கு அடிமையாகி சிங்கள பேரினவாதத்திற்கு அனுமதியளித்தார்கள். இடதுசாரி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களின் அரசாங்க காலமான 1970-77 காலப்பகுதியில் தமிழ் மக்களின் பிரச்சனையைத் தீர்ப்பதில் எவ்வித ஆர்வமும் காட்டப்படவில்லை. மாறாக 1972 அரசியலமைப்பினைத் தமிழ் மக்களின் அங்கீகாரம் இன்றியே நிறைவேற்றினர். தற்போது நவலங்கா சமசமாஜக்கட்சி போன்றவை தமிழர்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரித்திருந்த போதிலும் அவை சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறுதவையாகும்.

### அழுக்கக் குழுக்கள்:

இலங்கையில் பெரும்பான்மை இன மக்களது அமுக்கக் குழுக்களே இனவாத வளர்ச்சிக்கும் பெரிதும் காரணமாக இருந்து வந்திருக்கின்றன. இலங்கையின் கட்சியமைப்பு உறுதியாக இல்லாமையினாலும், உயர் குழாமினருக்கும் மக்களுக்கும் நீண்ட இடைவெளி இருந்தமையினாலும் புத்த பிக்குகளுக்கு இருந்து வந்த செல்வாக்கினாலும் அமுக்கக் குழுக்கள் முனைப்புற்று கட்சியினை வழிநடத்தி வந்திருக்கின்றன. Pusa Peramuna என்ற பௌத்தபிக்குகளின் அமைப்பும் சிங்கள பௌத்த புத்திஜீவிகளின் அமைப்பான 'பௌத்த ஜாதி பலவக்கய' என்ற அமைப்பும் 1956-ல் சிங்களம் அரச கரும மொழியாக அங்கீகரிக்கப்படக் காரணமாக இருந்தன. 1959-ல் பண்டா செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்படவும், தமிழருக்குச் சலுகை வழங்கும் பிரதிநிதிகள் சபை மசோதா கைவிடப்படவும் இவையே காரணம். மேலும் சிங்கள தர்ம சங்கதான போன்ற எல்லா அமைப்புகளும் எப்போதும் தமிழ் விரோத பிரசாரதில் இறங்கி வந்திருக்கின்றன. இன்றும் சர்வகட்சி மாநாட்டில் இவர்களின் செல்வாக்கு அரசியல் தீர்வு ஒன்று ஏற்படத் தடையாக இருந்து வருகிறது.

### அரசியல் திட்டங்களும் மாற்றங்களும்:

20-ம் நூற்றுண்டு ஆரம்பத்திலிருந்தே அரசியற் திட்டவரைவின்போது தமிழருக்கும், சிங்களவருக்குமிடையே இழுபறி நிலை இருந்து வருகிறது. தமிழ் பிரதிநிதிகளின் இனவாரிப் பிரதிநிதித்துவக் கோரிக்கையும் திரு. பொன்னம்பலத்தின் 50:50 கோரிக்கையும் பெரும்பான்மையோர் மீது தமிழ் மக்கள் கொண்ட அவநம்பிக்கையை எடுத்துக்காட்டுகிறது. சோல்பரி அரசியல் திட்டத்தில் இருந்த 29வது ஷரத்து நீக்கப்பட்டு தமிழர்களின் குறைந்த பட்ச ஆறுஅம்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட நிலையில் 1972-ல் சிங்களத்திற்கும், பௌத்தத்திற்கும் அதி முக்கியத்துவம்கொடுத்த அரசியல் திட்டம் கொண்டுவரப்பட்டது. தொடர்ந்து 1978 அரசியல் திட்டம் தமிழை தேசியமொழியாக அங்கீகரித்த போதும் அது வெறும் கண்துடைப்பே என்பது பிற்பாடு தெரியவந்தது.

### மட்டுப்படுத்தப்பட்ட பொருளாதார வளங்கள்

அருகிய மூலவளம் கொண்ட நாடாக இலங்கை விளங்குவதனால் மூலவளங்களைப் பங்கிடுவதில் இனங்களுக்கிடையே போட்டா போட்டி நிலவுகிறது. தமிழ் மக்கள் வாழும் பிரதேசம் வரண்ட பிரதேசமாக இருப்பதனாலும் அவர்கள் கல்வியில் பெற்றிருந்த உயர்வு காரணமாகவும் அவர்களது கடும் உழைப்புக் காரணமாகவும் பொதுச்சேவையில் அதிக நாட்டம் கொண்டு காணப்பட்டனர். சுதந்திரத்தின் பின்னர் தனிச் சிங்களச் சட்டம் போன்றவற்றால் அரசாங்க உத்தியோகம் பெறச் சிங்களத் தேர்ச்சி அவசியம் என்று கூறியது அவர்கள் தொழில் வாய்ப்புப் பெறுவதைக் குறைத்தது. திட்டமிட்ட முறையில் பொதுச் சேவையில் ஆள் சேர்க்கும்போது தமிழரைப் புறக்கணித்து வந்தமையால் தமிழ் மக்கள் விரக்தியுற்ற நிலையில் வெளிநாடு செல்லவும் தனிநாடு கோரவும் தலைப்பட்டனர்.

வடக்கு கிழக்குப் பகுதிகளில் எவ்வித பாரிய அபிவிருத்தித் திட்டங்களையும் மேற்கொள்ளாத அரசாங்கம் காங்கேசன் சீமேந்து தொழிற்சாலையை விஸ்தரித்துத் துரித உற்பத்தியில் இறங்கியமை தமிழ் மக்களைச் சந்தேகம் கொள்ளச் செய்தது. உண்மையில் இது ஒரு மூலவளச் சுரண்டலே. கடற்கண்காணிப்பு வலயம் என்ற பெயரில் மீனவர் வருவாயைக் குறைப்பதன் மூலம் தமிழ் மக்களை விரக்தி நிலைக்கு இட்டுச்சென்று அவர்களது போராட்டத்தை முறியடிக்கும் திட்டமானது தமிழ்ப் பேசும் மக்களை அரசியல் ரீதியாக எடுக்கப்படும் சகல முடிவுகளையும் நிராகரித்து இராணுவ ரீதியான தீர்வு ஒன்றிற்கான சிந்தனையில் உறுதிப்பட வைத்து விட்டது.

### குறைபாடான கல்விமுறை:

சுயமொழிக் கல்வியின் அறிமுகமானது தமிழ்-சிங்கள மாணவர்களுக்கிடையிலான புரிந்துணர்வும் நட்புறவும் வளரத் தடையாக இருந்தது. மிஷனரிமாரினால் வடக்குக் கிழக்கில் உருவாக்கப்பட்ட கல்வி நிலையங்களும் தென்னிந்திய தமிழ் வெளியீடுகளும் சிங்களத் தலைவர்களுக்குப் பொறாமையை ஏற்படுத்தியிருந்தன. இதனால் அரசாங்கத்தின் கல்விக் கொள்கைகள் யாவும் தமிழ் மக்களின் கல்வியை மழுங்கடிப்பனவாகவே இருந்தன. தரப்படுத்தல்முறையானது தமிழ் மாணவர்களுக்கான உயர்கல்வி வாய்ப்பினை மறுதலித்தது. இதனால் தமிழ் மாணவர்கள் தீவிரவாதப் போக்குடையவர்களாக மாறி வன்முறை மீது ஆர்வம் கொள்ளச் செய்தது. அண்மையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களில் பயிலும் தமிழ் மாணவர்கள் மேல் திட்டமிட்டு அடிக்கடி மேற்கொண்ட தாக்குதல்களும், கடந்த இனக்கலவரத்தில் சிங்களக் கல்லூரி மாணவர்கள் பங்கு கொண்டமையும் கல்வியினூடாக இவர்கள் எவ்வளவு வெறியூட்டப்பட்டுள்ளனர் என்பதையும் தமிழ் மாணவர் கல்வி தென்னிலங்கையில் படிப்படியாக ஒழிக்கப்பட்டு வருவதையும் எடுத்துக்காட்டுகிறது.

## வெகுஜன தொடர்பு சாதனங்களின் சீரழிந்த தன்மை

இலங்கையில் வானொலியில் ஒலிபரப்புகளானவை தனித் தனி அலைவரிசையில் தமிழ் சிங்கள நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி வருகின்றன. பொது மொழியான ஆங்கிலத்தில் ஒலிபரப்பு நிகழ்ந்தபோதும் அவற்றைக் கிரகிப்போர் குறைவாகவே உள்ளனர். தொலைக்காட்சியில் தமிழ் புறக்கணிக்கப்பட்டு வருவதாகப் பல குற்றச்சாட்டுகள் உள்ளன. ஒரு காலத்தில் ஆங்கில செய்தியின் பின்னர் ஆய்போவன் எனச் சிங்களத்தில் விடைபெறும் முறை திணிக்கப்பட்டது. பத்திரிகைகள் கட்சி சார்புடையனவாக இருப்பதனுலும், முதலாளித்துவ நலன் பேணுபவைகளாகவும் வர்த்தக நோக்கினுலும் இனவாதத்தைத் தூண்டும் விதத்திலேயே செய்திகளைப் பிரசுரிக்கின்றன. வடபகுதியில் நிகழும் சிறு தும்மலும் கொழும்பில் பயங்கரமாக எதிரொலிக்கிறது தமிழ் மக்களுக்குச் சார்பான செய்திகளைப் பிரசுரிக்காமலோ அன்றி முக்கியத்துவம் குறைத்தோ திரித்தோ பிரசுரம் செய்யப்படுகின்றன. இவை ஆங்கிலப் பத்திரிகைகள் பக்கம் மக்கள் போகாத அளவிற்கு வெறுப்பை வளர்த்து விட்டன. மேலும் சற்றடே றிவியூ போன்ற பிராந்தியப் பத்திரிகைகளுக்கும் வாய்ப்பூட்டு போடப்பட்டுள்ளது.

## தற்போதைய அரசியல் நிலைமைகள்

இலங்கையின் முக்கிய சிறுபான்மை இனமாகிய தமிழ்மக்கள்மீது இலங்கை அரசாங்கம் பல்வேறு வடிவங்களில் மேற்கொண்ட ஒடுக்குமுறை நடவடிக்கைகளானவை அவர்களைத் தனித்து வாழும் நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது. தற்போது பதவியில் உள்ள அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சனையில் அரசியல் ரீதியில் தீர்த்து வைக்கும் எவ்வித நடவடிக்கையிலும் ஈடுபடுவதாகத் தெரியவில்லை. *1983* கலவரத்தின் பின்னர் இந்திய மத்தியஸ்தத்தை ஆரம்பத்தில் ஏற்றுக்கொண்டதாகக் காட்டிக்கொண்ட போதிலும் இராணுவத்தைப் பலப்படுத்திக் கொண்டுவிட்ட தற்போதைய நிலையில் இராணுவ ரீதியான தீர்வு ஒன்றிற்கான நிலைமைகளை வளர்த்து வருகிறது. தற்போதைய பிரச்சனை பயங்கரவாதப் பிரச்சனையே எனச் சாதிக்க முனைகிறது. தமிழ் மக்கள் மத்தியில் ஆயுத ரீதியான சிந்தனை வலிவுற்றமைக்கு அடிப்படைக் காரணங்களை அறிவதை நிராகரித்துள்ளது. தமிழ் மக்கள் பிரச்சனையைத் தீர்ப்பதற்காகக் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாடு எதிர்பார்க்கப்பட்டதைப் போன்றே மரணத்தைத் தழுவியது. தமிழ் மக்களும் அரசியற் கட்சிகளும் பல்வேறு ஸ்தாபனங்களும் நிராகரிக்கக்கூடிய முடிவை நோக்கியே பேச்சு வார்த்தைகள் யாவும் போய்க்கொண்டிருக்கின்றன. இதே வேளை சர்வதேச பயங்கரவாதிகளை இலங்கைக்கு அழைத்திருப்பதன்மூலம் முஸ்லீம்களின் ஒருமித்த எதிர்ப்பையும் அரசு தேடிக்கொண்டுள்ளது. அவர்கள்தாம் தமிழர்களுக்கு எதிரானவர்கள் மட்டுமல்ல சகல சிறுபான்மையினருக்கும் நீதிக்கும் எதிரானவர்கள் என்பதை விளம்பரப்படுத்தியுள்ளனர். பௌத்த சிங்களவரின் காவலராகத் தம்மைக் காட்டிக் கொள்ளும் இவர்கள் உண்மையில் முதலாளித்துவ நலன்களை விஸ்தரிப்பதனையே நோக்கமாகக் கொண்டுள்ளனர். இன வெறிச் சூருவளிக்குள் சிக்குப்பட்டுள்ள சகல சிங்கள முற்போக்குச் சக்திகளும் அம்மாயையினுள் இருந்து விடுபடும்வரையும் தமிழ்மக்கள் காவல் இருக்க முடியாத நிலைக்கு இயல்பாகவே தள்ளப்பட்டுள்ளனர்.

## சாத்தியமற்ற தேசிய ஒருமைப்பாடு

ஒடுக்கு முறைக்குள்ளாகிய தமிழ்மக்கள் *1970*களில் ஆயுத ரீதியாகப் போராடித் தம் உரிமையை மீட்டெடுக்கும் யதார்த்த நிலைக்கு வந்தனர். இதனை முன்னெடுப்பதில் இளைஞர் சக்திகள் யாவும் ஒன்றுதிரண்டு மறைமுகமாக இயங்கும் இயக்கங்களாக இன்று வளர்ச்சியுற்றுள்ளன. பல்வேறு காலகட்டங்களிலும் உரிமைகளைப் பெற எடுத்துவந்த சாத்வீகப் போராட்டங்கள் யாவும் இராணுவ பலத்துடன் அடக்கப்பட்டமையால் ஆயுதங்களைக் கையிலேந்திய தமிழ் இளைஞர்கள் முரண்பாடுகள் நிறைந்த முதலாளித்துவ ஆட்சிமுறைமை முறிந்து விழும்வரை காத்திருக்க இன்று தயாராகவில்லை. தென்னிலங்கைச் சோசலிச சக்திகள் விழிப்புறும்வரை பொறுத்திருக்காமல் வடக்குக் கிழக்கிற்கான சோசலிச ஆட்சிமுறை ஒன்றினை அமைப்பதற்கான தம் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். தமிழ் மக்களும் முதலாளித்துவ அரசினுல் காலத்திற்குக் காலம் அவர்களின் இயல்புப்படியே முன்வைத்த தற்காலிக தீர்வுகள் யாவற்றையும் நேரிற்கண்டு ஏமாற்றமுற்று ஆயுதப் போராட்டத்திற்கு முற்றுமுழுதான தம் ஆதரவைத் தெரிவித்து வருகின்றனர். (ஆதாரம் தமிழீழ விடுதலையை முன்னெடுக்கும் முன்னணி

(தொடர்ச்சி 19-ம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# களத்தில் புலிகள்

இந்தியாவானது, தமிழீழ விடுதலைப் போராளிகளிற்கு, இராணுவப் பயிற்சியை வழங்கவில்லை என்றாலும், இவ் விடுதலைப் போராளிகளின் சுதந்திரமான அரசியல் நடவடிக்கைகளுக்கு, எவ்வித தடையையும் ஏற்படுத்தாது, இலகுவாக அவர்களை தன்னுள் உள்வாங்கிக் கொள்கிறது.

இந்தியாவின் தென்மாநிலமான தமிழ் நாட்டில் தமிழீழ விடுதலைப் போராளிகளுக்கு இராணுவப் பயிற்சி அளிக்கப்படுவதாக, ஸ்ரீலங்கா அரசு கூறும் குற்றச்சாட்டை இந்தியா உத்தியோக பூர்வமாக மறுத்தாலும் கூட, தமிழீழத்தின் மிகவும் முக்கியமான தீவிரவாதக் குழுக்களின் தலைமைக் காரியாலயங்கள் இந்தியாவில் உள்ளன என்பதும், ஒரு நாட்டிலிருந்து மறு நாட்டிற்கு, எவ்வித தடங்கலுமின்றி தினம் தினம் இடம் பெயரக்கூடிய, பெரும் தொகையான இலங்கைத் தமிழ் இளைஞர்கள் சுதந்திரமாக நடமாடுகின்றனர் என்பதும் எவ்விதமாகவும் மறுத்துவிட முடியாதவை.

1982ம் ஆண்டு மே மாதம், ஜன நடமாட்டம் மிக்க சென்னை நகர வீதியில் இரு தீவிரவாத இயக்கத் தலைவர்களான, வேலுப்பிள்ளை பிரபாகரனும், உமாமகேஸ்வரனும் ஒருவருக்கொருவர் துப்பாக்கியினால் சுட்டுக் கொண்டதில் கைது செய்யப்பட்ட தானது, தமிழீழப் போராளிகளின் புரட்சித் தலைவர்கள் இந்தியாவில் உள்ளனர் என்பதினை நிருபிகிக்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும், தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து விலகிச் சென்ற தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்திற்குத் தலைமை தாங்கும். உமாமகேஸ்வரனும் சிறிலங்கா அரசினால் முக்கியமாகத் தேடப்பட்டுக் கொண்டிருக்கும் நபர்களாவர். இவர்கள் மீது, முதலில் இந்தியாவில் குற்றவியல் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதால், ஸ்ரீலங்கா இலங்கை அரசிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற ஸ்ரீலங்கா அரசின் கோரிக்கை இந்திய அரசாங்கத்தால் மறுக்கப்பட்டிருந்தது. அதேவேளையில் படிப்படியாக, இந்தியாவில் இவர்கள் மீதான விசாரணையும் கைவிடப்பட்டுள்ளது.

---

மொழிபெயர்ப்பு
**Far Eastern Economics Review**
**26-4-84**
**— மோஹன் ராம்**

---

கொழும்பிலே, அண்மையில் இடம் பெற்ற கூட்டம் ஒன்றில் பிரதமர் பிரேமதாச ''இத்தனை நாளும் இத்தகைய அபத்தமான செயல்களைப் பொறுத்துக் கொண்டிருந்தோம். இனி அது இந்தியாவாக இருப்பினும் எம்மைப் பேய்க்காட்ட முடியாது'' என முழங்கியிருக்கிறார். இருந்தாலும், தமிழ் நாட்டில் இயங்கிவரும் வெவ்வேறு தனித்தனியான தீவிரவாதக் குழுக்கள் அனைத்தும், தனித் தமிழீழம் ஒன்றை நிறுவுவதற்கு ஆயுதப் போராட்டம் ஒன்றைத் தவிர வேறு மாற்றுவழி ஏதும் இல்லை என்பதில் அசையாத நம்பிக்கையுடன் செயற்பட்டு வருகின்றன.

தற்பொழுது, ஸ்ரீலங்கா ஜனாதிபதி ஜூனியஸ் ரிச்சட் ஜயவர்தனாவால் தொடக்கப்பட்ட வட்டமேசை மாநாட்டை இத்தீவிரவாதக் குழுக்கள் அனைத்தும், இலங்கைத் தீவிலுள்ள ஒரே ஒரு தமிழ் அரசியல் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியை எங்ஙனம் புறக்கணிக்கின்றனவோ அது போல வெகுவாக அலட்சியப்படுத்துகின்றன.

1977ம் ஆண்டு இடம் பெற்ற பாராளுமன்றப் பொதுத்தேர்தலில், தமிழ்ப் பிரதேசங்களின் பாராளுமன்ற உறுப்பினருக்குரிய ஆணைகள் அனைத்தையும், தமிழர் விடுதலைக் கூட்டணி கைப்பற்றி இருந்தது. ஆனால், உடனடியாகவே, தமிழர் விடுதலைக்கூட்டணி தமிழீழத் தனி நாட்டுக் கோரிக்கையை முன் வைத்தே தேர்தலில் வெற்றி பெற்றிருந்தமையால், சிறீலங்கா அரசின் ''ஐக்கிய இலங்கை'' என்ற கோட்பாட்டுடன் ஒருங்கிசைய முடியாது பாராளுமன்றத்தில் இருந்து வெளிநடப்புச் செய்யவேண்டியிருந்தது. ஆனால், தீவிரவாதக் குழுவான தமிழீழ விடுதலைப் புலிகளும், மற்றைய அமைப்புக்களும், த.வி.கூ. ஜயவர்த்தனாவுடன் பேச்சுவார்த்தைக்கு இணங்கியதில் இருந்து, தனது இலட்சியத்திலிருந்து நழுவி, ஸ்ரீலங்கா அரசிற்கு அடிபணிந்து விட்டதாகக் கருதுகின்றன.

தமிழியக்கங்களிலேயே, மிகவும் கட்டுக்கோப்பாக, சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட, மிகவும் பலம் மிக்க கொரில்லா அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் காலம் காலமாகத் தோல்வியுற்ற பேச்சுவார்த்தைகளில் தமிழர் விடுதலைக் கூட்டணி இறங்கியிருப்பது தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் சூனியத்தை எடுத்துக்காட்டுவதாகக் கருத்துத் தெரிவிக்கின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லண்டன் பல்கலைக்கழக மொன்றின் விரிவுரையாளரான திரு. பாலசிங்கம், தமிழீழ விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ பேச்சாளராக நியமனம் பெறும் முன்னரே, சென்னையில் வைத்து ''ரெவியூ'' என்ற பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில் பின் வருமாறு கூறுகிறார். ''தோல்வியுற்று வரும் பேச்சு வார்த்தைகள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மேலும் ஒரு புதிய நிலைப்பாடொன்றைக் குறித்துக் காட்டுகின்றன''. மேலும் பேச்சு வார்த்தைகள் மூலம் தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் கொடுத்தாலும் கூட, ஒன்றுபட்ட தமிழ்த் தேசிய இனத்தின் பரிபூரணமான சம்மதத்தை அது பெறமாட்டாது என்பதால், அத்தீர்வு சட்டபூர்வமாகாது என்கிறார் பாலசிங்கம். மற்றையோரும், த.வி.கூ. யின் சிக்கலான இக்கட்டான நிலையைக் காண்கின்றனர். ஸ்ரீலங்காவின் வட பகுதியில் உள்ள யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ஒரே ஆங்கிலப் பத்திரிகையான ''சட்டடே ரெவியூ'' (தற்போது தடைசெய்யப்பட்டுள்ளது) முன்னாள் ஆசிரியரான திரு. சிவஞானமும் மற்றையோரும் த.வி.கூ. ஆனது 1977ம் ஆண்டின் தேர்தல் விஞ்பனத்தை மீறிவிட்டதாகக் கருதுகின்றனர்.

தீவிரவாதக் குழுக்கள் அனைத்தும், தமிழர் விடுதலைக் கூட்டணியை, பழமைவாதிகளால் வழிநடத்தப்பட்டு, ஜயவர்த்தன அரசிற்கு விற்கப்பட்டுவிட்ட ஸ்தாபனமாகவே கருதுகின்றன. ''எமது உத்தேச விடுதலை இயக்கங்களின் ஒருங்கமைப்பில், த.வி.கூ.இற்கு எந்தவித இடமும் வழங்கப்படக்கூடிய சாத்தியக்கூறு இல்லை'' என பாலசிங்கம் கூறுகிறார். த.வி.கூ. இற்குத் தமது பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டு, பாராளுமன்றம் செல்வதைத் தவிர வேறு வழி கிடையாது. அங்ஙனம் இவர்கள் செய்வார்களேயானால், இவர்கள் தமிழ் மக்களிடமிருந்து அந்நியப் படுத்தப்படுவார்கள். எனவே பேச்சு வார்த்தைகளைத் தொடர்வதே த.வி.கூ.ஆல் இயலக்கூடிய மூன்றாம் காரியம். அதற்கும் தடைகள் ஏராளம் உண்டு என்பதும் வெளிப்படை. சிங்களப் பெருந்தேசிய இனத்தின் அபிலாஷைகளைப் பிரதிபலிப்பவர்களாகிய பௌத்த குருமாரும், மாநில சுயாட்சிக்கும் மிக மிகத் தாழ்வான அமைப்பான மாவட்ட அபிவிருத்தி சபைகளை மட்டுமே தமிழ்ப் பிரதேசத்தில் அமைப்பதற்கு சம்மதம் தெரிவித்துள்ளனர். ஆனால் இளைய தலைமுறையின், இளந் தீவிரவாதக் குழுக்கள் த.வி.கூ. இன் இரண்டுங்கெட்டான் நிலையை தெளிவாக எடுத்துக்காட்டியிருப்பினும், இக்குழுக்களுக்குள்ளேயும் ஒற்றுமையின்மை காணப்படுகின்றது இத் தீவிரவாத இளைஞர் குழுக்களில், மதுரையில் இயங்கிவரும் தீவிரவாத குழுக்கள் பின்வருமாறு:

**(1) தமிழீழ விடுதலைப் புலிகள்:** மிகப் பெரிய இயக்கம்; 1972ல் புதிய தமிழ்ப் புலிகள் என ஸ்தாபிக்கப்பட்ட இவ் இயக்கம் 1976ல் தமிழீழ விடுதனைப் புலிகள் என்ற தற்போதைய பெயரைச் சூடிக்கொண்டது. நகர்ப்புறக் கெரில்லாப் பாணியில் கட்டமைக்கப்பட்ட இவ் இயக்கம், சமதர்ம சோசலிச தமிழீழத் தாயகத்தை, அமைக்கும் செயற்திட்டத்தைக் கொண்டுள்ளது. இவ் இயக்கத்தை இருபத்தாறு வயது நிரம்பிய பிரபாகரன் முன்னெடுத்துச் செல்கிறார். இத் தமிழீழ விடுதலைப் புலிகள் சிறீலங்காவின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில், புதிய கெரில்லாப் போராளிகளைப் பயிற்றுவிக்கும் வகையில், தலைமறைவான இரகசிய அமைப்புக்களை வெற்றிகரமாக அமைத்துவிட்டதாகவும், தென் இந்தியாவில் தமக்கு எவ்வித பயிற்சித் தளமும் இல்லையெனவும் அறிவிக்கின்றனர்.

**(2) தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்:** 1979ம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளில் இருந்து விலகிச் சென்ற, உமாமகேஸ்வரன் தலைமையிலான இயக்கம்; இவர்களுடைய நடவடிக்கைகளில்' முக்கியமானவை மாபெரும் மட்டக்களப்பு சிறை உடைப்பும், ஸ்ரீலங்காவின் கரையோரத்துக்கு வெகு தூரமாக, அமைக்கப்பட்ட மறைமுக வானொலியமைப்புமாகும். இவ் வானொலியின் அலைவரிசைகள், ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் கண்டனக் குரல்களின் எதிரொலியாக இந்திய அரசாங்கத்தால் தடைசெய்யப்படுகின்றன.

**(3) தமிழீழ விடுதலை இயக்கம்:** இவ் இயக்கத்தின் தளபதி குட்டிமணி ஆவார்; இவர் கடந்த ஜூலையில் இடம்பெற்ற சிறைச்சாலைப் படுகொலையில் உயிரிழந்தவர். தற்சமயம் இது சிறி சபாரட்டினத்தால் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.

**(4) தமிழீழ இராணுவம்:** தம்பாப்பிள்ளை மகேஸ்வரன் தலைமையில் இயங்குகின்றது. சிறிலங்காவின் கிழக்குக் கரையில் உள்ள காத்தான்குடி வங்கியொன்றில் ஐந்து கோடி ரூபாவைக் கொள்ளையடித்ததன் மூலம் கடந்த பெப்ரவரி மாதத் தலையங்கத்தில் இடம் பிடித்துக் கொண்டது இவ் இயக்கம்.

**(5) ஈழ ஆய்வுக்கழகம்:(EROS)** 1976ம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒரு பகுதியாக இருந்தவர்கள். ஆனால் தமக்கென ஒரு பாணியில், தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பதாக பிரகடனம் செய்கின்றனர்.

**(6) ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி:** வெளிநாடுகளில் உள்ள தமிழ் மாணவர்கள் மத்தியில், முனைப்பாக இயங்கும் இயக்கம்.

**(7) தமிழீழ விடுதலை இராணுவம் TELA:** எல்லா இயக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கங்களிலும் மிகச்சிறிய கெரில்லா இயக்கம்.

அனைத்து இயக்கங்களும், தமது சரியான அங்கத்தவர்களின் எண்ணிக்கையை வெளிப்படுத்தாவிடினும், எல்லாவற்றுள்ளும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமும், கூடிய அளவில் உறுப்பினர்களைக் கொண்டுள்ளன என்பதைச் சகலரும் ஏற்றுக்கொள்கின்றனர். உண்மையான ஆய்வொன்றில், ஒட்டு மொத்தமாக, 5,000 இளைஞர்கள் இத்தகைய ஸ்தாபனங்களில் இருப்பதாகவும், இதில் மூன்றில் ஒரு பங்கினரே பயிற்றுவிக்கப்பட்டு, ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் ஈடுபடத் தயாராய் இருக்கின்றனர் எனவும், வெளியாகி இருக்கின்றது.

சிறீலங்கா இராணுவத்தில், 11,000 பயிற்றுவிக்கப்பட்ட ஆயுதம் தரித்த வீரர்கள் உள்ளனர். ஆனால் பிரிவினைவாதக் குழுக்களோ, 6,000 தமிழ் இளைஞர்கள் கொண்ட ஒரு படையை தாம் நிறுவிவிட்டால், தமது இலட்சியத்தை நிறைவேற்றி விடலாம் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டு அதில் தீவிரமாகச் செயற்பட்டும் வருகின்றனர்

அனைத்து இயக்கங்களுக்கும், அடிப்படை இலட்சியம் ஆயுதப் போராட்டத்தினூடான சோசலிசத் தமிழீழம் ஆயினும், அதனைப் பெறுவதற்கான ஒரு பொது வேலைத்திட்டம் இவர்களிடையே இன்னும் அமைக்கப்படவில்லை. அரசியல் அவதானிகளின் கருத்துப்படி, பிரபாகரன் உமாமகேஸ்வரன் தரத்தில் இல்லாத சிறிய தீவிரவாத குழுக்களின் தலைவர்கள் ஒருங்கிணைந்ததாலும், இரு பெரும் இயக்கங்களான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும். தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமும் ஒருங்கிணைவது மிகவும் கடினமான காரியம் எனப்படுகிறது. ''ஒற்றுமையே இன்று உடனடித் தேவை'' என உமாமகேஸ்வரன் கூறுகையில், பிரபாகரன், ''1982ல், ஒருங்கிணைவு முயற்சிக்கு வித்திட்டதாகவும், மற்றைய இயக்கங்கள் தமது வேறுபாடுளை மறந்து, தமக்குள் ஓர் ஒருங்கமைப்பை ஏற்படுத்தி, ஒரு பொது வேலைத்திட்டத்தை அமைத்து அதன் வழி செயற்படின் ஒருங்கிணைவு சாத்தியம்'' என்கிறார். மேலும் கூறுகையில், ''இதுவரை எவ் இயக்கங்களும் அத்தகைய ஒரு செயற்திட்டத்தை அமைத்து அதன் கீழ் செயற்படவில்லை'' என்கிறார்;

பாலசிங்கம் கூறுகையில், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமானது, மிகத் தெளிவாக வரையறுக்கப்பட்ட, அரசியல், இராணுவச் செயற்திட்டத்தைக் கொண்டதாகவும், அவற்றை அது தனது அரசியல் தஸ்தாவேஜுகளில் கூறியுள்ளதாகவும் கூறுகிறார். ஆனால் அதே வேளை, மற்றைய இயக்கங்களிடம் இத்தகைய தெளிவாக வரையறுக்கப்பட்ட திட்டங்கள் இல்லை என்றும் கூறுகிறார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமே மிகவும் சிறப்பாக ஒருங்கமைக்கப்பட்டது என்பதால், அதனுடைய அரசியல் இராணுவச் செயற்திட்டங்களை ஏனையோரும் ஏற்றுக்கொள்கின்றனர் என்கிறார் பாலசிங்கம். இத்தகைய ஒருமையைப் படுத்தப்பட்ட இராணுவத் தலைமையைத் தாம் மிகவும் விரும்புவதாகவும் கூறுகிறார். மக்களை அமைப்பு ரீதியாக ஒன்றுதிரட்டி, அவர்களை அரசியல் மயப்படுத்தி, தேசிய விடுதலைக்கும், சோசலிசப் புரட்சிக்கும் ஆன ஒரு மக்கள் யுத்தத்திற்கு, அவர்களை அணிதிரட்டுவதே தமது போராட்டத்தின் முழுச் செயற் திட்டமாகும் எனத் தமிழீழ விடுதலைப் புலிகளின் உத்தியோக பூர்வ ஏடுகள் பகர்கின்றன. மேலும், இப் போராட்டம், தேசிய விடுதலைப் போராட்டத்தையும். வர்க்கப் போராட்டத்தையும் ஒருங்கிணைத்ததாகவே அமையும்; இது தேசிய விடுதலையையும், சோசலிசத்தையும் ஒரு புரட்சிகரச் செயற்திட்டத்தில் ஒருங்கிணைத்ததாகவே அமையும் என்றும் அவை தெரிவிக்கின்றன.

எமது ஆயுதப் போராட்ட இலக்குகளானவை வெறுமனே சிறீலங்கா அரச இராணுவத்தினருடன் மோதுவதுடனோ, அன்றி புரட்சிகர எதிர்ப்பின் வெளிப்பாடாக மட்டுமோ அமையாது, மக்கள் போராட்டத்தின் மறுவடிவமாகவும் அமையும் என்கின்றனர் தமிழீழ விடுதலைப் புலிகள்.

**ஒரு புரட்சிகரத் தலை மறைவு இயக்கமாக, அரசியல்—இராணுவப் பிரிவுகளைக் கொண்டு, மக்கள் மத்தியில் மக்களோடு மக்களாக ஜீவிக்கும் கொரில்லாக்களால் நிறைந்தது இத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்.**

பெருகிவரும் மக்களின் ஆதரவு காரணமாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியான முன்னணிக் கெரில்லாப் போராட்டமானது, தேசிய விடுதலைக்கான ஒரு மக்கள் போராட்டமாக தற்போது உருக்கொண்டு வருகிறது. தமிழீழ விடுதலைப் புலிகளின் உத்தியோக பூர்வ ஏடான ''விடுதலைப் புலிகள்'' (19 மார்ச் 84) பத்திரிகையில் பின்வருமாறு கூறப்படுகிறது—

**''தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையின் கீழ் ஒரு புதிய மக்கள் இராணுவம் உருவாகிறது''.**

மன்னார், வல்வெட்டித் துறையில் பாதிக்கப்பட்டவருக்கு நிதி சேகரிப்பதற்காக யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் வீடு வீடாகச் சென்றிருந்தனர். தம்மால் முடிந்ததைக் கொடுத்துதவியவரிற்பலர் தாம் வேறுதேவைகளுக்காகவும் அதாவது இயக்கத்திற்காகவும் பணம் வழங்கத் தயாராக இருப்பதாக அறிவித்துக் கொண்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஐரிஷ் விடுதலை வீரன் தான்பரீன்

**முந்திய இதழில்......**

இங்கிலாந்துடன் பலவந்தமாக இணைக்கப்பட்டிருக்கும் நாடு அயர்லாந்து. அயர்லாந்தின் விடுதலைக்கான போராட்டம் பல ஆண்டுகளாக நடந்து வந்தது. தான்பரின் என்ற 20 வயது வாலிபன் 1914ல் ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை வைத்து அதனை மேற்கொண்டான். இளம் வயதினனான அவனுடன் கூட்டுச் சேர்ந்திருந்தோர் பதின்மூன்று பேர் மட்டுமே. அக்காலத்தில் அவர்களுக்கு ஆதரவும் இருக்கவில்லை. ஆயினு நம்பிக்கையுடன் செயற்பட்டான். வெடி மருந்து ஏற்றிவந்த பொலிஸ் வாகனம்மீது தாக்குதல் நடத்தி அதனைக் கைப்பற்றினான். ஹோகன் என்ற நண்பனை பொலிசாரின் கையில் இருந்து மீட்டான். இதனால் தேடப்படுபவன் ஆனான்.

வெகுகாலமாக மறைந்து திரிந்து, தீவிரமான காரியங்களை செய்வதற்கு வழியில்லாமல் பொழுதுபோவதைக் கண்டு மனம் வருந்திய தான்பீரின் டப்ளின் நகரில் மீண்டும் வேலைகளைத் தொடங்கினான். அச்சமயம் ஒரு பாதிரியார் போல் வேஷம் போட்டுச் செயற்பட்டான். ஒரு சமயம் சைக்கிள் காற்று இறங்கி ரப்பர் சக்கரம் கிழிந்ததால், வேறு வழியின்றி பொலிசாரின் உதவியையே நாடினான். அங்கே சுவரில் ஒட்டப்பட்டிருந்த அறிக்கையொன்றில் ''ஆயிரம் பவுண் இனாம், அயர்லாந்தில் கொலை செய்த கொலைகாரன் தேவை! தான்பீரின்! மூன்றாவது தீப்பெரரித் தொண்டர் பட்டாளத்தின் தளகர்த்தாவென்றும் அழைக்கப்படுகின்றவர்'' என இருந்தது அந்த அறிக்கையைப் படிக்கையிலும் தான்பீரின் சலனமின்றிசிரிக்காது நின்றான். தமிழ்த் தேசிய இனத்திற்காகப் போராடும் விடுதலைப் போராளிகள் மிக வெற்றிகரமாக கொரில்லா தாக்குதல்தல்களை நடத்தி முன்னேறுவதற்கு தான்பீரின் போன்ற மலை பெயர்ந்தாலும் நிலை பெயராத தீரர்கள் இருப்பதே காரணமாகும்.

டப்ளின் நகரில் இருந்த ரகசியப் பொலிசார் திருடர்களையும், சூதாடிகளையும், சாதாரண கலகக்காரரையும் விட்டு அரசியல்வாதிகளையும், புரட்சிக்காரரையும் தேடினர். தங்களுடைய உதவிக்காக பழைய திருடர்களையும், கையாட்களையும் கூடச் சேர்த்துக் கொண்டனர். ஐரிஷ் பாஷையில் பாடல்கள் எழுதி வைத்திருப்போர் கூட கைது செய்யப்பட்டனர். எமது நாட்டில் அரசியல் சார்பான புத்தகங்கள், ரஷ்ய நாவல்கள், கவிதை கதை அல்லது இயக்கச்சார்பான ஒரு துண்டுப்பிரசுரம் வைத்திருப்போரைக் கூட இராணுவம் கைது செய்து வதைப்பது போலவே அங்கும் ஆடவரும் பெண்களும், சிறுவர்களும் கூட சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

1919ம் ஆண்டு கடைசியில் முதன்மையான இரகசியப் பொலிசார்நடுத் தெருக்களில் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். சுட்ட தொண்டர்கள் படைகளிடம் சிக்காமல் தப்பி வந்தனர். தொண்டர்கள் இரகசியப் பொலிசாரை அழித்து விட உறுதி செய்ததை தொடர்ந்து அவர்கள் தெருக்களில் நடமாடாமல் டப்ளின் மாளிகைக்குள்ளேயே பதுங்கிக் கிடந்தனர். இலங்கையின் வடபகுதிப் பயங்கரவாதிகளை அழித்தே தீருவோம் என வந்தோரை விடுதலைப் போராளிகள் சுட்டு அடக்கியதைப் போல்வே தான்பீரின் முதலானோர் மேற்கொண்ட நடவடிக்கையில் பலர் ராஜினாமாச் செய்தனர். சிலர் புரட்சிக்காரரின் வழிக்கு வருவதில்லை என ஒப்பந்தம் செய்து கொண்டனர். மற்றும் சிலர் சர்க்கார் தஸ்தாவேஜுகளையும், தகவல்களையும், கொடுத்துப் பேருதவி செய்தனர். ஒற்றர்கள் தான்பீரின் கூட்டத்தாரைப் பின்பற்றிச் செல்வது தங்கள் உடம்புக்கு நல்லதல்ல என்று, வெகு சமீபத்தில் கண்டு விட்டாலும், காணாதது போல் விலகி விடுவார்கள். எமது நாட்டு விடுதலைப் போராளிகளாலும் மேற் கொள்ளப்பட்ட இந்நடவடிக்கை அயர்லாந்திலும் மேற்கொள்ளப்பட்டது மட்டுமல்ல, விடுதலைப் போராளிகள் தம் நடவடிக்கைகளைச் சுதந்திரமாக செயற்படுத்த வழி கோலியது. சில காலத்தின் பின் தாக்குதல் நடவடிக்கையில் வேறு சில முறைகளைக் கையாண்டனர். பொலிசாரை வதைத்ததை அரசு பொருட்படுத்தாததால், பெரிய அதிகாரிகளை வதைத்து இங்கிலாந்தின் கண்ணை திறக்க அவர்கள் தீர்மானித்தனர். இதன் மூலம் உலக நாடுகள் ஐரிஷ் அரசாங்கத்தில் பிரச்சனை இருப்பதை தெரிந்து கொள்ளும் என நம்பினர். முதலில் அயர்லாந்து வைசராயான லார்டு பிரெஞ்சைத் தாக்க முடிவெடுத்தனர். அவரைச் சுடுவது சாமானிய விஷயமில்லை. அவர் போகும் நேரம், பாதையெல்லாம் தெரிந்தாலும் கடைசி நேரத்தில் முன்னால் போட்ட திட்டங்களை மாற்றி விடுவது வழக்கம். எனினும் தான்பீரின் முதலானோர் திட்டம் இட்டார்கள். இதன்படி 1919ம் ஆண்டு டிசம்பர் மாதம், 19ம் திகதி வெள்ளிகிழமை சைக்கிளில் ஆஷ்டவுனை நோக்கி விரைந்தார்கள். தான்பீரின் தலைமையில் சென்ற பதினொரு பேரும், வைசராயின் வ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ருகைக்காக காத்திருந்தனர். மோட்டார் வரும் ஒலிகேட்டதைத் தொடர்ந்து அவர்கள் தயாராகி தான்பீரின் உரவண்டியொன்றை காரை நிறுத்துவதற்காக சாலையின் மத்தியில் உருட்டினுன். இதைத் தடுத்த பொலிசை சுட்டு அடக்கினர். முதலில் வந்த காரை பதினொரு பேரும் தாக்க, கார் விரைந்து சென்றுவிட்டது. ஆனுல் இரண்டாவது காரிலேயே வைசராய் வருவார் என்பதால், அதை மறித்துச் சுட்டு, வெடிகுண்டுகளையும் வீசினர். காரில் இருந்தோரும் பதிலுக்குச் சுட்டனர். வெகு நேரம் நடந்த அருஞ்சமரில் மார்டின் ஸாவேக் தாய் நாட்டுக்காக வீரமரணமடைந்தான். தான்பீரின் தன் இடதுகாலில் குண்டு தாக்கியபோதும் தொடர்ந்து போராடி பிடிபடாமல் அனைவரும் நகருக்குள் போனுர்கள். அவர் வைசாராயைக் கொன்றதாக எண்ணினுர்களே தவிர அவர் இறக்கவில்லை. ஏனெனில் வழக்கத்திற்கு விரோதமாக முதற் காரிலேயே சென்று விட்டார். இவரைத் தாக்க எடுத்த பல முயற்சிகளில் தோல்வி கிடைத்தது. ஆஷ்டவுன் சம்பவத்திற்குப் பின்னுல் அவரைச் சுடச் சந்தர்ப்பம் கிடைக்கவல்லை.

டப்ளின் பத்திரிகைகள் தொண்டர் செய்கைகளையும், ஆர்ஷ்டவுன் போராட்டத்தையும் கண்டித்தன. ஐரிஷ் மக்களின் பணவுதவியுடன் இயங்கும் ''ஐரிஷ் இன்டிபென்டென்ட்'' ஆஷ்டவுன் போராட்டம் பற்றி எழுதுகையில் கொலைகாரர்கள், கொடுங் குற்றம், அக்கிரமம், படுகொலை முதலிய கடுமையான பதங்களைப் பிரயோகித்தது. இதனைக் கண்ணுற்ற தான்பீரின் குழுவினர் அப் பத்திரிகைக் காரியாலத்தில் நிகழ்த்திய தாக்குதலைப் தொடர்ந்து, டப்ளின் பத்திரிகைகள் எல்லாம் அவதூருக தொண்டர்படை பற்றி எழுதுவதில்லை. இன்டிபென்டென்ட் பத்திரிகை நாளடைவில் பிரிட்டிஷார் செய்த கொடுமைகளை விமர்சித்தது. எனவே இத்தகைய தாக்குதல் நடவடிக்கைகள் அவசியம் என்பதும் ஆயிரம் சொற்பொழிவுகளை விட, ஆயிரம் கருத்தரங்குகளை விட ஒரு வெற்றிகரமான தாக்குதல் சிறந்த பிரச்சார நடவடிக்கை என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

1920ன் ஆரம்பத்தில், அயர்லாந்து பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் நிச்சயமான போர்தொடுத்து விட்டது என்பதை உலகறியச் செய்வதற்காக, புதிய முறையில் பொலிஸ்காரர் தங்கியிருந்த படை வீடுகளைத் தாக்கினர். இதனுல் பொலிஸார் பெரிய படை வீடுகளில் கூட்டமாகத் தங்கி, நிறைந்த ஆயுத, பாதுகாப்புடன் இருந்தனர். பொலிஸார் காலி செய்த படைவீடுகளை ஒரே இரவில் தொண்டர்கள் அக்கினிக்கு இரையாக்கினர். இலங்கையின் வடபகுதியில் நடாத்தப்பட்ட கொரில்லாத்தாக்குதல்ககளால் சில இராணுவ முகாம்கள் காலி செய்யப்பட்டன. எனினும் மீண்டும் வர நினைத்த இராணுவவீரரின் வரவைத் தடுக்க, முன் எச்சரிக்கையாக அண்மையில் குருநகர் இராணுவமுகாம் தாக்கப்பட்டது.

பீலர்கள் எந்தெந்தக் கிராமங்களை விட்டு வெளியேறினுர்களோ அங்கெல்லாம் தொண்டர்கள் தங்களுடைய பொலீசை நியமித்துக் கொண்டு, திருடர்களையும், கொள்ளைக்காரர்களையும் அடக்கி வந்தனர். மீத்தலுகாமாவில் கொலைக்குற்றம் செய்த மாஜி பிரிட்டிஷ் சிப்பாய் விசாரணையின்றி விடுவிக்கப்பட்டான். பொலிஸார் அவனைத் தொண்டர்கையில் சிக்காமல் செல்லும்படி அறிவுறுத்தி அனுப்பினர். ஆனுல் விடுதலையடைந்து ஐந்து நிமிஷத்துக்குள் ஆங்கிலச் சிப்பாய் தொண்டர்களால் கைது செய்யப்பட்டு மரணதண்டனைக் குள்ளானுன்.

தமிழ்த்தேசிய இனத்தின் நடவடிக்கையில் கொள்ளைக்காரருக்கு மரணதண்டனை அழித்து வருகின்றனர். நீதிமன்றமும் சிறைச்சாலையும் அமைக்க முடியாத நிலையிலும், விடுதலைப் பாதையை முன்னெடுத்துச் செவதற்காக பொலிஸாரை வெளியேற்றி விட்ட நிலையிலும் உள்ள விடுதலைப் போராளிகள் எச்சரிக்கைக்குப் பின் மரணதண்டனையை வழங்குவது தவிர்க்க முடியாது.

தான்பீரின் தீப்பொறி தொண்டர்படை உதவியுடன் மூன்று படை வீடுகளைத் தாக்கினுன். முதலில் மேற்கொள்ளப்பட்ட டிரங்கன் படைவீட்டுத் தாக்குதல் முடிவடைய வெகு நேரம் பிடித்தது. காலை இளஞ்சூரியனின் கிரணங்கள் வீசியபின்னும் போராடினர். பின்னர் தொண்டர்கள் ஆயுதங்களைப் பெற்றுக் கொண்டு, அவர்களை கைதிகளாக்கி, ஊருக்கு வெளியே கொண்டுபோய் விடுதலை செய்தனர். அக்கைதிக் கூட்டத்தில் ஆறு கான்ஸ்டபிள்களும், இரண்டு சார்ஜன்டுகளும் இருந்தனர். தொண்டர்படைகளில் ஒருவருக்குக் கூட காயமில்லை. அடுத்தாற் போல் தான்பீரின் கூட்டத்தார் தாக்கிய இடம் ஹால்லி போர்டு அங்கிருந்த பொலிஸாரும், தொண்டர்களிடம் சரணுகதியடைந்து, ஆயுதங்களைப் பறி கொடுத்தனர் ரியர்லால் என்னும் இடம் அடுத்துத் தாக்கப்பட்டது. அங்கு நடந்த உக்கிரமான போராட்டத்தில் தொண்டர்கள் பொலிஸாரை முறியடிக்காமலே திரும்ப நேரிட்டது. தொண்டர்கள் படைவீடுகளை எரித்தார்கள். பல பகைவர்கள் இறந்தனர். இருவர் சுடப்பட்டு இறந்தனர். தான்பீரின் உட்பட சில தொண்டர்களுக்குச் சிறிய காயமேற்பட்டது.

ஆரம்பத்தில் தான்பீரின் குழுவில் மிக குறைந்தோரே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்து தாக்குதல்களை நடத்தினர். தாக்குதலின் வெற்றிகளால் சிலர் பலராயினர். படிப்படிப்படியாக போர்முறைகளை மாற்றிச் சென்ற அவர்கள் இறுதியில் படைவீடுகளைத் தாக்கி, பொலிஸாரைச் சரணகதியடைய வைத்து, வெற்றி கண்டனர். இத்தகைய கொரில்லாத் தாக்குதல்களை படிப்படியாக எமது நாட்டின் நிலைகேற்ப மேற்கொண்டு வரும் விடுதலைப் போராளிகளின் பாதையிலும் வெற்றிக்கு ஐயமில்லை.

1920ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் தேசியப் போராட்டம் மேலும் வலுவடைந்தது. ஆங்கிலப்பட்டாளத்தார் கொடுமைகளால் மடிவதிலும், புரட்சிப்படையிலே சேர்ந்து வீரமரணமடைவது மேல் என்று மக்கள் எண்ணினர்கள். தொண்டர்களுக்கு உணவும், உடையும் கொடுத்ததோடு அவசியமான செய்திகளையும், துப்புக்களையும் அறிந்து உதவி செய்தார்கள். அதேசமயம் தொண்டர்படையும் தீரமான பட்டாளமாகி விட்டது. 1918 இல் தான்பீரின், டிர்ஸியிடம் கூறியவாக்கு இரண்டு வருடங்களில் பலித்து விட்டது. முதலில், போராட்டத்தை ஆரம்பித்தால் அது பின்னல் நாடெங்கும் பெருகி விடும் எனத் தான்பீரின் கூறியிருந்தான். அதன்படி தேசத்து வாலிபர்கள் சுதந்திரப்படையில் சேர்ந்ததோடு ஐரிஷ் ஜனங்களும் சுதந்திரம் பெற்றே தீர வேண்டுமென விரதம் பூண்டனர். அயர்லாந்தின் சுதந்திரத்தை நசுக்க, இங்கிலாந்தும் வெறி கொண்ட செயல்களில் இறங்கி நின்றது. இந்நிலைப்பாடானது போராட்டத்தை ஆரம்பித்ததன் காரணத்தால், மக்கள் விழிப்புணர்வு அடைந்து செயற்பட்டார்கள். என்பதைக் காட்டுகிறது. இதனூடாக, போராட்டதிற்கான சூழ்நிலைகளை எம்மால் தோற்றுவிக்கமுடியும்; அது தானே உருவாகுமென காத்திருக்க வேண்டியதில்லை என்பது தெளிவடைகிறது. தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராளிகளும் போராட்டத்தை முதலிலே ஆரம்பித்து விட்டார்கள். இவ்வாறு மேற்கொண்ட தாக்குதல்களால் ஏற்பட்ட விழிப்புணர்வால் இளைஞர்கள் முழு நேர உழைப்பாளிகளானர்கள். மக்கள் தயாராகிக் கொண்டிருப்பதும் அதிகரித்து வருகிறது. முதலில் போராட்டத்தை ஆரம்பித்ததால் அது பின்னல் நாடெங்கும் பெருகி வரும் எனத் தான்பீரின் கூறியதைப்போல விடுதலைப் போராளிகளின் தாக்குதல்கள் மக்களை தயார்படுத்தியது.

தான்பீரின் ''பறக்கும் தொண்டர் படை'' யை அமைக்கத் திட்டமிட்டான். இப்படை முழுவதும் சுற்றித் திரிந்து எங்கெங்கு அவசியம் ஏற்படுகிறதோ அங்கெல்லாம் போரிட வேண்டும் என்றும், அடிமை நாட்டில் அமைதி நிலவி வந்தால் ஆள்வோருக்கே சௌகரியம் என்பதால் இடைவிடாது எதிர்க்கவே தான்பீரின் ''பறக்கும் தொண்டர் படை'' யை நியமித்தான். ஒரு முறை தான்பீரினும் டிரிஸியும் கரோலின் என்ற நண்பர் வீட்டில் படுத்திருக்கையில் சிப்பாய்கள் வந்து விட்டனர். தான்பீரின் இருகைகளிலும் ரிவால்வரை வைத்திருந்து சுட்டான். அவர்கள் இருந்த அறையின் எல்லாப் பக்கமும் குண்டுகள் பாய்ந்தன. மரணம் நிச்சயம் என்று தெரிந்த போதிலும், எதிரிகளில் எத்தனை பேரை வதைக்க முடியுமோ, அத்தனை பேரையும் தீர்த்துவிட்டே மடிய வேண்டுமென்று வீராவேசம் கொண்டு நின்றான். கூரையின் மேல் நின்று கொண்டும் கூரையில் துவாரம் அமைத்து, அதன்வழி உட்புகுந்து, உத்திரக்கட்டையை பிடித்துத் தொங்கிக் கொண்டும் சுட்டான். வலது கைப் பெருவிரல் ஒடிந்து, உடம்பு முழுவதும் குண்டுபட்ட புண்களுடன் கூட தான்பீரின் தப்பினன். அவனது நண்பனும் தப்பிக் கொண்டான். வீரமும், தியாக உணர்வும், உறுதியும் கொண்டு செயற்படும் விடுதலைப் போராளிகளை கூலிக்காக துப்பாக்கி ஏந்துவோர் எளிதில் பிடிக்க முடியாது. உண்மையான போராளிகளைப் பிடிக்க முடியாது இருக்கக் காரணம் வீரமும் தியாக உணர்வும், சுதந்திரத் தாகமும் கொண்ட அவர்களின் செயற்றிறன் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

தான்பீரின் நிலையாக ஓரிடத்தில் நிற்க முடியாதபடி தேடுதல் நடைபெற்றது. அவன் தனக்குச் சிகிச்சை அளித்து உதவிய ''பிரிகிட்மலோன்'' என்னும் பெண்ணை மணந்துகொண்டான். 1921, ஜுன் ஆங்கிலேயருக்கும் அயர்லாந்திற்கும் சமாதானம் ஏற்படுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் அவனது திருமணம் நடந்தது. சமாதான காலத்தில் மக்கள் ''சுதந்திர வீரர்'' என்று தான்பீரின் முதலானோரைப் பாராட்டினர். இரு வருடங்களுக்கு முன்னல் அவர்களைக் ''கொலைகாரர்'' என்று கூறிவந்த ஜனங்களே பின் போற்றினர். இன்று தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்காக தாக்குதல்களை நடத்தும் போராளிகளை ''பயங்கரவாதிகள்'' ''கொலைவெறிப் பாதகர்கள்'' என்றெல்லாம் கூறும் மக்களும், தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளாத சக போராளிகளும்கூட ஒரு காலத்தில் உண்மையை ஏற்றுக் கொள்வார்கள்.

சமாதான உடன்படிக்கையில்கையெழுத்து இடுவதற்கு முன்னர், தான்பீரின் ஸீன், ஹோகன் முதலிய நண்பர்களைக் கண்டு, சமாதானத்தைத் தொலைத்து சண்டையை மறுபடி தொடங்கி, பூரண சுதந்திரம் அடையுப் போராடுவோம் என வேண்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டினான். அவனது முயற்சி தோல்வியடைந்ததால் அமெரிக்கா சென்றான். தான்பீரின் தமது அரும்பெரும் முயற்சிகள் வீணாகி, தேசம் இரண்டு பிரிவுகளாகி பிளவுபட்டு நிற்பதையும் அந்நிய அரசுக்கு ராஜவிசுவாசமாயிருப்பதாகப் பிரமாணம் செய்ய வேண்டிய கட்டுப் பாடுடைய சுதந்திரம் கிடைத்திருப்பதையும் கண்டு மனம் வருந்தினான். நாட்டில் பிளவுபட்டு நின்றோரிடையே ஏற்பட்ட கருத்துவேறுபாடுகளால் உள்நாட்டுக் கலகம் ஏற்படும் என்ற நிலையில் தொண்டர்கள் தான்பீரினை அமெரிக்காவில் இருந்து மீண்டும் அழைத்தனர். தான்பீரின் மேற்கொண்ட சமாதான முயற்சிகள் தோல்வி அடைந்தன. உள்நாட்டில் கொடிய கலகம் ஏற்பட்டதைத் தொடர்ந்து வேறு வழியின்றி, தான்பீரின் குடியரசுப் படையுடன் சேர்ந்து கொண்டான். பிளவுபட்டு நின்றோரை இணைக்க முற்பட்டு தோல்வியடைந்த போதும், தான்பீரின் தனக்குரிய கடமையை மறவாது செயற்பட்டான். எமது நாட்டிலும் விடுதலைப் போராளிகளிடையேயுள்ள வேற்றுமையுணர்வினை அழித்து, ஒற்றுமையை நிலைநாட்டுவது நம் கடமையாயினும், அது சாத்தியப்படும் வரை காத்திராமல், சரியான பாதையை தேர்ந்து செயற்பட்டு சமாதானத்தையும் நிலைநாட்ட முயல வேண்டும்.

ஒரு சமாதானக் கூட்டத்திற்கு தான்பீரின் சென்று கொண்டிருக்கையில் பட்டாளத்தார் அவனைக் கைது செய்தனர். அவனை இரண்டு மாதத்திற்கும் மேலாக சிறையில் வைத்திருந்து விடுதலையாக்கினர். தேசத்திற்கு இதயத்தையும், தொண்டிற்கு கைகளையும் அர்ப்பணம் செய்த தான்பீரின் தன் கடமையே தவறாது மேற்கொண்டு வந்தான். எத்தனையோ எதிர்ப்புக்கள் மத்தியிலும், குறைந்த வீரர்களை ஆரம்பத்தில் கொண்டிருந்தபோதும் தளராத முயற்சியினால், அவனது படையினரின் தொகை கூடியது மட்டுமல்ல, முழு மக்களும் விழிப்புணர்வு கொள்ள அவனின் தாக்குதல்களே வழி சமைத்ததை யாரும் மறுப்பதற்கில்லை. இவ்வாறே எமது நாட்டில் நடை பெற்ற கொரில்லாத் தாக்குதல்கள், விடுதலைப் பாதையில் விரைந்து நடைபோட துணையாய் அமைந்து வருகின்றது.

**சிவதர்ஷினி**

---

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

## நிராகரிக்கப்....

னைய வடிவமான தமிழரசுக் கட்சி ஏன் அதனைத் தொடர்ந்து நடத்தவில்லை? அவர்களது வர்க்க குணம்சமும், மனோவலிமையற்ற தன்மையும், போராட்டத்தில் ஆர்வமின்மையும், தற்தியாகக் குறைவும் அவர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபடுவதைத் தடுத்தன. அப்போது பின்வாங்கியவர்கள் இப்போது மட்டும் என்ன செய்து விடுவார்கள்? போராட்ட சக்திகள் ஆயுத முனைப்புற்றிருக்கும் இவ் வேளையில் சாத்வீகப் போராட்டங்களை ஆயுதப் போராட்ட சக்திகளுக்குப் புறம்பான சக்திகள் மேற்கொள்வதானது புரட்சிகர சக்திகளை மழுங்கடிக்கவும் பிளவு படுத்தவுமே உதவும்.

ஆகவே இலங்கையின் கடந்த கால வரலாறு கற்றுத் தரும் பாடம் கருதியும் சாத்வீகப் போராட்டத்தை ஆரம்பித்தவர்களது இதயசுத்தியற்ற தன்மை கருதியும், தற்போது ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்கும் சக்திகளது நன்மை கருதியும் 'கூட்டணியினரின் சாத்வீகப் போராட்டம்' அனுமதிக்கப்பட முடியாததும் தொடர்ந்தும் மக்களால் முறியடிக்கப்பட வேண்டியதுமாகும்.

— **செந்தூரன்**

---

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

## சாத்தியமற்ற...

ஒன்று கடந்த உள்ளூராட்சித் தேதலை நிராகரிக்கும் வண்ணம் விடுத்த கோரிக்கைக்கிணங்க 94 வீதமான தமிழ் மக்கள் அதனை ஏற்றுக்கொண்டு வாக்களிக்காதிருந்தனர். — லண்டன் நியூஸ்டேட்மன்) இந்நிலையில்— தேசிய ஒருமைப்பாடு என்பது கற்பனை நிலைக்குப் போய்விட்ட கட்டத்தில் அதற்கான வழிகள் யாவும் இருதரப்பினாலும் மூடப்பட்ட நிலையில் அதுபற்றிப் பேசுவதும் சிந்திப்பதும் அர்த்தமற்றதேயாகும். ஏனெனில் தேசிய ஒருமைப்பாடு என்பது அடைய முடியாத இலட்சியம் ஆகும்.

— **A. M. A. கம்ரூன்**

---

**மக்கள் யுத்தம்:**

அண்மையில் பருத்தித்துறையில் கல்வி கற்பிக்கும் பெண் ஆசிரியர் யாழ்ப்பாணத்திற்கு மினி பஸ்ஸில் வந்து கொண்டிருந்தார். அச்சுவேலியில் வாட்டசாட்டமான ஒரு இளைஞன் கையில் சிறு பார்சலுடன் ஏறிக் கொண்டான். பஸ் கோப்பாயை நெருங்கியசமயத்தில் வளைவு ஒன்றில் இராணுவத்தினர் வாகனங்களை மறித்துசோதனையிட்டுக்கொண்டிருந்தமை தெரிந்தது ,உடனே அவ் இளைஞன் பஸ்ஸினை நிறுத்தும்படி சொன்னான் பார்சலுடன் பாய்ந்தோட எத்தனித்த போது டிரைவரும் பயணிகளும் தடுத்தனர். இராணுவத்தினர் பஸ்ஸினை நோக்கி வருகிறார்கள் எனவும் நீர் ஓடினால் எங்களுக்குத்தான் ஆபத்து எனவும் கூறினர். தடுமாற்றமடைந்த இளைஞன் கையிற் குளிகை ஒன்றை எடுத்து வைத்துக்கொண்டு (சயனைட் ஆக இருக்கலாம்) பார்சலை ஆசனத்திற்குக் கீழே தள்ளிவிட முயன்றான். அதைக் கண்ட பெண் ஆசிரியர் பார்சலைத் தான் வாங்கி தன் கைப்பைக்குள் வைத்துக்கொண்டார். இராணுவத்தினர் பஸ்ஸைச் சோதனையிட்டுச் சென்றுவிட்டனர். பின்னர் இளைஞன் இறங்கிச்செல்கையில் அவனது கண்களைச் சந்தித்த போது உள்ளமும் உடலும் பரவசமடைந்ததாக அவ்வாசிரியர் கூறினார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கலவரத்தால் பாதிக்கப்பட்ட பஞ்சாப்

இந்திய தேசத்தின் ஒருமைப்பாடு, இறைமை ஆகியவற்றுக்குப் பெரும் அச்சுறுத்தலாகப் பஞ்சாப் பிரச்சினை வெடித்துள்ளது. காலத்திற்குக் காலம் இந்திய மாநிலங்களில் தோன்றிய பிரச்சினைகள் மாநில, மத்திய அரசுகளினால் தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ தீர்க்க பட்டு வந்துள்ளன. ஆனால் பஞ்சாப்பில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைபோன்று ஏனைய மாநிலங்களில் இடம்பெறவில்லை. காரணம் பஞ்சாப் பிரச்சனையைத் தீர்ப்பதற்குச் சீக்கியர் ஆயுதமேந்தித் தமது போராட்டத்தை இராணுவ மயப்படுத்தியமை, மற்றும் மத்திய அரசு தரப்பில் சீக்கியரின் கோரிக்கைகள் நியாயமற்றும், சாத்தியமற்றும் இருந்தமை, சமரசப் பேச்சுவார்த்தைகளில் சீக்கியரின் நிராகரிப்புககள் மத்திய அரசின் அசமந்தப்போக்கு என்பன இறுதியில மத்திய அரசை இராணுவ நடவடிக்கைககுத் தள்ளின. இதன் பிரதிபலிபபுக்கள் சீக்கியர் வாழும் பஞ்சாப்பிலும், வெளிநாடுகளிலும், மற்றும சீக்கிய தீவிரவாதிகளுக்கு ஆதரவான வளங்கள் மத்தியிலும் அதிர்ச்சியையும், வன்முறை கலந்த ஆதங்கத்தையும உருவாக்கிய அதேவேளையில் பெரும்பான்மை இந்துக்கள் மத்தியில் அமோக ஆதரவையும பிரதமர் இந்திரா காந்திக்கு உருவாக்கியது. இத்தகைய பஞ்சாப பிரச்சனையை அடுத்து விரிவாக நோக்கலாம.

இந்திய தேசிய இனங்கள் என்ற வரையறைககுள அடங்கும் சீக்கிய இனத்தின் மதம சீக்கியமாகும். மொழியைப் பொறுத்தவரை அவர்களால் குருமுகி ஹிந்தி பேசப்படுகின்றன சீக்கிய மதத்தின் கட்டுமானங்களாய் அமைந்திருப்பவை இந்துமதமும், இஸ்லாமுமே. மொகலாயரின் ஆட்சியின்போது இந்துமதம் அதிக பாதிப்பிற்குட்பட்டிருந்தது. இத்தகைய இந்து இஸ்லாம் ஒற்றுமையின் பின்னணியில் இந்துமதத்தின் வர்ணக் கோட்பாடு, ஒருகடவுள் வாதம், அடுத்து இஸ்லாம் மதத்தின் குறைபாடுகள் ஆகியவற்றைக் களைந்த ஒரு சீர்திருத்த மதமாக குருநானக் என்பவரால் உருவாக்கப்பட்ட சீக்கியமதம் பிற்பகுதியில் பத்தாவது குரு கோவிந் சிந் என்பவரால் போர்க்குணம் மிக்க ஒரு மதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. சீக்கிய மதத்தைப் பின்பற்றுபவர்களின் பெயர்கள் ''சிங்'' என்ற ஒலிகொண்டு முடிய வேண்டுமென அவர் வலியுறுத்தினார். ''சிங்'' என்பது சிங்கமாகும். தலை, முகச் சவரங்களும் தடைசெய்யப்பட்டன. தலையில் இரும்புச சீப்பு, கையில் இரும்பு வளை, இடுப்பில் ஒரு சிறுகத்தி, இக்குணாதிசயங்களின் ஒரு முழு வடிவம் ஒரு சீக்கியனாவான். சீக்கியர் என்ற ஒரு தனித்துவ பண்பாட்டிற்கு அடையாளமாக குரு கோவிந்சிங்கால் கட்டளையாக இவை பிறப்பிக்கப்பட்டன. இத்தகைய ஒரு தனித்துவ பணபாட்டு அடையாளங்களிற்கான போராட்டததிலிருந்தே சீக்கியர்களின் அரசியல் போராட்டமும் தொடங்கியது.

சீக்கிய மதத்தினையும் இந்திய சட்டம் ஏற்று அங்கீகரிக்கவேண்டுமெனச் சீக்கியரால் விடுக்கப்பட்ட கோரிக்கை மத்திய அரசால் நிராகரிக்கப்பட்டு அதற்கான காரணங்களும் கொடுக்கப்பட்டன. இந்து திருமணச்சட்டம் இந்து சொத்துரிமைச் சட்டம் என்பன சீக்கியருக்கும் உரியது எனப்பட்டது. காரணம் சீக்கியர் இந்துக்கள் என்ற வகுப்பிற்குள் அடக்கப்பட்டிருந்தனர். இந்திய சுதந்தர காலகட்டத்தில் ஜின்னா பாகிஸ்தானைப் பிரித்துக் கொடுக்கும்படி பிரித்தானியாவிடம் கோரியபோது குர்தார்சிங் என்பவரின் தலைமைத்துவத்தில் சீக்கியர்களும் சீக்கிஸ்தானைப் பிரித்துத் தரும்படி கோரினர். ஆனால் அக்கோரிக்கை மறுக்கப்பட்டவேளை மவுண்ட பேர்ட்டனின் பிரதிநிதித்துவக் குழுவை பட்டேலும், நேருவும் சநதித்துச் சீக்கியரை இநதிய அரச சட்டத்தில் சேர்க்க வேண்டுமெனக் கோரி அதை அமுலாக்கினர். இக்கால கட்டத்தில் ஆரிய சமாஜம் சீக்கியர்களைத் தாய மதமான இந்து மதத்திறகுவரும்படி அழைத்தது. ஆனால் அது சீககியரின் எதிர்ப்புககுள்ளாகியது. ''நாம் இந்துக்கள அல்ல'' எனறு அவாகள் எதிரப் பிரச்சாரம செய்தனர். இதுவே அவர்களின் தாரக மந்திரமாகப் பிற்காலத்தில் மாறியது. தமமதததைத் தனிமதமாக அங்கீகரிகக மறுத்தமை, இந்துக்களாக மாறறுவதற்கு எடுக்கப்பட்ட பிரயத்தனங்கள என்பவற்றினால் விரகதிகொண்ட சீக்கிய மதத்தினர் மததயில் இதையே ஆதாரமாககொண்டு அரசியலுக்குள நுழைந்த கட்சிதான் அகாலிதாள கடசியாகும். இவ்வாறு மதப் போராட்டப் பின்னணியில் உருவான அரசியல் கடசி காலப்போக்கில் பல அரசியல் கோரிக்கைகளை வைத்துப் போராடத் தொடங்கியது.

இவர்களது அரசியற் போராட்டத்தில் முக்கியமாக இருந்தது ''பஞ்சாபிசுபா'' ஆகும். தாம் வாழும் பகுதியைத் தனி மாநிலமாகவும், இந்துக்கள் வாழும் பகுதியான ஹரியானாவை ஒரு மாநிலமாகவும பிரிக்கவேண்டுமெனப் போராடினர். இப்போ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ராஜ்யத்தில் அகாலிதாள் கட்சி வெற்றியடைந்தது. இவ் வெற்றிக்காகச் சிந்தப்பட்ட இரத்தத்தாலும், தியாகத்தாலும் அகாலிதாள் கட்சி பலமான ஒரு நிர்மாணத்தைச் சீக்கியர் மத்தியில் பெற்றது. பிரிந்த தம் மாநிலத்திற்குரிய தலைநகர் எதுவென்ற பிரச்சனையை அகாலிதாள் கிளப்பியது. ஏனைய மாநிலங்கட்குக் கொடுக்கப்பட்டதுபோல், புதிதாக உருவாக்கப்பட்ட மாநிலம் தானே புதிய தலைநகரை உருவாக்கவேண்டும் எனவே சண்டிகார் தம்மிடமே ஒப்படைக்கப் படவேண்டுமென மறுபக்கத்தில் கோரியது. ஆனால் மத்திய அரசோ சண்டிகாரை எவர்க்குமே வழங்காமல், தனது கட்டுப்பாட்டுக்குள்ளே ஒரு யூனியன் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தியது. இக்கோரிக்கையின் தோல்வி, எல்லைப் பிரச்சனைகள், நீர்ப் பங்கீடு, அமிர்தசரஸை புனித நகராகப் பிரகடனப்படுத்த மறுத்தமை போன்ற சிறு பிரச்சனைகள் எல்லாம் அகாலிதளத்துக்குத் தீராத கோபத்தை உருவாக்கின.

இப்பிரச்சனைகளுடன், அகாலிதாள் வேறுபல பிரச்சனைகளையும் எதிர்நோக்க வேண்டியிருந்தது. எதிர்பார்த்தபடி மாநிலம் பிரிந்தபின் பதவிக்கு வரமுடியாமை, அகாலிதளத்தின் உட்பூசலால் ஏற்பட்ட கட்சிப்பிளவு, பசுமைப் புரட்சியின் செழுமை, வெளிநாடுகளில் குடியேறி மீண்டும் தாயகம் வந்தவர்களது கலாச்சார பாதிப்புக்களால், சீக்கியர்களது வாழ்க்கை மாற்றங்கள் சீக்கிய இளைஞர்களது மனோபாவம், குருகோவிந்தசிங்கினது அறக்கட்டளைகள் மீறப்பட்டமை—இவற்றுடன் தொடர்புபட்ட அகாலிதள தலைமைப்பீட அங்கத்தவர்களை என்ன செய்வது போன்ற பிரச்சனைகள் அகாலிதளத்தை ஒரு நெருக்கடிக்குள்ளாக்கியது.

இந்நெருக்கடிகள் அகாலிதளத்தின்மீது ஒரு நம்பிக்கையீனத்தைச் சீக்கிய முதியவர்களின் மத்தியில் ஏற்படுத்தியது. மதத்தின் எந்த ஒரு கட்டளையையும், மதத்தையும் காப்பாற்ற, போராட வலுப்பெற்ற இளம் மதத்தலைவர்களது தலைமைத்துவத்தை உருவாக்க மத ஆர்வமிக்க ஒரு பகுதியினர் முனைந்தனர். தனித்தீவிரம் என்ற ஒரு ஆளுமைக்கூறு பிந்தரன்வாலேக்கு இருந்தமையால் இவர் ஆதரவுபெறத் தொடங்கினர். தீவிர மதப்பற்றுள்ள இவர் நிரங்காரிகளை ஒழிக்கவேண்டுமென்ற வன்மத்தைக் கொண்டிருந்தார்.

இந் நிரங்காரிகள் எனப்படுபவர்கள் சீக்கியர்களில் ஒருபிரிவினராவர். வெண் தலைப்பாகை யணிவர். இந்துமத நடவடிக்கைகளின் தன்மைகளை இவர்களிடம் அவதானிக்கலாம். சீக்கிய மொழியான குருமுகிக்குப் பதிலாகச் சமஸ்கிருதம், ஹிந்தி என்பவற்றைப் பேசுபவர்கள். இந்துக்கள் வாழும் பஞ்சாப்பகுதியில், இவர்களது செல்வாக்கு இதனால் அதிகரித்துவந்தது.

இந்நிலையால் அகாலிதளம் மத்தியில் ஆத்திரவுணர்வு பீறிட்டு மோதல்களிலும் முடிந்தது. ஒருமுறை நிரங்காரிகள் நடத்திய கூட்டத்தை அகாலிதள அரசு கலைக்கவேண்டுமெனப் பிந்தரன்வாலே கோரியபோது, அதை அரசு மறுக்கவே, பிந்திரன்வாலே தன் சகாக்கள்மூலம் தன் தலைமையில் சென்று தடுத்தார். இவரது செல்வாக்கிற்கு இதுவும் ஒரு காரணியாகும்.

பிந்தரன்வாலே என்ற தனிமனிதம் அகாலிதளத்தினை மிகச் சங்கடத்திற்குள்ளாக்கியது. அகாலிதாள் தலைவர் லோங்வாலுக்கும், பிந்தரன்வாலேக்குமிடையே பலவகை முரண்பாடுகளும் உருவாகின. பொற்கோயிலின் அகாலிதக்த்திற்குள் யாருமே நுழையக்கூடாதெனக் கூறியதை எதிர்த்து எந்த ஒரு சீக்கியனுக்கும் அங்கு செல்வதற்கு உரிமை உண்டெனக் கூறி ஆயுதங்களுடன் அங்கே தன் சகாக்களுடன் தங்கியிருந்தார் பிந்தரன்வாலே. மொத்தத்தில் தீவிரத்தின் முழுமையாக இவரது முழுச் செயற்பாடுகளும் அமைந்தன. பேச்சுவார்த்தைகளில் முடியவேண்டிய பிரச்சனைகட்கு, தீவிர வெறியூட்டிய இவரது பங்கு அதிகமாகும்.

அகாலிதளுடைய 45 கோரிக்கைகட்குள் குறைந்த பட்சகோரிக்கையாக அமிர்தசரஸிற்கு வரும் புகையிரதத்திற்கு கோல்டின் எக்ஸ்பிரஸ் எனப் பெயரிடவேண்டுமெனவும், கூடிய கோரிக்கையாக 1973 இல் பஞ்சாபி சுபா மூலம் சீக்கியர் பெறாத கோரிக்கைகளில், இராணுவம், கரன்சி, செய்தித்தொடர்பு, ரயில் தவிர ஏனையவை தரப்படவேண்டுமெனவும், இறுதியில் 1982 இல் சீக்கியருக்குத் தனிநாடாகக் காலிஸ்தான் என்ற நாடு தரவேண்டுமென அகாலிகளும், பிந்தரன்வாலேயும் கோரினர்.

ஆனால் பஞ்சாபிசுபா தவிர ஏனையவை மத்திய அரசால் நிறைவேற்றப்படவில்லை. பதிலாகப் பலத்த கண்டனங்களும், எச்சரிக்கைகளும் மத்திய அரசால் விடுக்கப்பட்டன. இதன் விளைவாக அகாலிகளும், பிந்தரன் வாலேயும் பஞ்சாப் மண்ணிலும் ஏனைய சில பிரதேசங்களிலும் வன்முறைகளில் தம்மை ஈடுபடுத்தத்தொடங்கினர். இந்திய இராணுவத்தில் முக்கிய பங்கு வகிக்கும் சக சீக்கியர்கள் மத்தியிலிருந்து இவர்கட்கு ஆதரவு கிடைத்தது. வெளிநாட்டுச் சக்திகளிடமிருந்து இவர்கட்கு நவீன ஆயுதங்கள், பயிற்சிகள் என்பன கிடைத்தன. இவர்களது இராணுவத் தளமாகவும், புகலிடமாகவும் பொற்கோயில் வளாகம் பயன்படுத்தப்பட்டது. இந்நிலைமை மத்தியரசிற்குத் தீராத தலையிடியைக் கொடுத்த வண்ணமிருந்தது.

படைத்தளபதிகள், அமைச்சர்கள், திருமதி காந்தியின் அரசியல், இராணுவ ஆலோசகர் என்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போர் மத்தியிலிருந்து திருமதி காந்தி பல ஆலோசனைகளைப் பெற்றார். ஆனால் உடனடித் தீர்வுக்கு எந்தளவிலும் அவை பயனளிக்கவில்லை. இதனால் திருமதி காந்தி மேலும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டார். சீக்கிய தீவிரவாதிகளது வன்முறைச் சம்பவங்கள் நாளுக்குநாள் அதிகரித்தவண்ணம் சென்றன.

இந்துக்களும் சீக்கிய எதிர்ப்புச் சக்திகளும் மிகக் கோரமாகக் கொலைசெய்யப்பட்டனர். தீவிரவாதிகள் தமக்கு எதிரணியாக இருந்த அகாலிதாள் ஆதரவாளர்களையும் கொலைசெய்தனர். இடல் சம்பவங்களும் இடம்பெற்றன. ஏனைய இந்துமாநிலம் சிலவற்றில் வாழும் பஞ்சாபியர்களை கொல்வதற்கான நடவடிக்கைகளும் இந்துக்களால் மேற்கொள்ளப்பட்டன. இந்நிலைமையில், இந்துக்களின் கலவரங்களைத் தடுக்கமுடிந்ததே தவிர, சீக்கிய தீவிரவாதிகளது செயற்பாடுகளைத் தடுக்கவோ, குறைக்கவோ முடியவில்லை. பொற்கோவில் சிறப்பான புகலிடத்தை அவர்களுக்குக் கொடுத்தமையே அதற்குக் காரணமாகும். தீவிரவாத சீக்கியரின் ஒவ்வொரு செயற்பாடுகளும் பஞ்சாப்பில் வாழும் சகல மக்கள் மத்தியிலும், மத்திய அரசு தரப்பாலும் பெரும் பதற்றத்தையும் அச்சத்தையும் உருவாக்கிக் கொண்டிருந்தன. இந்நிலையில் ஊரடங்குச் சட்டம் கடுமையாக அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. ஆனால் ஊரடங்கு நேரத்திலும் சீக்கிய தீவிரவாதிகளின் செயற்பாடுகள் குறையவேயில்லை. இந்நிலையில் இதற்கு உடனடிப் பரிகாரம் தேடவேண்டிய நிர்ப்பந்தம் மத்திய அரசிற்கு ஏற்பட்டது. அதேநேரம் சீக்கிய தீவிரவாதிகள் பஞ்சாப் மாநிலத்திலிருந்து ஏனைய மாநிலங்கட்கு உணவுத் தானியங்கள் கொண்டு செல்வதைத் தடுக்கவேண்டுமென அறைகூவல் விடுத்தனர். மத்திய அரசால் பல எச்சரிக்கைகளும் தீவிரவாதிகட்குவிடுக்கப்பட்டன. ஆனால் எச்சரிக்கை எதையுமே சாதிக்கவில்லை. எனினும் திடமான ஒரு தீர்வை மத்திய அரசு எடுத்தது. தீவிரவாதிகள் மறைந்து வாழும் பொற்கோவிலுக்குள் இராணுவத்தை அனுப்புவது என்ற முடிவு இராணுவ தலைமைப்பீடத்துக்கு அறிவிக்கப்பட்டது.

எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி, இராணுவம் தன்னைத்தயார் படுத்தியது. இராணுவ கவச வாகனங்கள் உட்பட ஐயாயிரம் இராணுவ வீரர்கள் பொற்கோவிலைச் சூழ்ந்துநிற்க, பஞ்சாப்பின் வீதிகளில் மேலும் ஐயாயிரம் வீரர்கள் ஊரடங்குச் சட்டத்தையும், பாதுகாப்பையும் பேணுவதற்குத் தயாராகி நின்றனர். இந்திய இராணுவ நிலைகுறித்துத் தீவிரவாதிகட்கு இடையில் அவசரகருத்துப் பரிமாறல்கள் பொற்கோவில் வளாகத்தினுள் இடம்பெற்றது. அகாலிதாள் மிதவாதிகள் ஒருபுறம் தீவிரவாதிகள் மற்றொருபுறம். பிந்தரன்வாலேயின் தலைமையிலான தீவிரவாதிகள் எதிர்த்தாக்குதல் மேற்கொள்ளுதல் என்ற தீர்மானத்திற்கேற்பப் பொற்கோவில் வளாகத்துக்குள் அமைக்கப்பட்ட பாதுகாப்பு அரண்களில் ஆயுதங்களுடன் ஆயத்தமாயினர். இதற்கு முன் இந்திய இராணுவம் பொற்கோயிலின் நீர், மின்சாரவசதிகளைத் துண்டித்தது. இது நடந்து இருநாட்களின்பின் இராணுவ தரப்பில் பொற்கோவிலில் மறைந்திருக்கும் தீவிரவாதிகளைச் சரணடையும்படி ஒலிபெருக்கிமூலம் கேட்கப்பட்டது. அதற்கிணங்க அகாலிதாள் லோங்கோவால் உட்பட நூற்றுக்கு மேற்பட்டவர்கள் வெள்ளைக் கொடிகளுடன் வெளியேவந்தனர். ஆனால் பிந்தரன் வாலேயின் தலைமையில் ஐநூறு தீவிரவாதிகள் போர்க் கொடியுயர்த்தித் தம் துப்பாக்கிகளுடன் தாக்குதலை எதிர்நோக்க ஆயத்தமாயினர். பொற்கோயிலின் சகல வாசல்களும் இராணுவத்தால் அடைக்கப்பட்ட நிலையில் ஒரு வாசலால் உட்புகுந்த பதினேழு இராணுவ வீரர்கள் தீவிரவாதிகளின் துப்பாக்கிகட்குப் பலியானார்கள். தம்பக்கத்தில் அதிகம் பேரைப்பலிகொடுத்திடுவோமோ என்று இராணுவத்தின் மத்தியில் ஏக்கம் எழுந்தாலும், இறுதியில் தீவிரவாதிகளால் உடல் முழுவதும் டைனமற்றுக்கள் கட்டப்பட்டு வெளியே அனுப்பப்பட்ட தம் சகவீரரின் உடல் சுக்குநூறாக வெடித்த காட்சியுடன், துரித கதியில் பொற்கோவில் வளாகம் அவர் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது இத் தாக்குதலில் தீவிரவாதிகள் பலர் கொல்லப்பட்டனர். இராணுவத்துக்கும் இழப்புக்களேற்பட்டன. பிந்தரன் வாலேயின் உடலும் மறுநாள் இறந்தநிலையில் கண்டெடுக்கப்பட்டது. இவரது உடலிலுள்ள காயங்களைக் கொண்டு, தற்கொலை செய்திருக்கலாமெனக் கூறப்படுகிறது. இவ்வாறான துயரம் தோய்ந்த முடிவுகளுடன் பொற்கோயிற் சம்பவம் இராணுவ கட்டுப்பாட்டுக்கு வந்தது. பின் பல தீவிரவாதிகளும், அவர்களிடமிருந்து பெருமளவு ஆயுதங்கள் வெடிமருந்துகளும் கைப்பற்றப்பட்டன.

ஒரு சீக்கியனோடு சேர்ந்து முழு உலகமுமே அவதானித்து வந்த பொற்கோயிலின் சரிதம் இந்திய மண்ணிலும் வெளிநாடுகளிலும் பெருங் கண்டனங்களிற்கும், அதிருப்திக்கும் உட்பட்டது. சீக்கியர்கள் கொதித்தனர். காலிஸ்தான் அந்நிய மண்ணில் பிரகடனம் செய்யப்பட்டுத் தமக்கெனப் பாஸ்போர்ட், நாணய நோட்டுக்களும் அச்சடிக்கப்பட்டன. இவற்றுடன் சேர்த்து சீக்கியர் மனதில் வைராக்கியங்களும், திடசங்கற்பமும் உருவாகின. காலிஸ்தானை அமைத்தே தீருவோமென்றனர். பரந்துபட்ட சீக்கியர்கள் பொற்கோயில் தாக்குதல்களுடன் ஒன்று சேர்க்கப்பட்டனர். ஆனால் மறு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புறம் திருமதி காந்தியின் செல்வாக்கு இந்துக்கள் மத்தியில் அதிகரித்தது. ஆனால் இங்கு முக்கிய அம்சம் காந்தியின் செல்வாக்கோ சீக்கியரின் தோல்வியோ அன்று. இப்படிப்பிணையிலிருந்து சீக்கியர் இனி என்ன செய்யப்போகிறார்கள் என்பதுவே. இந்திய மண்ணின் இறைமை, ஒருமைப்பாடு, சுயாதிக்கம் ஆகியவற்றுக்குத் தொடர்ந்தும் பஞ்சாப் மண்ணிலிருந்து அச்சுறுத்தல் வருமா? அல்லது சமரசம் பேணப்படுமா? இதுவே இந்திய அரசியல் விமர்சகர்களின் கேள்வியாகும்.

அரசியல் சாணக்கியமும், தூரப் பார்வையுள்ள பிரதமர் காந்திக்கு இப்பிரசனையின் ஆழம் புரியாமல் அசமந்தப்போக்குக் காட்டி வந்தமை எதற்காக எனவும், இத்தாக்குதலை ஏன் ஆரம்ப நிலையிலேயே நடத்தவில்லையெனவும் கேள்விகளும் தொடுக்கப்படுகின்றன. ஒருபுறம் தீர்வுநோக்கித் தீவிரவாதிகளால் ஆயுதங்கள் தூக்கப்பட்டாலும், மறுபுறம் சமரசப் பேச்சுவார்த்தை எதைச் சாதிக்குமென்ற கருத்துக்களும் எழுகின்றன. ஆனால் அரசியல் விமர்சகர்களின் முக்கிய தொனிப்பாக இருப்பது இந்திரா காந்தியின் அசிரத்தையே. பிரச்சினையை வளர்த்தெடுப்பதில் முக்கிய பங்கு இவர்க்குண்டு. காலிஸ்தான் பிரிவினை நியாயப்படுத்த முடியாதெனவும், சாத்தியமற்றதெனவும் கருதினாலும் சீக்கியர்களின் குறைந்தபட்ச கோரிக்கையுட்பட வேறுசில கோரிக்கைகளை நிறைவேற்றியிருக்கலாம். இதனால் எவ்வித பாதிப்பும் அவரது சுய அரசியல் வாழ்வுக்கோ, தான் சார்ந்த அரசாங்கத்திற்கோ தீங்கானது எனக்கருத நியாயமில்லை. அவ்வாறு கருதின் காந்தியின் அரசியல் வாழ்வும், செயற்பாடுகளும் தன்னலம், சர்வாதிகாரம் என்ற அடிப்படையிலேயே அமைந்திருக்கின்றதெனவும் இந்திய ஒருமைப்பாடு, இறைமையைச் சீர்குலைக்கும் முயற்சியில் தெரிந்தோ அல்லது தெரியாமலோ தன்னையும் ஒரு காரணியாக்குகிறார் என்ற முடிவுகட்கே வரவேண்டும். ஆனால் மறுபுறம் நியாயமற்ற கோரிக்கைகளை வைத்து காந்தியையோ அல்லது அரசாங்கத்தையோ குற்றம் சுமத்துவதும் ஆரோக்கியமான செயவன்று. இந்திய அரசியல், சமூக பொருளாதாரக் கூறுகளோடு பின்னிப் பிணைந்த சீக்கிய பிரதேசமும், வாழ்வும் அம் மண்ணிற்கு என்றுமே இன்றியமையாத ஒன்றாகும். இதையே இன்றைய இந்திய சக்திகள் உணர்வதோடு அன்றி வலியுறுத்தவும் வேண்டும். ஆனால் இதற்கு முன்னர் சீக்கியரின் நியாயமான கோரிக்கைகள், பேச்சுவார்த்தைகள் மூலம் நிறைவேற்றப்படவும் வேண்டும்.

இறுதியாக, தொடர்ந்தும் சீக்கிய பிரச்சினையை நிலை நிறுத்தவே இருதரப்புச் சக்திகளும் முனையுமானால் இன்றுவரையுள்ள அந்நிய சக்திகளைவிட, பன்மடங்கு அந்நிய ஊடுருவல் இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்படும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. இவை ஒவ்வொரு மாநிலங்கட்கும் விஸ்தரிக்கப்படும். இறுதியில் அகில இந்தியாவின் பிராந்திய இறைமை, ஒருமைப்பாடு என்பவற்றிற்குப் பெரும் சவாலாக அமைவதோடு மட்டுமன்றி இந்துசமுத்திரப் பிராந்தியத்தின் பதற்றநிலைக்கு முக்கிய கால்கோலாகவும் அமையும் எனலாம்.

---

## கடிதங்கள்

ஆசிரியருக்கு

அண்மைய தொடர் தாக்குதலைத் தொடர்ந்து நகர்ப்புறங்களில் ஏற்பட்ட உணவு நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு உப உணவு உற்பத்தியின் முக்கியத்துவத்தையும், சூட்டுக் காயங்களுக்கான உடனடி முதலுதவிச் சிகிச்சைபற்றியும் விரிவாக எழுதவும்.

இவற்றுடன் தேசிய விடுதலைப் போராட்டத்தில் மலையகமக்களின் நிலைப்பாடு, சாதி வெறியர்களுக்கு எதிரான நிலைப்பாடுபற்றியும் எழுதவும்.

பங்குனி — சித்திரை தளிரில் '' விடுதலைப் போராட்டத்தில் கிறிஸ்தவத்தின் பங்கு'', லெபனானின் இன்றைய நெருக்கடி போன்ற கட்டுரைகள் பயனுள்ளவையாக அமைந்துள்ளது.

அருந்ததி
அளவெட்டி

அன்பான ஆசிரியருக்கு,

எமது போராட்டம் புதிய உத்வேகம்கொண்டும், புதிய பரிமாணங்களைக் கொண்டும் ஆரோக்கியமாக முன்னேறிக்கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் 'தளிரி'ன் சேவை மகத்தானது என்பது உண்மையே. தளிரின் புதிய இதழ்கள் ஒவ்வொன்றும் படிமுறை வளர்ச்சி கொண்டவையாகப் புதுப் பொலிவுடன் விளங்குவதானது மிக மகிழ்ச்சிகரமானது. அறிமுக இதழுடனும், ஒரு சில இதழ்களுடனும் ஸ்தம்பிதமடைந்துவிடும் எமது சஞ்சிகை உலகின் யதார்த்தத்திற்குத் தளிர் அப்பாற்பட்டு நிற்பதும் வரவேற்புக்குரியதும், தங்களது உழைப்புத்திறனை வெளிப்படுத்துவதுமாகும். தங்களது எல்லைகளை மேலும் விரிவுபடுத்திச் செயற்படுவதுடன் குடாநாட்டிற்கு வெளியேயும் தங்களது விநியோகத்தை விருத்தி செய்ய ஆவனசெய்யவேண்டும் — இது மிகமிகக் கடினமானது என்பது தெரிந்ததே — என்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி. — வசந்தராசன்.
முல்லைத்தீவு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மலேசிய கம்யூனிஸ்டுகளின் தோற்கடிக்கப்பட்ட ஆயுதப் போராட்டம்

ஆயுதந் தாங்கிய இயக்கத்தைத் தோற்கடித்த உலகிலுள்ள மிக முக்கிய நாடுகளுள் ஒன்ருக மலேசியா காணப்படுகிறது. ஆயுதந் தாங்கிய இயக்கத்தைத் தோற் கடிப்பதற்குரிய முன்னுதாரணமாகப் பலரும் மலேசியாவைக் கூறுவதுண்டு. இந்நிலையில், மலேசியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளையும், அதற்கெதிராக அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளையும், அதேவேளை போராட்டத்தின் உண்மையான காரணங்களையும் விளங்கிக் கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

1941-ம் ஆண்டு மலேசியா பிரித்தானியரிடமிருந்து ஜப்பானியரால் கைப்பற்றப்பட்ட பொழுது, ஜப்பானிய இராணுவத்திற்கெதிராக, 1941 தொடக்கம் 1945 வரை கொம்யூனிஸ்டுகள் நடாத்திய கெரில்லாப் போராட்டம் தீரம்மிக்க ஓர் வெற்றிகரமான போராட்டமாய் அமைந்திருந்தது. இப்போராட்டத்தின் சூழ்நிலை வேறு. 1948-1957 வரை பிரித்தானிய ஆதிக்கத்தைத் தோற்கடித்து ஒரு கொம்யூனிச அரசை அமைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தின் சூழ்நிலை வேறு. எனவே, 1941-45 வரையிலான போராட்டத்தையும், அதேவேளை 1948-57 போராட்டத்திற்கும், 1941-45 போராட்டத்திற்கும் இடையிலுள்ள வேறுபாட்டையும் விளங்கிக் கொள்ளுதல் பயனுள்ளதாகும். அத்துடன் கொம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்றுப் பின்னணியையும், அவர்களின் அடித்தளத்தையும், அக்கால சர்வதேசச் சூழ்நிலையையும் நோக்க வேண்டும். எனவே, இக்கட்டுரை மூன்று பகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளது. முதலாவது பகுதி 1941 வரையான கொம்யூனிஸ்டுகளின் வரலாறு. இரண்டாவது பகுதி 1941 தொடக்கம் 1945 வரையிலான கொம்யூனிஸ்டுகளின் கெரில்லாப் போராட்டம். மூன்ருவது பகுதி 1948 தொடக்கம் 1957 வரை கொம்யூனிஸ்டுக்களின் ஆயுதந் தாங்கிய போராட்டமும், அதற்கெதிரான அரசாங்கத்தின் நடவடிக்கைகளும்என அமையும்.

## பகுதி 1

(கொம்யூனிட் கட்சியின் தொடக்க வரலாறு இங்கு விபரமாகத் தரப்படாது, தேவைக்கேற்ப சுருக்கமாக மட்டுமே தரப்படுகிறது).

மலேசியா பிரித்தானியரின் ஆதிக்கத்துக் குட்பட்டிருந்த ஓர் நாடாகும். மலேசியாவின் மொத்தச் சனத்தொகையில் ஆதிவாசிகள் உட்பட மலேய் இனத்தவர் 55% ஆவர். இந்தியரும், பாகிஸ்தானியரும் 10% ஆவர். மிகுதி 35% சீனர்களாவர். இந்தச் சிறுபான்மையினராகிய 25% சீனர்கள் மத்தியில் தோற்றம் பெற்ற இயக்கமே மலேசியக் கொம்யூனிஸ்ட் கட்சியாகும். பெரும்பான்மையினராகிய மலேய் இனத்தவர் மத்தியில் கொம்யூனிசக் கொள்கை செல்வாக்குப் பெற்றிருக்கவில்லை.

சீனத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் நிமித்தம், அதற்கான நிதியையும், ஆதரவையும் திரட்டும் வகையில் சீன கோமிங்-ராங் (கே. எம் ரி.) கட்சியின் தலைவர். டாக்டர் சுன்-ஜன்-சன் அவர்களால் 1920களின் ஆரம்பத்தில் மலேசியாவில் வாழ்ந்து வந்த சீனர்கள் மத்தியில் கொமிங்-ராங் (கே. எம். ரி.) கிளைகள் ஸ்தாபிக்கப்பட்டன. கொம்யூனிஸ்டுக்களும் இக் கொமிங் ராங் குடன் சேர்ந்து ஒத்துழைத்தனர்.

(இக் கட்டுரையில் கொமிங் ராங் என்பது கே எம். ரி என்ற எழுத்துக்களால் குறிக்கப்படும்.)

கே. எம். ரி. உடன் இணைந்து செயற்பட்டுவந்த கொம்யூனிஸ்டுக்கள் கே. எம். ரி. ஊடாகத் தமது கொள்கைகளையும் பரப்பி வந்தனர். 1925-ம் ஆண்டு பிரித்தானிய ஆட்சியாளர் மலேசியாவில் கே. எம். ரி.யைத் தடை செய்தனர். ஆனல் கொம்யூனிஸ்டுகள் பாடசாலைகள் மூலமாகத் தமது கொள்கையை மேலும் வளர்க்க முற்பட்டனர். இந்த வகையில் 1926-ம் ஆண்டு நான்யாங் பொதுத் தொழிலாளர் சங்கம் கொம்யூனிஸ்டுக்களால் ஸ்தாபிக்கப்பட்டது. இத் தொழிற் சங்கம் சீனக் கொம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கியது. பின்பு சீனக் கொம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டின் கீழ் மலேசியாவின் கொம்யூனிஸ்டுகள் இயங்க வேண்டுமென்ற தீர்மானத்தின்படி மலேசியக் கொம்யூனிஸ்ட் கட்சி எம். சி பி. வடிவம் பெற்றது.

மலேசியாவில் பிரித்தானிய ஆட்சியாளரின் வருவாய், பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை, சுரங்கத்தொழில் ஆகியவற்றில் தங்கியிருந்தது. இத்தொழிலாளர் மத்தியில் எம். சி. பி. வேலை நிறுத்தங்களை 1936-40 இடைப்பட்ட ஆண்டுகளில் பெருமளவு ஒழுங்கு செய்தது. இவ்வேலை நிறுத்தங்களால் பெரிதும் ஸ்தம்பிதமடைந்துவந்த அரசாங்கம் எம். சி. பி.யின் முக்கிய தலைவர்களைக் கைதுசெய்து சிறையிலடைத்தது.

இந்நிலையில் 2-ம் உலக யுத்தம் ஆரம்பமாகியதும், ஜப்பான் ஆசியாவில் தனது திட்டங்களை நிறைவேற்ற முற்பட்டது. அமெரிக்காவின் பசிபிக் பிராந்திய கடற்படைத் தளம் "பேர்ல் ஹாபர்"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொலிசாரும் (எம். பி) ஆங்காங்கே கொல்லப்படுவார்கள். இராணுவம் கெரில்லாக்களைத் தேடிக் காட்டுக்குள் நுழையும். அப்போது கெரில்லாக்கள் பதுங்கியிருந்து போன இராணுவத்தை வஞ்சம் தீர்க்கும் உணர்வோடு கோரமாகக் கொல்வார்கள். இந் நிலையில் கொம்யூனிஸ்டுகள்மீது பெரிதும் சினம்கொண்ட இராணுவ ஆட்சியாளர் 1942 டிசம்பர் 8-ம் திகதி பின்வருமாறான ஓர் அறிவித்தலை மக்களுக்கு விடுத்தது.

''கொம்யூனிச வடுவாக்களால் யாராவது ஒருவர் கொல்லப்படுவாராஞல், அல்லது கொம்யூனிச வடுவாக்கள் எங்காவது ஓர் இடத்தில் ஏதாவது ஒரு தாக்குதலை மேற்கொள்வார்களேயாஞல் அதற்கு அச்சுற்றுடலில் உள்ளவர்களே பொறுப்பேற்க வேண்டும். தாக்குதலில் ஈடுபடுபவர்களைச் சுற்றுடலில் உள்ளோர் பிடித்து இராணுவத்திடம் ஒப்படைக்க வேண்டும். அவ்வாறு பிடிக்க முற்படும் போது ஏற்படும் காயத்திற்கோ, உயிர்ச் சேதத்திற்கோ இராணுவம் நஷ்டஈடு தரும். அவ்வாறு செய்யாது விட்டால் சுற்றுடலில் உள்ளவர்கள் கடுமையாகத் தண்டிக்கப் படுவார்கள்.''

நாட்டின் நாலாபுறங்களிலும் இக்கட்டளை ஒட்டப்பட்டிருந்தது. மேலும் இராணுவம் 'ஜிக்கெய்டன் சிஸ்டம்' (ஜே. எஸ் J.S.) என்னும் ஒரு புதிய திட்டத்தை அமுற்படுத்தத் தொடங்கியது. இதன்படி, அங்கவீனமற்ற குறிப்பிட்ட வயதையுடைய சகல மலேசியப் பிரசையும் இராணுவத்தோடு சேர்ந்து காவல் வேலைகளில் ஈடுபடவேண்டுமென்பது. கிராமங்கள்தோறும் ஜே. எஸ். அமைக்கப்பட்டது. ஆஞல் ஜே. எஸ். உறுப்பினர்கள் சாத்தியமான வழிகளிலெல்லாம் கெரில்லாக்களுக்கு உதவி செய்தனர். ஒத்துழைத்தார்கள். பல கட்டங்களில் கொம்யூனிஸ்டுகளுக்குச் சார்பான பிரச்சாரத்தையே மக்கள் மத்தியில் செய்தார்கள். அத்துடன் இராணுவம் பற்றிய தகவல்களை இவர்கள் கொம்யூனிஸ்டுகளுக்குச் சொல்லி வந்தார்கள். ஜே. எஸ். அமைக்கப்பட்ட பின்பும் இராணுவத்தின் நிலைமை சரிவரவில்லை. இராணுவத்திற்கு ஜே. எஸ்.மீது சந்தேகம் வளர்ந்தது. சந்தேகத்திற்குரிய ஜே. எஸ்.கள், மற்றும் கொம்யூனிஸ்டுகள், கொம்யூனிச ஆதரவாளர்கள் என்போரை இராணுவம் கைதுசெய்து கொடிய சித்திர வதைகளுக்கு உட்படுத்துவார்கள். சந்தேக நபரைப் பிடித்துப் புனல் மூலம் அவரது வயிற்றுள் தண்ணீரைச் செலுத்துவார்கள். தண்ணீரால் நன்ருக வயிறு ஊதி வந்ததும், அவரை நிலத்திற் கிடத்திவிட்டு, வயிற்றின்மீது இராணுவத்தோன் ஏறிப் பாய்வான். அப்போது வயிற்றுள் இருக்கும் தண்ணீர் கண், வாய், காது, மூக்கு என்பவற்றுக்குள்ளால் வெளியே பீறும். அத்துடன் ஆள் மயங்கும்வரை இரண்டு கைகளையும் நெருப்பிற் பிடித்து எரிப்பார்ர்ள். இவ்வாருகப் பல சித்திரவதைகளை மேற்கொண்டு வந்தார்கள். ஆயினும் போராட்டம் எந்தவகையிலும் தணியவில்லை. கெரில்லாக்கள் பதிலுக்குப் பதில் நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள்.

''அம்பாங்'' என்னும் கிராமத்தில் இயங்கிவந்த விசேஷ பொலிஸ் பிரிவினைக் கெரில்லாக்கள் கொன்றழித்தார்கள். இதில் இரண்டு எம். பி.களும் கொல்லப்பட்டார்கள். இதனுல் இராணுவம் மிகவும் ஆத்திரமடைந்தது. 'அம்பாங்' கிராமத்தையே இராணுவத்தினர் முற்ருக எரித்து நாசமாக்கினர். அக்கிராமவாசிகள் பலர் உயிரிழந்தனர். இந்நாச வேலையை மேற்கொண்டபின் இராணுவம் வெளியிட்ட அறிக்கையிற் பின்வருமாறு கூறப்பட்டது.

''இக்கிராமவாசிகள் கெரில்லாக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்திருக்கிருர்கள். இக்கிராமத்தில் பல கெரில்லாக்கள் மறைந்து வாழ்ந்திருக்கிருர்கள். இக்கிராமத்திலிருந்த ஜே. எஸ்.டுகள் கெரிலாக்களுக்கு உதவி செய்திருக்கிருர்கள். கேட்கும்போது ''ஒன்றும் தெரியாது'' என்று பதில் சொல்கிருர்கள். இப்படியான ஒரு கிராமம் மலேசியாவின் எந்தப் பகுதியிலும் அனு

> சரித்திரத்தில் இந்தக் கட்டத்தில் வசித்து கடந்துசெல்கிறவர்கள் எல்லோரையும் நான் ஒன்று கேட்டுக்கொள்கிறேன். இந்தப் போராட்டத்தில் பங்கு கொள்கிறவர்களை ஒருபோதும் மறக்காதீர்கள். நல்லவர்களையும் கெட்டவர்களையும் ஞாபகத்தில் வைத்திருங்கள். உங்களுடைய நல்வாழ்வுக்காகவும் தங்களுடைய வாழ்வுக்காகவும் உயிர்த்தியாகம் செய்த எல்லோரையும்பற்றி உங்களால் முடிந்த அளவுக்குக் குறிப்புகளைச் சேகரியுங்கள். நிகழ்காலம் கடந்தகாலச் சரித்திரமாவது நிச்சயம். இது சரித்திரத்தை உருவாக்கிய ஊர், பேர் தெரியாத வீரர்களுடைய மகத்தான சகாப்தம் என்று அப்போது அழைக்கப்படும். அவர்கள் எல்லோருக்கும் பெயர்கள் இருந்தன. முகங்கள் இருந்தன. நம்பிக்கைகள் இருந்தன. இதே காரணத்திஞல் நினைவிலே நிற்கும் பெயர்களை உடையவர்கள் பட்ட கஷ்டங்களைவிட, பெயர்கள் தெரியாதவர்கள் பட்ட கஸ்டங்கள் எவ்விதத்திலும் மறைந்ததாக இல்லை. நான் விரும்புவது எல்லாம் நீங்கள் அவர்களையும் உங்களுக்குத் தெரிந்தவர்களை மனதில் வைத்துக் கௌரவிப்பது போல, உங்கள் குடும்பத்தினரை நினைப்பதுபோல அல்லது உங்களையே நீங்கள் நினைப்பதுபோல மனதில் வைத்து உங்களில் ஒருவராகப் பாவிக்க வேண்டும் என்பது தான். வீரர்கள் நிறைந்த குடும்பங்கள் எத்தனையோ முழுவதும் கொல்லப்பட்டிருக்கின்றன. அவர்களில் ஒருவரை உங்கள் சொந்தப் புதல்வனை அல்லது புதல்வியை நேசிப்பதுபோல நேசியுங்கள். எதிர்காலத்துக்காக வாழ்ந்த ஒரு மகா புருஷனைப்பற்றிப் பெருமைப் படுவதுபோல அவர்களைப்பற்றிப் பெருமைப் படுங்கள். எதிர்காலத்தைப்பற்றிய சிந்தனையிலேயே நாட்களைக் கழித்து எதிர் காலத்தை அழகுடையதாக்கும் முயற்சியில் உயிரைவிட்ட ஒவ்வொருவரும் கற்சிலையாகச் செதுக்கப்பட வேண்டிய பெருமை படைத்தவர்களாவர்.
>
> (தூ. மே. குறிப்பு—66-67)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மதிக்கப்பட மாட்டாது என்பதை விளக்கும் வகையில் 'அம்பாங்' கிராமத்தை அழித்தோம்.''

என்று அறிக்கை குறிப்பிட்டது.

இவ்வறிக்கையைக் கண்டு மக்கள் பெரிதும் ஆத்திரப்பட்டார்கள். கெரில்லாக்களுக்கான ஆதரவு மேலும் மேலும் வளர்ந்தது. கெரில்லாப் பயிற்சி பெறுவதில் மக்கள் (ஆண், பெண்) சகலரும் பெரிதும் ஆர்வம் காட்டினர். மணம் செய்த மணம் செய்யாத பெண்கள் பலர் பயிற்சி பெறக் காடுகளை நோக்கிப் புறப்பட்டனர். இராணுவத்திற்கு இது மேலும் சங்கடமாய் அமைந்தது. இதன்பின்பு 1943 பெப்ரவரி 24-ம் திகதி இராணுவம் புதிய வேண்டுகோள் ஒன்றை மக்களுக்கு விடுத்தது.

''கெரில்லாக்களின் செயல்களினுல் பெண்கள், குழந்தைகள் உட்பட வெறும் அப்பாவி மக்கள்கூட உயிரிழக்கவேண்டி ஏற்படுகின்றது. நாம் கெரில்லாக்களுக்கெதிரான நடவடிக்கை எடுக்கும்போது அப்பாவி மக்கள்கூட உயிரிழப்பது தவிர்க்க முடியாதுள்ளது. அப்பாவி மக்கள் கொம்யூனிஸ்டுகளின் விசமப் பிரச்சாரத்திற்குப் பலியாகி, அவர்களை நம்புகிருர்கள். அதனை உணரும் மக்களுக்கு நாம் மன்னிப்பளிக்கத் தயாராக உள்ளோம். கொம்யூனிஸ்டுகளுக்குக்கூட நாம் மன்னிப்பளிக்கத் தயாராய் உள்ளோம். இராணுவத்துடன் ஒத்துழைக்குமாறு மக்களை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்''

என வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

கொம்யூனிஸ்டுகளுக்குத் தொடர்ந்து நேசநாடுகள் அணியிலிருந்து இராணுவ உபகரணங்கள் கிடைத்து வந்தன. கெரில்லாக்கள் தமது போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தி வந்தார்கள். இந்நிலையில் 1945-ல் மேற்குலகில் அச்சு நாடுகளை நேசநாடுகள் தோற்கடித்தமை அத்துடன் 1945-ல் ஜப்பான்மீது அமெரிக்கா இரு அணுகுண்டுகளை வீசியதுடன், ஜப்பான் முற்றுகச் சரண் அடைந்தது. மலேசியா பிரித்தானியர் கைக்கு மீண்டும் மாறியது.

1945 செப்ரம்பர் 12-ம் திகதி கோலாலம்பூரில் வெற்றிவிழா அணிவகுப்பு இடம் பெற்றது. அவ்வணிவகுப்பின்போது கொம்யூனிசக் கெரில்லாக்களிடம் முன்பு விநியோகிக்கப்பட்ட ஆயுதங்களை ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டது. ஆனல் கொம்யூனிஸ்டுகள் முழு ஆயுதங்களையும் ஒப்படைக்காது ஒரு பகுதி ஆயுதங்களை மட்டுமே ஒப்படைத்தார்கள். மிகுதி ஆயுதங்களைத் தூர நோக்கோடு முன்கூட்டியே இரகசியமாகப் பதுக்கி வைத்துவிட்டார்கள். ஆங்கிலேயரிடமிருந்தோ அல்லது அவர்கள் முதலாளி வர்க்கத்திடம் ஆட்சியைக் கை மாற்றும்போது அவர்களிடமிருந்து ஆயுதப் போராட்டத்தின் மூலம் ஆட்சியைக் கைப்பற்றி அரசை ஸ்தாபிப்பதே எம். சி. பியின் நோக்கமாகும்.

## கொம்யூனிஸ்டுகளின் ஆயுதப் போராட்டமும் அதற்கு எதிரான அரசின் நடவடிக்கைகளும்

1948 பெப்ரவரி மாதம் கல்கத்தாவில், தென்கிழக்காசிய நாடுகளின் கொம்யூனிஸ்டுகள் இளைஞர் மாநாடு இடம் பெற்றது. இதற்குப் பின்னணியாக மொஸ்கோ இருந்தது. மொஸ்கோ இம்மாநாட்டை நடத்துவதற்கான நிதி மற்றும் உதவிகளைச் செய்திருந்தது. இம்மாநாட்டிற்கு எம். சி. பி. உறுப்பினர்கள் இருவர் சென்றிருந்தனர். இம்மாநாட்டில் தென்கிழக்காசிய நாடுகளில் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிப்பதுபற்றி ஆராயப்பட்டது. இது எம். சி. பி.இற்கு பெரும் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளித்தது.

1948 மே மாதம் மலேசியாவில் எம். சி. பி. மாநாட்டில் ஆயுதப் போராட்டத்தின் மூலம் ஆட்சியைக் கைப்பற்றுவதெனத் தீர்மானிக்கப் பட்டது. இதற்கிடையில் 1947-ம் ஆண்டு கொம்யூனிஸ்ட் கட்சிக்குள் ஒரு பிரச்சினை ஏற்பட்டுத் தீர்க்கப்பட்டிருந்தது. 1942-ம் ஆண்டு பல கொம்யூனிஸ்டுக்கள் (கணிசமான அளவு தொகை) ஜப்பானியரால் கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டார்கள். இது பட்டு கேவ்ஸ் (Batu Caues) சம்பவம் என்று அழைக்கப்படும். இதில் ஜப்பானிய இராணுவத்துடன் ஒப்பந்தம் செய்து காட்டிக்கொடுப்பில் ஈடுபட்டிருந்தவர் கொம்யூனிஸ்ட் கட்சியின் (M. C. P.) பொதுச் செயலாளர் லோய் டாக் (Loi-Tok) என்பவர்தான் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. இவர்தான் கெரில்லாப் போராட்டப் படையின் தலைவரும் ஆவார். அத்துடன் 1948-ம் ஆண்டு M.C,P. நிதியை இவர் களவாடியிருந்தமையும் கணடுபிடிக்கப்பட்டது. இது M.C.P.யுள் பெரும் விரக்தியை உருவாக்கியது. இந்நிலையில் உடனடியாக சின்பெங் (Chin Peng) எனபவர் பொதுச் செயலாளராக 1942-ல் தெரிவு செய்யப்பட்டார். இவா தலைமையின்கீழ் ஆயுதப் போராட்டம் பின்பு ஒழுங்கமைக்கப்பட்டது.

1948-ம் ஆண்டு மே மாதம் M.C.P. வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டது. அரசாங்கம் இதற்கெதிராகப் பல நடவடிக்கைகளை எடுக்க முற்பட்டது. இந்நிலையில் பொலிஸ் அதிகாரிகள், தோட்ட முதலாளிகள் உட்பட 68 பேர் கொம்யூனிஸ்டுகளால் கொல்லப்பட்டார்கள. அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பித்தது. மேலும, மூன்று ஐரோப்பிய தோட்ட முதலாளிகள் கொல்லப்பட்டார்கள். இதனைத் தொடர்ந்து அவசரகாலச் சட்டம் நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவசரகாலச் சட்டத்தின்கீழ் சந்தேகத்தின்பேரில் யாவரையும் கைது செய்யவும், விசாரணை இன்றி சிறைகளில் அடைக்கவும், மரண விசாரணை இன்றி பிரேதங்களை அடக்கம் செய்வது உட்படப் பல்வேறு அதிகாரங்கள் பொலிஸ் இராணுவத்தினருக்குக் கொடுக்கப்பட்டது.

1948 யூன் மாதம் மலேசியாவிலிருந்த இராணுவத்தினர் மிகச்சிறிய தொகையினராவர். அரசாங்கத்திற்கு வருமானத்தை ஈட்டிக் கொடுத்துக் கொண்டிருந்த பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையையும், சுரங்கத் தொழிலையும் ஸ்தம்பிக்கச் செய்வதன் மூலம் அரசாங்கத்தை வீழ்த்துவதற்கான நடவடிக்கைகளில ஈடுபட்டனர். இநிலையில் அரசாங்கம் முக்கியமான ஒரு தீர்மானத்தை எடுத்தது. அதன்படி கையிருப்பிலுள்ள இராணுவத்தினர் கொம்யூனிஸ்டுகளைத் தேடுதல நடவடிக்கையில் ஈடுபட்டு எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்வதைவிட உடனடியாகப் பெருந்தோட்டங்களையும சுரங்கங்களையும பாதுகாக்கும தற்பாதுகாப்பு நடவடிக்கையில பெருமளவு ஈடுபடவேண்டும். மேலும், பொலிசார் பெருந்தோட்டப் பொருட்களுக்கும், தோட்டப் பொருட்களுக்குமான போக்குவரத்துத் தடைப்படாத வண்ணம் புகையிரத நிலையங்களை, புகையிரத வண்டி, பெருந் தெருக்கள் என்பவற்றைக் காவல் காப்பதில் ஈடுபடுத்தப்பட்டனர்.

சுரங்கங்களைப்பாதுகாப்பதற்கு இராணுவத்துடன அங்கு வேலை செய்துவந்த தொழிலாளர்களையும் அரசாங்கம பயன்படுத்தியது. இதனால சுரங்கங்களுக்கெதிரான தகர்ப்பு வேலைகளில ஈடுபடும் போது தொழிலாளர்களும கொல்லப்பட்டனர். தொழிலாளர் மத்தியில கொம்யூனிஸ்டுகளுக்கு எதிராகப் பிரச்சாரம செய்வதற்கு இவ்வாறு கொல்லப்பட்ட தொழிலாளர்களின் மரணங்களை அரசு பயன்படுத்தியது. உள்நாட்டில் அரசாங்கம் இராணுவத்திற்கு ஆட்களைச் சேகரித்தது. மலே இன மக்கள் இதில் கூடுதலாகச் சேர்க்கப்பட்டனர். பிரித்தானியாவிலிருந்தும் ஒரு படைப்பிரிவு வந்து சேர்ந்தது. இப்போது அரசாங்கத்தின் தற்பாதுகாப்புநிலை ஓரளவு உறுதிப்படுத்தப் பட்டுவிட்டது. பெருந்தோட்டங்களையும், சுரங்கங்களையும் ஸ்தம்பிதமடையச் செய்யும் எம். சி. பி.யின் திட்டத்தை அரசாங்கம் தோற்கடித்து விட்டது. இந்நிலையில் கொம்யூனிஸ்டுகள் காடுகளுக்குட் புகுந்து இருந்து கெரில்லாத் தாக்குதல்களை உத்வேகப் படுத்தினார்கள்.

சீன இனத்தவர் மத்தியில் போராட்டம் காட்டுத் தீபோலப் பரவியது. எம். சி. பி.யினர் ஜப்பானிய இராணுவத்திற்கு எதிராகப் பயன்படுத்திய அதே முறைகளையே இப்போராட்டத்திலும் பயன்படுத்தினார்கள். ஜப்பானிய போராட்டத்திற் பயன்படுத்திய அதே 'மின்யுவென்'களையே (மக்கள் குழு) இப்போதும் பயன் படுத்தினார்கள். இக்குழுக்கள் இப்போது கெரில்லாக்களுக்கு உணவு, மருந்து விநியோகங்களையும் மற்றும் வேவு பார்த்தல் போன்ற வேலைகளையும் செய்யத் தொடங்கின.

தளபதி 'பிரிக்ஸ்' என்பவர் சகல நிறைவேற்று அதிகாரங்களையும் கொண்ட அதிகாரியாக நியமிக்கப்பட்டார். மலேய் இனத்தவர்களைப் பெருமளவாகக் கொண்ட ஊர்காவற் படைகளை 'பிரிக்ஸ்' அமைத்தார், இந்த ஊர்காவற் படைகளில் சிறிதளவு சீனர்களும், மற்றும் இந்தியர்களும் இருந்தார்கள். எவ்வாறாயினும் எம். சி. பி.யின் போராட்டம் தொடர்ந்து நிகழ்ந்து வந்தது. காடு கெரில்லாக்களுக்குப் போதிய பாதுகாப்பாக இருந்தது. நாட்டுப் புறங்களிலிருந்து எம். வை. போதிய உணவு விநியோகங்களையும், உதவிகளையும் கெரில்லாக்களுக்குச் செய்து வந்தது.

இந்நிலையில் 'பிரிக்ஸ்' ஓர் திட்டத்தை வகுத்தார். இத்திட்டம் 'பிரிக்ஸ் திட்டம்' (Briggs Plan) என வரலாற்றில் அழைக்கப்படுகிறது. இது புதிய குடியமர்த்தற் திட்டமாகும். இத் திட்டத்தின் படி கொம்யூனிஸ்டுகளுக்கு ஆதரவளிக்கின்ற, உணவு விநியோகம் செய்கின்ற கிராமங்களைக் குடியெழுப்பி, காட்டிலுள்ள கொம்யூனிஸ்டுகளோடு தொடர்புகொள்ள முடியாதவாறு, மறுகரையின் புதிய இடங்களில் கொண்டு புறக் குடியமர்த்தலாகும். இதன்மூலம் காட்டிலுள்ள கொம்யூனிஸ்டுகளுக்கான உணவு விநியோகம் மற்றும் தொடர்புகள் என்பன முற்றாகத் துண்டிக்கப்படும். அடுத்துக் குடியெழுப்பப்படும் ஓரே இடத்தைச் சேர்ந்தவர்களைப் புதிதாக ஒரே இடத்தில் குடியமர்த்தாமல் புதிது புதிதாகக் கலந்து குடியமர்த்தப் படுவார்கள். இதன் மூலம் அனைவரும் ஒருவருக்கொருவர் புது முகங்களாய்த் தொடர்பற்றுக் காணப்படுவார்கள். இவ்வாறு 500 புதிய கிராமங்கள் உருவாக்கப்பட்டன. முதலாவது குடியமத்தற் திட்டத்தின்கீழ் மட்டும் 50,000 மக்கள் குடியமர்த்தப் பட்டார்கள். புதிய கிராமங்கள் அனைத்தும் மின் கம்பிகளினால் வேலியிடப்பட்டன. பொலிசார் இக்கிராமங்களைச் சுற்றிப் பாதுகாத்து வந்தனர். இத்திட்டத்தின் பிரகாரம் காட்டில் வாழ்ந்த கெரில்லாக்களின் தொடர்புகள் அறுக்கப்பட்டுத் தனிமைப் படுத்தப்பட்டனர்.

'பிரிக்ஸ்'இன் இரண்டாவது முக்கிய திட்டம் 'வார் எக்ஸிகியூடிவ் கொமிட்டீஸ்' (டபிள்யூ. ஈ. சி.) மாவட்டரீதியாக அமைத்தமையாகும். டபிள்யூ. ஈ. சி.யில் இராணுவத்தினர், பொலிசார், சிவில் நிர்வாகிகள், பொதுஜனங்கள் ஆகியோர் அங்கம் வகித்தனர். இவை உணவு விநியோகம், தகவல் பெறுதல், நிர்வாக அலு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வல்களைக் கவனித்தல், இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகிய அனைத்தையும் செய்து வந்தன. டபிள்யூ. ஈ. சி.யில் பொதுமக்களும், சிவில் அதிகாரிகளும் இணைந்து பங்குபற்றியமையால், இராணுவத்தின் திட்டங்களை இலகுவாக நிறைவேற்றக் கூடியதாய் இருந்தது.

எவ்வாறிருந்தாலும், கொம்யூனிஸ்டுக்கள் காட்டிலிருந்து தாக்குதல்களைத் தொடர்ந்து மேற்கொண்டு வந்தார்கள். கொம்யூனிஸ்டுகளுக்கு ஆதரவான பிரச்சாரம் நாட்டுப் புறங்களில் நடந்துவந்தன. கொம்யூனிச ஆதரவு வளர்ந்தே வந்தது. இரண்டாம் உலக மகாயுத்தத்தால் ஏற்பட்ட இழப்பைச் சமாளிப்பதற்குப் பிரித்தானியா மலேசியாவில் அதிக சுரண்டலை மேற்கொண்டது. இதனால் மக்கள் மேலும் மேலும் பாதிக்கப்பட்டார்கள், மிகவும் வறுமை நிலையில் இருந்த சீன இனத்தவர் கொம்யூனிஸ்டுகளுக்கு மேலும் மேலும் ஆதரவளித்தே வந்தார்கள். ஆனாலும் செல்வந்தச் சீனர்கள், வர்த்தகர்கள், சிறு முதலாளிகள் போன்றோர் அரசாங்கத்திற்கு ஆதரவாகச் செயற்பட்டு வந்தார்கள். எவ்வாறாயினும் வறியமக்கள் மத்தியில் கொம்யூனிஸத்திற்கு ஆதரவாய் இருப்பதைத் தடுப்பது அரசாங்கத்திற்குச் சங்கடமாகவே இருந்தது. புதிது புதிதாகக் குடியமர்த்தற் திட்டங்களை மேற்கொள்வதற்குப் பொருளாதார ரீதியிற் கஷ்டமாக இருந்தது.

இந்நிலையில் 1951-ம் ஆண்டு தளபதி 'ரெம்ப்லர்' என்பவர் நிறைவேற்று அதிகாரியாக நியமிக்கப்பட்டார். பிரித்தானியா, பிஜி, கிழக்கு ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளில் இருந்து படைப்பிரிவுகள் வரவழைக்கப்பட்டன. ரெம்ப்லர் இரண்டு பிரதான திட்டங்களை வகுத்தார். ஒரு திட்டத்தின்படி, காட்டுக்குள் தேடுதல் வேட்டைகளை அதிகரித்தல், காட்டுக்குள் கொம்யூனிஸ்டுகள் தங்கியுள்ள பிரதான இடங்களில் விமானம் மூலம் குண்டு போடுதல் போன்ற நடவடிக்கைகள்.

மற்றைய திட்டம் கொயூனிஸ்டுகளின் செல்வாக்கு மிக்க பிரதேசங்களைக் "கறுப்புப் பிரதேசம்" (Black Area) எனப் பிரகடனப்படுத்தி, அப் பிரதேசத்தைச் சுற்றி வளைத்து இராணுவக் காவலிட்டு அப்பிரதேசத்துள் தற்காலிக இராணுவ முகாம்களை அமைத்துக் கொம்யூனிஸ்டுகளையும், கொம்யூனிச ஆதரவாளர்களையும் கண்டுபிடித்துத் தண்டித்தல் என்பதாகும். இவ்வாறு கறுப்புப் பிரதேசம் எனப் பிரகடனப் படுத்தப்பட்ட பிரதேசங்களுக்கான உணவு விநியோகம் கட்டுப் படுத்தப் பட்டது வீடு வீடாகத் தேடுதல் வேட்டைகள் இடம் பெற்றன. ஒருநேர உணவுக்காகக் கூட கொம்யூனிஸ்டுகளைக் காட்டிக் கொடுக்கும் நிலையை உருவாக்குதல், கொம்யூனிஸம் என்பது ஓர் பயங்கரமான பூதம் என்றும், அதற்கு மக்களை ஆதரவளிக்க வேண்டாமென்றும், கொம்யூனிசமென்றால் மக்களைத் துப்பாக்கி முனையில் நடாத்தும் ஓர் முறைமை என்றும், கொம்யூனிஸத்தின்கீழ் குடும்ப உறவுகளைக்கூட அவர்கள் நிலவ விடமாட்டார்கள் என்றும் அது ஓர் கொடுமையான ஆட்சியென்றும் பலவாறுகப் பிரச்சாரங்கள் செய்யப்பட்டன. கொம்யூனிச ஆதரவாளர்கள்கூட கறுப்புப் பிரதேசத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இவ்வாறு இராணுவம் ஓர் குறிப்பிட்ட இடத்திற் தரித்திருந்து கடும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட போது, இந்த இராணுவத்தை இவ்விடங்களில் வைத்துத் தாக்கும் சக்தி கொம்யூனிஸ்டுகளிடம் இருக்கவில்லை.

இவ்வாறு குறித்த கறுப்புப் பிரதேசம் கொமயூனிஸ்டுகள் தோற்கடிக்கப் பட்டதும், இப் பிரதேசங்களை "வைற் ஏரியா" எனப் பிரகடனப் படுத்தி படிப்படியாக உணவு விநியோகத்தை அப் பிரதேசங்களுக்குச் சீராக்கியது. 'பிரிக்ஸ்'இன் புதிய குடியமர்த்தற் திட்டமும், 'ரெம்ப்லர்'இன் 'கறுப்புப் பிரதேச'த் திட்டமும் வரலாற்றில் மகா கொடுமையானவை. 'கறுப்புப் பிரதேச'த் திட்டத்தின்கீழ் பல கொம்யூனிஸ்டுகள் சரண் அடைந்தார்கள். காட்டுள் இருந்த பல கெரில்லாப் பிரிவுகளும் விரக்தி நிலையில் சரணடைந்தன. மேலும் பல கெரில்லாக்கள் உயிரோடு கைது செய்யப்பட்டுமிருந்தார்கள்.

இவ்வாறு சரணடையும் கொம்யூனிஸ்டுகளுக்குப் புனர் வாழ்வு அளிக்கப்படுமென உறுதியளிக்கப் பட்டது. இவ்வாறு இவர்கள் மேற்கொள்ளும் புனர்வாழ்வுத் திட்டத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்று, எதிர் காலத்தில் கூடப் போராட்டத்தில் ஈடுபட முடியாதவாறு கொம்யூனிஸ்டுகளின் ஆன்ம உணர்வை அழித்து விடுவது; கைது செய்யப்பட்ட, சரணடைந்த கொம்யூனிஸ்டுக

இப்போது இவன் இங்குள்ள கெஸ்டாபோ தடியனின் கையிலுள்ள சாட்டையைக் கண்டு நடுநடுங்கி, முகம் வெளுத்து, தன் பல்லைக் காப்பாற்றிக் கொள்ளுவதற்காக எங்கள் எல்லோரையும் காட்டிக் கொடுத்துவிட்டான். சில அடி உதைகளிலிருந்து தப்பும் பொருட்டு இவனுடைய துணிச்சலும் கொள்கைப் பிடிப்பும் தூள் தூளாகச் சிதறிவிட்டன என்றால், அவை எவ்வளவு போலியாக இருந்திருக்கின்றன. ஒரே கருத்துக்களையுடைய தோழர்கள் தன்னைச் சுற்றியிருக்கும்போது — இவன் வலுவுள்ளவனாக இருந்தான். இந்தத் தோழர்களைப்பற்றி நினைத்தபோது இவன் பலசாலியாக இருந்தான். ஆனால், இவன் தனிமைப்படுத்தப் பட்டபோது, துன்புறுத்தும் எதிரிகளிடம் மாட்டிக் கொண்டபோது தன் பலம் முழுவதையும் அடியோடு இழந்துவிட்டான். இவன் எல்லாவற்றையும் ஏன் இழந்துவிட்டானென்றால், தன்னைப்பற்றி மட்டுமே இவன் சிந்திக்க ஆரம்பித்தான். தன் தோலைக் காப்பாற்றிக் கொள்வதற்காகத் தன் தோழர்களைப் பலியிட்டான். தன்னுடைய அறையிலே அவர்கள் கண்டெடுத்தவற்றின் மர்மங்களை அவர்களுக்கு விளக்குவதைக் காட்டிலும், சாவதே மேல்என்பதை இவன் மறந்தான். அவர்களுக்கு இவன் பெயர்களைச் சொன்னான். விலாசங்களைக் கொடுத்தான்.

— தூ. மே. குறிப்பு-57

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளுக்குச் சிறைச்சாலையில் விபச்சாரிகள் விநியோகம் செய்யப்பட்டனர். இவ்வாறு எல்லாவிதமான கோணத்திலும் கொம்யூனிஸத்திற்கு எதிரான போராட்டத்தை அடக்குவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அரசாங்கம் கொம்யூனிஸத்திற்கு எதிராக மக்கள் மத்தியில் மிகப் பெருமளவில் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தது.

1955-ம் ஆண்டு போராட்டத்தைக் கைவிடுமாறு சின்—பெங்கிற்கு அரசாங்கம் வேண்டுகோள் விடுத்தது. சின்-பெங் உடன் பேச்சு வார்த்தைகள் இடம்பெற்றன. எந்த நிலையிலும் தானும் தனது வீரர்களும் சரணடைய மாட்டோமெனக்கூறிப் போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபட்டார்.

### தோல்விக்கான காரணங்கள் :

எம். சி. பி.யின் தோல்விக்குக் காரணம், எம். சி. பி. மலேசியாவின். மொத்த சனத்தொகையில் 35 வீதத்தினரான சீனர் ஆகிய சிறுபான்மையினத் த மத்தியில் பலமுற்றிருந்ததே தவிர முழு மலேசியாவிலும் பலமுற்றிருக்கவில்லை. பெரும்பான்மையினர் உட்பட ஓர் முழு நாட்டையும் தமது ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வருவதற்கு சிறுபான்மை இனத்தின் மத்தியிலிருந்துமட்டும் எழும் போராட்டம் வெற்றியளிப்பது இயல்பாகவே சாத்தியமற்றதாகும்.

ஜப்பானியர்களுக்கு எதிராக 1941-45வரை கொம்யூனிஸ்டுக்கள் நடாத்திய அதே போராட்ட வடிவத்தையே திரும்பவும் இப் போராட்டத்திலும் பயன்படுத்தினார்கள். 1941-45 காலப் பகுதியில் நிலவிய சர்வதேசச் சூழ்நிலையும், உள்நாட்டுச் சூழ்நிலையும் வேறு. தற்போது (1948-57) காலத்தில் நிலவிய சர்வதேச உள்நாட்டுச் சூழ்நிலை வேறு. ஜப்பானியருக்கெதிரான யுத்தத்தில் தாக்குதல் நடவடிக்கைகளே முக்கியம் பெற்றன. ஏதாவது ஒரு பிரதேசத்தையாவது கைப்பபற்றுவது என்பதைவிட ஜப்பானியரைத் தாக்குவது என்பதுதான் அப்போது முதன்மையாக இருந்தது. அதுதான் அப்போது சாத்தியமும்கூட. ஆனால் இப்போது உள்ள அரசாங்கத்தை வீழ்த்தி ஆட்சியைக் கைப்பற்றுவது என்ற நேரடி நம்பிக்கையோடுபோராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது எதிர்ப்பைக் காட்டுதல் மட்டும்தான் சாத்தியம் என்ற நிலையில் நடாத்தப்பட்ட போராட்டத்திற்கும், இப்போது ஆட்சியைக் கைப்பற்றுவது என்ற உறுதியுடன் ஆரம்பிக்கப்பட்ட போராட்டத்திற்கும் இடையில் வேறுபாடுண்டு. எனவே, 1948-57 காலப்பகுதிப் போராட்டமும் ஜப்பானியருக்கு எதிரான போராட்டம் மாதிரித் தாக்குதல் போராட்டமாகத்தான் பெருமளவு இடம் பெற்றதே தவிர, ஒவ்வொரு பகுதி பகுதியாகவோ அல்லது ஏதோ ஒரு வகையிலோ சில பிரதேசங்களிலாவது தமது ஆட்சியை ஸ்தாபித்தல் அல்லது மாற்றுவழிகள் என்ற வகையில் போராட்டம் நிகழவில்லை.

ஜப்பானியருக்கு எதிரான போராட்டத்தில் நேசநாடுகளிடமிருந்து கொம்யூனிஸக் கெரில்லாக்களுக்குப் போதியளவு உதவிகள் கிடைத்து வந்தன. ஆனால், தற்போதைய போராட்டத்தில் நிலைமை அவ்வாறில்லை. கொம்யூனிஸ்டுகளுக்குப் பெருமளவிற்கு வெளிநாட்டுத் தொடர்புகளே இல்லாமல் போய்விட்டன. ஆனால் அரசாங்கத்திற்குப் போதுமான அளவு பொதுநலவாய நாடுகளிடமிருந்து புதிதாக இராணுவம் வந்திறங்கியது. இரண்டாம் உலக யுத்தம் முடிவடைந்திருந்த படியால், வேறு நாடுகளிலிருந்து பிரித்தானிய இராணுவ உதவி பெறுவது இலகுவாய் இருந்தது.

அடுத்து மலேசியாவின் அயல் நாடுகளாகிய இந்தோனேசியா, தாய்லாந்து ஆகியவை அரசாங்கத்திற்கு நேரடியாக ஆதரவளித்தன. அயல் நாடுகள் அரசாங்கத்திற்கு ஆதரவளித்தல் என்பது எப்போதும் ஓர் போராட்டத்தைப் பொறுத்து, போராளிகள் பக்கம் பெருமளவு பாதகமான சூழ்நிலையைக் கொண்டிருக்கும். இங்கு கொம்யூனிஸ்டுக்களின் போராட்டம் நிகழ்ந்துகொண்டிருந்த இதே காலகட்டத்தில் இந்தோனேசியாவில் 1948-50 ஆண்டுகளுக்குமிடையே 50 ஆயிரத்திற்கும், ஒரு இலட்சத்திற்கும் இடைப்பட்ட கொம்யூனிஸ்டுக்கள் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்து அரசாங்கம் எடுத்த எதிர் நடவடிக்கைகளும், அரசாங்கத்திற்கிருந்த வாய்ப்புகளுமாகும் போராட்டத்தை விடப் போராட்டத்திற்கு எதிராக அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் பல மடங்கு பெரியதாய் இருந்தது.

மேலும் எம். சி. பி.யின் பொதுச்செயலாளராகவிருந்த 'ரொய் ராக்' என்பவர் மேற்கொண்ட துரோகத்தனமும், அதனால் கொம்யூனிச உறுப்பினர்கள் விரக்தியுற்றிருந்த கட்டத்தில் இப் போராட்டத்தை ஆரம்பித்தமையுமாகும். இது எவ்வளவுதூரம் ஓர் காரணமாய் இருந்தது என்பதைச் சொல்ல முடியவில்லை. ஆனால் இதனையும் கருத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும்.

---

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தவரான குருநகர்இளைஞர் அமலதாஸ் இராணுவத்தினால் கைது செய்யப்பட்ட அடுத்தநாள் பிணமாகக் கிடந்தார். இவரது உடலில் 110 காயங்கள் இருந்தன. தலையின் பின்புறம் தீக்காயம் ஒன்றுள்ளது. உடம்பு முழுவதும் சிகரட்டுகளால் சுடப்பட்டிருந்தது. துப்பாக்கியில் பொருத்திய கத்தியால் ஏற்பட்ட காயங்கள் பல காணப்பட்டன. முழங்காலுக்குக்கீழே இரு கால்களும் அடித்து நொருக்கப் பட்டிருந்தன. ஆணுறுப்பு சிதைக்கப்பட்டிருந்தது. இழுத்துச் செல்லப்பட்டதால் பின்புறத் தசைகள் கிழிந்திருந்தன. கை, கால், நகங்களில், கண்களில் ஊசி ஏற்றப்பட்டிருந்தது. நெஞ்சில் இருந்த பாரியதுளை துளையிடும் கருவியால் ஏற்படுத்தப் பட்டிருக்கலாம்.

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கண்ணீரிலிருந்து களத்திற்கு

தேசிய உணர்வானது ஒரு வலிவு மிக்க புரட்சிகரச் சக்தியாக, எமது மண்ணில் உருப் பெற்றுக் கொண்டு வருகின்ற இவ் வேளையில், தேசாபிமான உணர்வுடன், தேசிய விடுதலைப் போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொள்ள முன்வரும் தமிழ்ப் பெண்கள் தேசிய இன ஒடுக்குமுறையால் ஒரு புறமும், சமூகக் கட்டுப்பாடுகளால் மறுபுறமுமாக பல்வேறு பரிமாணங்களில் நசுக்கப்பட்டும், சுரண்டப்பட்டும் வருவது வெளிப்படையான, மறுக்க முடியாத ஓர் கசப்பான உண்மையாகும்.

ஒரு புரட்சிகர தேசிய விடுதலைப் போராட்டத்திற்கும் பழமை நிறைந்த சமுதாயத்தின் பிற்போக்கான கட்டுப்பாடுகளிற்கும் மத்தியில் இருக்கும் தமிழ்ப் பெண்கள் புரட்சியில் காலடி எடுத்து வைப்பதற்கு முன்னராகவே, ஒரு யுத்தத்தை நிகழ்த்த வேண்டி உள்ளது. இன ஒடுக்குமுறையின் கீழ், ஒரேயளவில் பாதிப்பிற்குள்ளாகும் வேளையில், ஒரேயளவு சமத்துவத்துடன் போராட்டத்தில் இணைத்துக் கொள்ளப் படுவதற்குப் பதிலாக, இப் போராட்டங்களில் பங்கு கொள்வதற்குப் பெண்கள் போராடியே தமது வழியைத் தெரிந்தெடுக்க வேண்டிய நிலையிலுள்ளார்கள். பரம்பரை, பரம்பரையாக எமது தமிழ்ச் சமூகம் கைவிடாது அனுசரித்து வரும் மரபு முறைகளில், பழக்க வழக்கங்களில் அநீதியும், அடக்குமுறையும் நிறைந்து போய்க் கிடந்தும், இவற்றில் திளைத்துக் கிடக்கும் தமிழ்ச் சமூகம், இம் மரபுகளையும் பழக்க வழக்கங்களையும் எளிதில் விட்டுக் கொடுக்கவும். தயாராக இல்லாத பரிதாப நிலை வேதனைக்குரியது. இத்தகைய சமுதாய அமைப்பின் மரபுகளுக்கும், பழக்க வழக்கங்களுக்கும் சவால் விடும், எதிர்த்து நிற்கும் எந்த வொரு தமிழ்ப் பெண்ணும், அவள் அப்படிச் செயல்படுவது நியாய பூர்வமான இலட்சியத்திற்காக இருந்தாலும் கூட ஆரம்பத்திலே எமது சமுதாயத்தின் பதிலானது, அவளுக்கு எதிர்ப்பாக, அவளுக்குரிய கண்டன விமர்சனமாக, அந்தப் பெண்ணைச் சமுதாயத்தில் இருந்து அந்நியப் படுத்துவதாக அவளைச் சந்தேகிப்பதாக மட்டுமே அமைந்து விடுகிறது. புரட்சிகர விடுதலைப் போராளிகளாக, விளங்கும் ஆண்களின் மனோ நிலை கூட இத்தகையதாகவே தான் இருக்கின்றது. கியூபாவின் புரட்சித் தலைவர் காஸ்ட்ரோ கூட போராட்டங்களில் பெண்களின் உண்மையான உள்ளார்ந்த ஆற்றல் பற்றி தன்னுள்ளேயும் தனது சக ஆண் தோழர்களிடையேயும், நம்பிக்கையின்மையும், ஆண் மேலாதிக்க உணர்வும் தான் இருந்தனஎன்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார். அவர் கூறுகையில். ஒருவேளை உள்ளத்தினுள்ளே, ஆழ் மனதில் ஒரு தப்பெண்ணம், குறைத்து மதிப்பிடுதல், இருக்கின்ற படியால்தான்இப்படியெல்லாம் சொல்கிறேமோ என்று தெரியவில்லை என்கிறார். ஒரு புரட்சிகரப் போராட்டத்தில் அர்ப்பணிக்க முன்வரும் எந்த வொரு புரட்சிப் பெண்ணும், ஆண் தோழர்களிடமிருந்து பால் வேறுபாட்டுத் தன்மையுடன் தம்மைப் பிரித்துப் பார்ப்பது கிடையாது. ஆனால் சமுதாயக் கட்டுப் பாடுகள் ஒரு புறமும், ஆணினத்தின் தப்பெண்ணங்கள் மறுபுறமுமாகத் திணித்துவிடும் பிரச்சனைகளை எல்லாம் போராட்டப்பாதையிலேதனித்து நின்று எதிர் கொள்ள வேண்டிய வளாகிறாள். இப்படியான சூழ்நிலைகள், பெண் போராளிகள் மத்தியில் பெண்மை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்கிறது. 'பெண்' என்ற பாலின் அடிப்படையில் ஒடுக்கப்படுகிறோம் என்ற உண்மையை உணர்த்தியிருக்கிறது

புரட்சிப் போரில் குதிக்க விழையும் தமிழ்ப் பெண்களுக்குக் குடும்பச் சூழ்நிலையே ஒரு போர்க்களம் தான் தமது மகளின் தன் மானத்தைக், கௌரவத்தைக் காப்பாற்றுவதாக, எண்ணிக் கொண்டு, பெற்றோர் இடும் கட்டளை கட்டும் எழுப்பும் விதண்டாவாதமான கேள்விகளிற்கும் அவர்கள் பதிலளிக்க வேண்டிய நிலையிலுள்ளார்கள். இது பற்றிப் பாலஸ்தீனிய மாதர் பொது மன்றத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணின் அனுபவக் கூற்றுப் பின்வருமாறு:—

''முதலில் தேசியப் போராட்டம் குறித்து குடும்பத்துடன் கலந்துரையாடல் நடத்துமாறு நாம் எமது பெண் தோழர்களிடம், கேட்டுக் கொள்வோம். பெற்றோர்கள், தங்கள் பெண்களைப் பற்றி அயலவரும், மற்றவரும் கதை கட்டுவதை, அதாவது மாப்பிள்ளை பிடிப்பதற்குத் தான் அவள் முகாமிற்குச் செல்கிறாள் அல்லது பிந்தி வருகிறாள் என்றெல்லாம் கூறுவதை விரும்புவதில்லை. குடும்பஅரங்கில் போராட்டங்களை நடத்திய எம் போன்றோரே, சிறந்த தொண்டர்களாக முடியும். உண்மையில் போராட்டங்களில்மிகவும் கடினமான போராட்டம் இது. பெண்கள் தங்கள் உரிமைகளை நிலை நாட்டப் போராட வேண்டும்என்பதைநாம்வலியுறுத்துவதுண்டு. ஏனெனில் அவர்களது பங்களிப்பானது ஒரு நாள் அவர்களது பெற்றோராலும், சமுதாயத்தாலும் கௌரவிக்கப் படும்''



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதே போல மணம் புரிந்த பெண்கள் போராட்டத்தில் பங்கு கொள்ள விழையும் போது, புரட்சிகரக் கணவர்களும் போர்க் கொடியை உயர்த்துகிறார்கள். தமது வேலை முடிந்து தாம் வீடு திரும்புகையில், உணவு தயாரிக்கப் பட்டு இருக்க வேண்டும் என எதிர் பார்க்கிறார்கள். புரட்சியில் ஈடுபட்டிருந்தாலும் கூட, மாற்றங்களினால் தமது வாழ்க்கை பாதிக்கப்படுவதை அவர்கள் விரும்புவதில்லை. மேலும் ஒரு பெண்ணானவள் ஒரு புரட்சிப் போராளியாகவும், அதேவேளை தன் மீது தங்கியிருக்கும் குழந்தைகளுக்கும் பொறுப்பான தாயாகவும் இருக்கும் பொழுது, ஏற்படும் முரண்பாடு பெண்கள் எதிர் கொள்ள வேண்டிய மிகவும் ஓர் இக் கட்டான நிலையாகும். எத்தனை குழந்தைகள் இருப்பினும், போராட்டத்தில் பங்கு கொள்ள விரும்பும் தாயின் அபிலாஷை நியாயபூர்வமானதே. இயக்க அமைப்பு ஒன்றில் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி தன்னை முடிந்தளவு அர்ப்பணிக்க வேண்டியது அவள் கடமை. ஆனால், குழந்தைகளை வளர்த்து ஆளாக்குவதும் புரட்சியின் பொறுப்பே ஆகும். ஆயுதம் ஏந்துபவர்கள் தான் போராடுபவர்கள் என்பதல்ல.

விடுதலை இயக்கங்களின் இராணுவ, கெரில்லா பிரிவுகளில், சேர்ந்த பல பெண்களிற்கு ஆண் ஆதிக்கம் பாரம்பரியமாக பெண்களுக் கென்றே ஒதுக்கப்பட்ட வேலைகள், என்ற தப்பெண்ணமும் பெரும் பிரச்சினைகளை உருவாக்குவது உண்டு. நிக்கரகுவாவின் தலைநகரைக் கைப்பற்றிய இறுதித் தாக்குதலில் தலைமை தாங்கிய சன்டினிஸ்ட தேசிய விடுதலை முன்னணியைச் சேர்ந்த பெண் கெரில்லா வீராங்கனை ஒருவர் பின்வருமாறு கூறுகிறார்.

''சன்டினிஸ்டத் தோழர்களிடையே, ஆண் ஆதிக்கப் பிரச்சனை வெளிப்படையாக இருந்தது, பெண்கள் வீட்டு வேலைக்கு மட்டுமே தகுதி பெற்றவர்கள் என்ற எண்ணம், அவர்களிடையே நிலவியது. செய்திகள் தாங்கித் தூது செல்வதற்கு மேலாக எம்மால் எதுவுமே செய்ய இயலாது என அவர்கள் நினைத்தார்கள். இது பற்றி எல்லாம் விவாதிக்கப் பட்டது........... ஆனால் அதேவேளை, பெண்கள் பிரச்சினையில் புரட்சிகரப் பார்வை கொண்ட ஆண்களும் இருக்கத்தான் செய்தார்கள். எமது போராட்டமோ நீண்ட போராட்டமாக இருந்தது. விவாதங்கள் வாயிலாகவும், பெண் தோழியர் போர் அரங்கில் தமது திறமையை நிரூபித்துக் காட்டியதாலும் இப் போராட்டத்தில் நாம் வெற்றிபெற முடிந்தது''

'தேசிய சுதந்திரம்' என்ற உன்னத இலட்சியத்தின் பின்னால், பரந்துபட்ட மக்களை ஒரே அணியில் ஒன்று திரட்டுவது தான் ஒரு தேசிய விடுதலை இயக்கத்தின் அடிப்படை நோக்குகளில் ஒன்றாகும். எமது தேசியத்தின் பரந்துபட்ட மக்கள் திரளில் 50% ஆனோர் பெண்களாக இருக்கும் பட்சத்தில் பெண்களின் பங்களிப்பானது எமது ஆயுதப் போராட்டத்தின் சகல முனைகளிலும் இன்றியமையாதது. எந்தவொரு தேசிய அமைப்பிலும் பெண்கள் உள்ளார்ந்த புரட்சிகர அரசியல் சக்தியாக விளங்குகிறார்கள். எந்த அளவிற்குப் பெண்கள் பங்கு பற்றுகிறார்கள் என்பதில் தான், ஒரு போராட்டத்தின் வெற்றி தங்கி இருக்கின்ற போதிலும், பெண்களின் பங்களிப்புத்தான் ஒரு புரட்சிகரப் போராட்டத்தின் ஆழத்தையும் விசாலத்தையும் எடுத்துக் காட்டும். ஆயுதப் போராட்டம் உட்படச் சகல நிலைகளிலும் எமது பெண்களின் பங்களிப்பானது தமிழீழப் பெண்களின் மகத்தான புரட்சிகரச் சக்தியை நிரூபித்துக் காட்டவேண்டும். தம்மிடமுள்ள கொள்கை உறுதி, வீராதீரம், நிர்வாகத் திறன், துன்பங்களைத் தாங்கும் மனோதிடம் எனும் பண்புகள் உண்டு என்பதை நிரூபிக்க வேண்டும். புரட்சியில் பங்கு கொள்வோரின் வாழ்க்கையானது புரட்சிகரமான மாற்றங்களைக் காணும். புரட்சிகரச் சூழ் நிலையானது, பெண்களின் வாழ்க்கையில் பெண்கள் பற்றிய பழமைவாதப் பார் பார்வையில் ஒரு புரட்சிகரமான மாற்றத்தைக் கொண்டு வரத்தான் செய்கிறது.

கியூப
புரட்சிகர
யுத்தம்

ஒரு விடுதலைப் போராட்ட அனுபவம்

ஏர்னெஸ்ரோ சே-குவேரா

யாழ் பல்கலைக்கழக
மறுமலர்ச்சிக் கழகத்தின்
மற்றுமோர் வெளியீடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# VINYL'S INSTITUTES

K. K. S. ROAD, CHUNNAKAM.

**85, 86** (A/L) கலை வர்த்தக விஞ்ஞான வகுப்புகள் நடைபெறுகின்றன.

**6,7,8,9,10ம்- SPOKEN ENGLISH** வகுப்புகளும் நடைபெறுகின்றன.

யாழ். முன்னணி ஆசிரியர்களால் போதிக்கப் படுகின்றன.

விபரங்களுக்கு
நிர்வாகி.

# KEEN'S INSTITUTES

**NEAR JUNCTION, TELLIPALAI.**

85, 86 (A/L) கலை வர்த்தக விஞ்ஞான வகுப்புகளும்

**SPOKEN ENGLISH**

யாழ், முன்னணி பட்டதாரி ஆசிரியர்களால் போதிக்கப்படுகின்றன.

விபரங்களுக்கு
நிர்வாகி.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# SHOBA

**உங்களுக்கு வசதியாக**

சுன்னாகத்தில் ஒரு சுப்பர் மார்க்கட்
தேவையான எல்லாப் பொருட்களையும் ஒரே இடத்தில் பெற,
சுன்னாகத்தையும் அதனைச் சுற்றிய கிராமங்களையும் சேர்ந்த மக்களுக்கு ஒரு
— வரப்பிரசாதம்

**○ மலிவான விலைகள்　　○ தரமான பொருட்கள்**

யாழ். நகருக்கு அலையவேண்டிய தேவை இனி உங்களுக்கு இல்லை.

- ★ GAS COOKER
- ★ ELEPHANT HOUSE PRODUCTS
- ★ L. P. GAS
- ★ ICE CREAM
- ★ ICE CHOCK
- ★ SAUSAGES
- ★ தகரத்தில் அடைக்கப்பட்ட உணவுப் பொருட்கள்.
- ★ பால்வகைகள்
- ★ பழச்சாறுகள்
- ★ பிஸ்கட்
- ★ கேக்வகைகள்
- ★ GAS COOKER PEPAIRS
- ★ BACON
- ★ BROILERS
- ★ CURRY CHICKEN
- ★ PORK
- ★ இனிப்பு
- ★ சோப் வகைகள்
- ★ அழகுசாதனங்கள்
- ★ கறிசரக்கு
- ★ மற்றும் சமையலுக்கு வேண்டிய சகல பொருட்களும்.

எல்லாவற்றையும் எங்களிடமே தெரிவு செய்துகொள்ளலாம். மேலும், உங்கள் வீடுகளில் நடைபெறும் திருமண வைபவங்கள், பிறந்தநாள் கொண்டாட்டங்களுக்குத் தேவையான

**▶ கேக்　▶ பற்றிஸ்　▶ கட்லற்　▶ மிக்ஸர்**

மற்றும் உணவுப் பொருட்களும் ஓடருக்குச் செய்து கொடுக்கப்படும்.

- ★ VIDEO CASSETTE புதிய, பழைய படங்கள் வாடகைக்குக் கொடுக்கப்படும்.
- ★ COOL BAR : சகல வசதிகளுடனும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- ★ SHOBA COOL BAR : சகல குளிர்பானங்கள், ஐஸ்கிறீம், மற்றும் சிற்றுண்டி வகைகளை அமைதியான மகிழ்ச்சியான சூழலில் அருந்திச் செல்ல வசதி செய்யப்பட்டுள்ளது. ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்.
- ★ சுன்னாகம் சந்தியில் இருந்து அரை மைல் தூரத்தில் K.K.S. பக்கமாக அமைந்துள்ளது.
- ★ வாகனங்கள் நிறுத்தும் இடவசதியும் உண்டு.

**SHOBA AGENCIES LTD.**　194 K.K.S. Road, Chunnakam.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்